# பரஞ்சோதி 72

## 1930 / 2002



## யா/கோண்டாவில்
## பரஞ்சோதி வித்தியாலயம்

J/PARANCHSOTHY VID
KONDAVIL

# பாடசாலைக்கீதம்

கோடி பல்லாண்டுகள் வாழி எங்கள்
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாதா

ஏடிலக்கும் கல்வி ஏழிசை கலைகளும்
நாடிலங்கும் சேவை நற்பணியாற்றியே
(கோடி ........)

கல்வி கலைகள் தந்து கவினுற வளர்த்திடும்
வல்லமை ஊட்டி எமை வாழ்விக்க வைத்திடும்

நல்ல பரஞ்சோதி ஞானத்தை ஏற்றிடும்
பல்வித அறிவூட்டி பாலிக்கும் அன்னையே
(கோடி..........)

தெந்தமிழ் பண்பினை செம்மையுற ஊட்டி
பைந்தமிழ் பண்பாட்டை பாரினிலே காட்டி
நற்தமிழ் கலைகள் நயமுறவே கூட்டி
தந்திடும் பரஞ்சோதி வித்தியாலயமாதா
(கோடி........)

எழுத்தறிவித்தவன் இறையவன் என்றே
வைத்தே வாழ்த்துவோம் அதிபர் ஆசிரியரை

பழுத்த செந்தமிழின் பழச்சுவையன்றோ
பத்தித் தேன் கலந்தே நித்தமும் ஊட்டும் அன்னை
(கோடி........)

# பரஞ்சோதி

## THE PARANCHSOTHY

**1930 – 72 – 2002**

## 72 ம் ஆண்டு நிறைவு மலர்

**யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்**
**கோண்டாவில்**

# பரஞ்சோதி

## THE PARANCHSOTHY

**மலர்-01**

## மலர்க்குழு

**காப்பாளர்**

திரு. எஸ். சண்முககுமார்
அதிபர்

**துணைக் காப்பாளர்**

திரு. த. சொக்கலிங்கம்
உப அதிபர்

**பிரதம ஆசிரியர்**

திரு. பா. பாலமுரளி

**துணை ஆசிரியர்**

திரு. சி. கணேசமூர்த்தி

**ஆலோசனைக் குழு**

திரு. செ. கிருஸ்ணானந்தன்
திரு. த. சிவகுமாரன்
திரு. சி. செந்தில்குமரன்
திருமதி. ப. சந்தானலக்சுமி
திருமதி. சா. கனகநாயகம்
திருமதி. ம. அருணாசலம்
திருமதி. சு. அனுஷா
செல்வி. ஐ. பகீரதி

**அட்டைப்பட வடிவமைப்பும், அச்சமைப்பும்**

Mouse (PVT) Ltd
Inuvil

**அச்சுப்பதிப்பு**

சூரியா ஓ.:ப்செற் அச்சகம்
கந்தர்மடம்

**புகைப்படம்**


குகன் போட்டோ
கோண்டாவில்

**கணணித் தொழில்நுட்பம்**

குணா



# சமர்ப்பணம்



இப்பாடசாலையின் ஸ்தாபகர்

**அமரர் – சின்னத்தம்பி கார்த்திகேசு**

அவர்களுக்கும்
இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு
அரும்பணிஆற்றிய அனைத்து அன்பு
நெஞ்சங்களுக்கும் இந் நூல்
சமர்ப்பணம்

# யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செ. மகாலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

**கோ**ண்டாவில் வாழ் மக்களின் கல்விப் பசியைத் தீர்க்கும் அன்னசத்திரமென திகழும் பரஞ்சோதி வித்தியாலயத்தின் "பரஞ்சோதி" மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிராமியச் சூழலிலே பல்வேறு காலங்களில் நிலவிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து ஆற்றல் மிக்க அதிபர்கள் பலரால் காலாகாலம் கட்டி எழுப்பப்பட்ட கல்விக் கூடம் இதுவாகும். ஆரம்பக் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்டு இன்று படிப்படியாக முன்னேறி தரம் ஒன்பது வரை வளர்ந்து இடைநிலைக்கல்வி வரை ஊட்டுகின்ற ஒரு கல்விக் கூடமாகத் திகழ்கின்றது.

தொடர்ந்தும் நன் மாணாக்கரை உருவாக்கி சமுதாயத்திற்கு சேவையாற்றும் நிலையமாக விளங்க இறைவன் அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

**திருமதி. செ. மகாலிங்கம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
யாழ்ப்பாணம்.

# நல்லூர்கோட்டக் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



**பா**டசாலையொன்றின் கல்விச் செயற்பாட்டையும் கற்றலுடன்கூடிய கலாசாரப் பண்பாடுகளையும் மாணவ சமூாதயத்தின் ஆளுமை விருத்தியையும் வெளிக் கொணருகின்ற சாதனங்களுள் நூல்களும், சஞ்சிகைகளும் பிரதான இடத்தை வகிக்கின்றன.

அவ்வகையில் யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72ஆவது நிறைவையொட்டி வெளிவரும் "பரஞ்சோதி" என்னும் மலரின் மலர்வு மகிழ்வினைத் தருவதுடன் இப்பாடசாலையின் சிறப்பினையும் வெளிப்படுத்துகின்றது.

தரமான பல படைப்பக்களை தன்னகத்தே கொண்டு வருகின்ற இச் சஞ்சிகையானது தொடர்ந்தும் வெளிவருவதுடன் இப்பாடசாலையின் பெயரும் புகழும் தொடர்ந்தும் நிலைத்து இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடையவேண்டுமென இறையாசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. ச. காங்கேயன்,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர் கோட்டம்,
யாழ் கல்வி வலயம்.

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய அருளாசிச் செய்தி

அன்பு நெஞ்சத்தீர்,

**கோ**ண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் தனது எழுபத்தியிரண்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதை நிதர்சனமாக்கும் பொருட்டு "பரஞ்சோதி" என்னும் மலர் வெளிவருவதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். கோண்டாவில் பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கு எழுப்தியிரண்டு வருடங்கள் இப்பாடசாலை பணியாற்றியமை எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மனிதனை மனித நேயத்தோடு வாழ வழிகாட்டுவது கல்வி. கல்வி இல்லாதவனுடைய வாழ்வு இருட்டறையில் நிற்பது போன்றது. இதனையே வள்ளுவரும்

"கண்ணுடையவர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

இதற்காகவே பாடசாலைகள் அனைத்தும் கல்வியை முறையாக வழங்குவதற்கு செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. இதனையே அப்பாடசாலையில் எழுபத்தியிரண்டு ஆண்டுகள் சேவையாற்றி தொடர்ந்தும் சேவையாற்ற இறையாசியை வேண்டுகின்றோம். இன்று வெளியாகும் "பரஞ்சோதி" என்னும் மலர் பல தகவல்களை தாங்கி வருவதனால் எல்லோருக்கும் பலன் உள்ளதாக அமையட்டும். இம் மலரை வெளியிடும் ஆசிரியரை வாழ்த்துகின்றோம். இப்பாடசாலை கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஏனைய துறைகளிலும் பல வளர்ச்சியைக் கண்டு கோண்டாவில் வாழ் மக்களுக்கு நிறைவான கல்விச் சேவையாற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக. பாடசாலை வளர்ச்சிக்கு பணியாற்றிக்கொண்டு இருக்கும் அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம். வாழ்க பாடசாலை, வளர்க பாடசாலையின் பணிகள்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

30.09.2002

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி



**கோண்**டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் 72ஆவது ஆண்டை நிறைவு செய்யும் முகமாக "பரஞ்சோதி" என்னும் மலரை வெளியிட முன்வந்துள்ளமையையிட்டு எனது மகிழ்ச்சியை ஆசிச் செய்தியாக தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்.

கலைத்திட்டச் செயற்பாடுகளிலும், இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் கிராமப்புறப் பாடசாலைகள் தமக்கென ஒரு பெயரைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயமும் கடந்த 72 வருடங்களாக பல மாணவர்களை உருவாக்கி அவர்களின் வளர்ச்சிக்கு உதவிவந்துள்ளது.

இவ்வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் குழாம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் அரும் முயற்சியாக முதன் முதலாக வெளிவரும் "பரஞ்சோதி" என்னும் மலர் வரலாற்றுச் சிறப்புக்களையும், சாதனைகளையும், புத்தாக்கக் கட்டுரைகளையும் தாங்கி வருவது சிறப்புடையதாகுகின்றது.

மேலும் இத்தகைய முன்மாதிரி போல பல செயற்பாடுகளிலும் மேலோங்கி எம் இளைய தலைமுறைக்கும், நாட்டிற்கும், சிறந்த சேவையை இவ்வித்தியாலயம் வாரி வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
யாழப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி


දුරකථනය / தொலைபேசி / Telephone

දිසාපති / අතිරේක ලේකම්
அரசாங்க அதிபர் / மேலதிக செயலாளர் } 2235
Government Agent / Addl. Secretary

කාර්යාලය
அலுவலகம் } 2236
Office

ෆැක්ස්
பெக்ஸ் } 2355
Fax

4154

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය
எனது எண் }
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி }
Date


## ஆசிச்செய்தி

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் 72 ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் முகமாக பரஞ்சோதி என்னும் மலர் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களின் கல்வி, கற்றல் முயற்சிகளில் அதிக வளர்ச்சி அண்மைக்காலத்தில் கூடுதலாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் பரஞ்சோதி வித்தியாலயம் தனது கற்றல் முயற்சிகளிலும் பெயரைப் பொறிக்கும் வேளையில் இணைப்பாடவிதானச் செயற்பாடான மலர் வெளியீடும் நிகழ்வது பாடசாலையின் வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இம் மலர் வெளிவரும் போது எனது மனப்பூர்வமான ஆசியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்முயற்சியை முன்னின்று உழைத்த வித்தியாலயச் சமூகத்திற்கும் நன்றிகளைக் கூறுவதோடு வித்தியாலயம் மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு உயர இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

நன்றி.

14.10.2002

**செள . பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
யாழப்பாணம்.

# ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை



**நா**னூற்றைம்பது ஆண்டுகள் வரை நமது தேசம் அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனால் கிறிஸ்தவ சமயம் இங்கு பரவுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மிலேச்சர்களான அன்னியர்களது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் தோன்றினார் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள். இளமையில் உள்ளூரில் நல்லாசிரியர்களிடம் கல்வி பயின்றவரான நாவலர் பெருமான் அவர்கள் பேர்சிவல் பாடசாலையில் (கிறிஸ்தவ பாடசாலை) ஆங்கிலம் கற்கும் நோக்கமாகச் சேர்ந்தார். ஏழு ஆண்டுகள் மாணவர், ஏழு ஆண்டுகள் அங்கே அவர் தமிழ் ஆசிரியர்.

கிறிஸ்தவ சூழலில் 14 ஆண்டுகள் அவருக்கிருந்த தொடர்பு அவரது மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. "சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையிலேயே கற்ற வேண்டும்" என்று பிரசங்கம் செய்தார், எழுதினார். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் தாமே ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்து சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயரும் சூட்டினார். யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட சைவப் பாடசாலை இதுவாகும். காலம்1848ஆம் ஆண்டு.

உலகமெங்கணும் பரந்து பட்டு வாழும் சைவசமயத்தவர்களின் இருதயஸ்தானமாக விளங்குவது சிதம்பரம் கோயில் என்னும் தனிப்பெருமைக்குரிய சிதம்பரம் தலத்திலும் நாவலர் அவர்கள் ஒரு சைவப் பாடசாலையை நிறுவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர் பெருமான் அவர்களைப் பின்பற்றிப் பல சங்கங்கள், சபைகள் சைவப் பாடசாலையை ஆரம்பிக்கும் பணியில் ஈடுபட்டன. தனிப்பட்டவர்களும் முயற்சிசெய்தனர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை ஆங்கிலப் பாடசாலைகளையும், தமிழ்ப் பாடசாலைகளையும் நிறுவியது. சைவ வித்தியா விருத்திச் சங்கமும் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளை ஊர்கள்தோறும் நிறுவியது. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தவர் சைவப் பெரியார் அப்புக்காத்து சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள். சேவையின் காரணமாக "நாவலருக்குப் பின் நமக்கோர் காவலர்" என்ற சிறப்பையும் பெற்றார்.

சைவவித்தியா விருத்திப் பாடசாலைகளில் ஒன்றுதான் கோண்டாவில் அன்னுங்கை பரஞ்சோதி வித்தியாலயம். குறித்த வித்தியாலயம் தோன்றுவதற்கு அடிநாதமாகத் திகழ்ந்தவர் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த மலாயன் பெஞ்சனியர் உயர் சைவத்திரு சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்கள். சிறப்பாக நிர்வகித்த பெருமை சைவவித்தியாவிரத்திச் சங்கத்திற்கு உரியதாகும். வளர்த்தெடுத்த பெருமை காலத்துக்குக் காலம் பரஞ்சோதி வித்தியாலயத்தில் பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்களையே சாரும்.

சுயம் பிரகாசமாக விளங்குகின்ற முழுமுதற் கடவுளையும் பரஞ்சோதி என்று அழைப்பார்கள். சுயம்பிரகாசம்- இயற்கை ஒளி. இயற்கையான நல்ல சூழலில் பரஞ்சோதி வித்தியாலயம் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். ஈழத்துச் சித்தர்களில் ஒருவர் இணுவில் தவத்திரு க.வடிவேற்சுவாமிகள் அவர்கள். புராண இதிகாசங்களை விரித்துச்செல்வதில் வல்லவர் இணுவில் சேதர்ச் சட்டம்பியார் அவர்கள். குறித்த இருவர் பெரியார்களும் பரஞ்சோதி வித்தியாலய வளர்ச்சிக்கு ஆரம்பத்தில் பெரிதும் உழைத்தவர்கள். அவர்களது பாதம் படிந்த புண்ணிய பூமியில் பரஞ்சோதி வித்தியாலயம் அமைந்திருப்பது தவவிசேடமே.

வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா என்பவற்றைக் கண்ட கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் வெகு வரைவில் பவளவிழாவினையும் காணவிருப்பது எல்லேருக்கும் உள்ளங்களிக்கும் செய்தியாகும்.

சமய, சமூக கல்வித் துறைகளில் தலைநிமிர்ந்து பிரகாசிக்கும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்டவர்கள் ஒன்று திரண்டு எடுக்கும் இப்பெருவிழா நூற்றாண்டு விழாவிற்கு கால்கோள் விழாவாக அமைய அருளும் வண்ணம் எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**உரும்பிராய்.** **ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்.**

உ

ஸ்ரீ கற்பகாம்பாள் துணை


"ஸாகித்ய ஸாகரம்", "ஆசுகவி", "ஸம்வாதீஸ்வரர்", "ஆருட்கலை வாரிதி", "ஸாகித்ய மாமணி", "மதுரகவி", "சிருஷ்டி ஞாயிறு", "அருட்கவிச் செம்மல்", "இயலிசை வாரிதி", "கவிமாமணி", "முத்தமிழ் வாரிதி", "ஸாகித்ய சிரோன்மணி", "முத்தமிழ் வித்தகர்", "ஞானக்கவிமணி", "கலாரத்னா", "கலாபூஷணம்", "மகாவித்துவான்"

# யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் M.A.

( அகில இலங்கை சமாதான நீதவான் )

முன்னாள் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் - பலாலி, அதிதி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அவர்கள் வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப்பா**



## பரஞ்சோதித் தீபம்

பரஞ்ஜோதி என மிளிரும் கோண்டாவிலூர்
புகழ்பூத்த கல்வியொடு கலைகள் நல்கும்
பரஞ்ஜோதி வித்தியாசாலை என்றும்
பல்லாண்டு பல்லாண்டு கல்விச் சேவை
சிரஞ்ஜோதி என ஞானதீபம் ஏற்றிச்
சிறார்களையே। கல்விமான் எனவளர்த்தே
கரஞ்ஜேதித் தீபமென வாழி! வாழி।
காசினியில் கலை கல்வி வளர்த்தே வாழி!

சுபம்.

**"மகாவித்துவான்"**
**யாழ்ப்பாணம் ந. வீரமணிஐயர்.**

# முன்னாள் அதிபர் திரு.சு. லோகதாசன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி



பரஞ்சோதி வித்தியாலயத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மலர் வெளியிடுவதையிட்டு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மலர் வெளியீட்டுக்கு முன்னர் ஸ்தாபகரை நினைவு கூர்ந்தமை சாலவும் பொருத்தமான செயலாகும். இப்பெரு முயற்சியானது வித்தியாலயத்தின் வளர்ச்சியினைச் சிந்திக்க பேருதவி புரியுமென நம்புகின்றேன்.

எனது அதிபர் சேவைக்காலத்தில் எனக்கு ஒத்தாசையாக உதவிய உபஅதிபர், ஆசிரியர்கள், பழய மாணவர்கள், அயலவர்கள் ஆகியோரை நன்றியுடன் நேசிக்கின்றேன்.

அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியால் இம்மலர் வெளியிடும் வேளையில் இவ்வித்தியாலயம் பெருவிருட்சமாக வளர்ந்து சேவையாற்ற வேண்டும் என ஆசியினை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்பன்

**திரு.சு. லோகதாசன்**

முன்னாள் அதிபர் - தரம் - 1



# இதழாசிரியரின் அகத்தில் இருந்து..........

கடந்த எழுபத்திரண்டு வருடங்களாக கல்விப் பணி ஆற்றிவரும் எமது பாடசாலையின் வரலாற்றையும் அதன் வளர்ச்சியினையும் வெளிப்படுத்தும் ஓர் சஞ்சிகையாக "பரஞ்சோதி" மலரை முதன் முதலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இச் சஞ்சிகை பாடசாலையின் பல்வேறு சாதனைகளையும் செயற்பாடுகளையும் எடுத்தியம்பும் வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது. இதனால் இச் சஞ்சிகை காலத்தின் கண்ணாடியாகவும், இப் பாடசாலையின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்ற உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் அமையும் எனபது எமது நம்பிக்கை ஆகும்.

1930ம் ஆண்டு திருவாளர் சின்னத்தம்பி - கார்த்திகேசு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று ஒரு விருட்சமாக கிளைபரப்பி நிற்கின்ற இவ் வேளையில் அவரது பணியை நினைவு கூருதல் எமது கடமை ஆகும்.

இச் சஞ்சிகையானது சமூகத்தின் அறிவுப் பசியைப் போக்கும் பொருட்டு பல கல்விமான்களின் ஆக்கங்களையும் மாணவர்களினது எழுத்தாற்றல், சிந்தனை ஆற்றல்களையும் வெளிக்காட்டும் ஓர் பல்சுவை மலராக உங்கள் கைகளில் தவழ்கின்றது.

எமது பாடசாலை வறிய நிலையில் உள்ள பாடசாலையாக விளங்குவதால் நிதிப் பற்றாக்குறை எமது வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருந்து வந்துள்ளது. இதுவரைகாலமும் இவ்வாறான சஞ்சிகை வெளிவராமைக்கு நிதிப் பற்றாக்குறையே பிரதான காரணியாக இருந்துள்ளது. இன்று இச்சஞ்சிகையின் வெளியீடு எமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் ஸ்தாபகரின் குடும்பத்தினரின் பெருமளவு நிதி உதவியுடனும், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துளைப்புடனும் இச் சஞ்சிகை வெளிவருகின்றது.


இச் சஞ்சிகையை மேலும் வளமூட்டுவதற்கு பல ஆக்கங்கள் கிடைக்கப்பெற்ற போதும் நிதிப் பற்றாக்குறை காரணமாகவும், குறித்த காலப்பகுதிக்குள் மலரை வெளியிட வேண்டி இருந்தமையினாலும் அவற்றைப் பிரசுரிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

இச் சஞ்சிகையானது எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கினையும் நிதர்சனப்படுத்தும் ஓர் ஆவணமாக வெளிவந்துள்ளது. எதிர்காலத்தில் இச்சஞ்சிகை மென்மேலும் சிறப்புடன் வெளிவருவதற்கு ஓர் வழிகாட்டியாகவும் அத்திவாரமாகவும் அமைந்துள்ளது என நம்புகின்றோம்.

மேலும் இச்சஞ்சிகையின் வெளியீட்டிற்கு ஒத்துளைப்பு வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**நன்றி.**

**18.10.2002.** **இதழாசிரியர்**



# பரஞ்சோதியின் அகத்தே.............


01. அதிபர் எண்ணத்தில் இருந்து 03

02. கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - திரு.சி.கணேசமூர்த்தி 16

03. கல்வியும் கோள்மயமாக்கலும் பேராசிரியர் சபா ஜெயராசா 26

04. கணனிப்பயன்பாடு . இ-நூல்களும், இ-கற்கையும் - கலாநிதி சி.மகேசன் 31

05. இலங்கையின் திறந்த பொருளாதாரமும் அந்நியமுதலீடும் - திரு. க.தேவராஜா 40

06. ஆரம்பக் கல்வியினூடாக மனிதவிழுமிய அடிப்படைகளுக்கான அத்திவாரமிடல் - கலாநிதி தி.கமலநாதன் 54

07. கிராமப்புறப் பாடசாலைகளின் நோக்கமும் எதிர்கொள்ளும் இடர்பாடுகளும் - திருமதி.யோ.நாகேந்திராசா 60

08. 1900இன் பின்னர் கல்வி வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய கல்விச் சட்டங்களும், கல்விச் சீர்திருத்தங்களின் சுருக்கமும். திரு.எஸ்.சண்முககுமார் 66

09. கல்வி அபிவிருத்தியின் பின்புலத்தில் வறுமை - திரு.மு.பரஞ்சோதி 74

10. இலங்கைத் தமிழரின் பாரம்பரிய இசைவளர்ச்சி - திருமதி.ப.சந்தானலஷ்மி 78

11. பரதக்கல்வியின் சிறப்பு நோக்கி - திருமதி.சு.அனுஷா 83

12. நிறுவன முகாமைத்துவத் தொழிற்பாடுகள் ஓர் அறிமுகம் - திரு.பா.பாலமுரளி 88

13. Probelms confronting English education and solutions - Mr.P.Majurathan 97

14. பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள்- திரு.த.சொக்கலிங்கம் 99

15. மாணவர் பகுதி 102

# எங்கள் அதிபர்



**திரு. எஸ். சண்முககுமார்.** B.A, Dip.in.Edu, M.Ed, S.L.P.S

# அதிபரின் எண்ணத்தில் இருந்து

இலங்கை மணி நாட்டின் வடபால் யாழ்ப்பாண நன்னகரில் கோண்டாவில் பதியுறை பரஞ்சோதி வித்தியாலயம் எண்ணற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கை ஆற்றி வந்தமையும், வருகின்றமையும் நாம் அறிந்ததே.

1930ம் ஆண்டுக் காலப் பகுதியில் பிறந்து பல அரிய கல்விச் சேவைகளை ஆற்றி என்றும் இளமையாகி மங்காப் புகழோடு தலைநிமிர்ந்து நிற்பவள் தான் பரஞ்சோதி என்னும் கல்வித்தாய். பல இடர்களையும் காலத்துக்குக் காலம் எதிர் கொண்டதாயினும் அத்தனைக்கும் ஈடுகொடுத்து எதிர் நீச்சலிட்டு தனக்கெனப் பெயர் பொறித்தவளும் இவ் அன்னையே!

பரஞ்சோதி வித்தியாலயம் 72வருட நிறைவில் தனக்கென "பரஞ்சோதி" என்னும் மலரை உருவாக்கி அதன் வாயிலாக தனது வரலாற்றையும், தனது சாதனைகளையும் வெளிக்கொண்டு வருகின்ற இவ்வேளையில் 21வது அதிபர் என்ற வகையில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். வித்தியாலயத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்தும் வித்தியாலய வரலாறு ஒன்று வெளிவருகின்றது. இதற்கு மேலாக ஒருசில வார்த்தைகள் மட்டும் தருவதில் மகிழ்வுறுகின்றேன். இம் மலர் ஒரு வரலாற்று மலராகவும், ஆய்வு மலராகவும், மாணவர் ஆக்க மலராகவும், தேசிய கல்விக் கல்லூரி, ஆசிரியகலாசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தரமான ஆக்கங்களைத் தாங்கி வரும் மலராக மலர்கின்றமை பெருமைக்குரியதாகும்.

19.07.1996ல் அதிபராக பதவியுயர்வு பெற்று கடமை ஏற்றுக் கொண்டேன். இக்காலப் பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாக இருந்தது. மாணவர் தொகை அதிகரித்தும் வசதிகள் ஏதும் அற்ற வறியதாக்கப்பட்ட நிலையில் இருந்தது கண்டு பயமும், ஒருவகையில் ஏக்கமும் கொண்டேன். இத்தகைய பாடசாலையை எவ்வாறு முன்னேற்றுவது என்று எண்ணியவாறு காலம் ஓடியது.

## வலய, கோட்ட உதவிகள்

இந்நிலையில் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். சிவானந்தன் பெரும் உதவிகளைச் செய்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவினார். பின்னர் கடமையேற்ற கல்விப்பணிப்பாளர் அமரர் எஸ். இரத்தினராசா அவர்கள் காலத்தில் பாடசாலைக்கு வருகைதந்து அப்போதைய நிலைகண்டு உடனடியாக அலுவலக தளபாடங்களையும், மாணவர் தளபாடங்களையும் தந்துதவியதோடு அப்போதய தேவையை பூர்த்தி செய்து ஆசிரிய ஆளணியையும் நிரப்பி எனக்கு பக்கபலமாக விளங்கினார். அடுத்து கல்விப்பணிப்பாளராகக் கடமையேற்ற திரு. என். சுந்தரலிங்கம் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவினார். பின்னர் கல்விப்பணிப்பாளராக பதவியேற்ற கலாநிதி திரு. நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் பூர்த்தி செய்யப்படாது இருந்த இரண்டுமாடிக் கட்டிடத்தினை பூர்த்திசெய்து திறப்புவிழா செய்துவைத்து பெருமைசேர்த்தார்.

அடுத்து திருமதி. செ. மகாலிங்கம் அவர்கள் கல்விப்பணிப்பாளராகக் கடமையேற்றதைத் தொடர்ந்து அரசியல் பொருளாதார நிலமைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக பாடசாலையில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதான மண்டபத்திருத்த வேலைகள் பூர்த்தி, தரம் 1 செயற்பாட்டறை அமைப்பு, தரம் 2 செயற்பாட்டறை அமைப்பு, அதிபர் அலுவலகம் பூர்த்தி, பாடசாலைவெளிப்புறம் வர்ணம் பூசியமை, G.T.Z. உதவியோடு ஆண், பெண் மலசல கூடங்கள், ACTION FAIM உதவியோடு கிணறு புனரமைத்தமை, RRAN உதவியோடு தளபாடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை, 70'*25' இரு மாடிக் கட்டிட அடித்தள வேலைகள் என்பன நடைபெற்று பௌதீகத் தேவைகள் ஓரளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கோட்டக்கல்விப் பணிப்பாளராக திரு. V. தானையா, திரு. R. அருளானந்தம், திருமதி. S. காங்கேயன் அவர்கள் பாடசாலைக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் அவ்அவக் காலங்களில் வழங்கி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார்கள்.

இவ்வாறு வளத்தேவைகள் நிறைவேற்ற கல்வி வளர்ச்சியிலும் பல முன்னேற்றங்களைக் கண்ணுற்றது. 8 வருட இடைவெளியிக்குப் பின்னர் புலமைப் பரிசில் பரீட்சைகளில் மாணவர் காட்டிய சித்திப் பெறுபேறு, விளையாட்டு, இணைப்பாடவிதானச் செயற்பாட்டின் பெறுபேறு, மெய்வல்லுனர் போட்டிப் பெறுபேறு, சமூகக்கல்விப் போட்டி, சித்திரப்போட்டி, விஞ்ஞான கணித வினாடி வினாப்போட்டி, அரச சார்பற்ற நிறுவனங்களின் போட்டிகள், சைவபரிபாலன சபை, தேவஸ்தானங்களின் போட்டிகள் போன்றவற்றில் மாணவர்கள் காட்டிய ஆர்வமும் ஈட்டிய வெற்றிகளும் வித்தியாலயத்துக்கு பெருமையையும், பலத்தையும் கொடுத்தது எமக்கெல்லாம் ஊக்கத்தை ஊட்டியது.

இவ்வேளையில் வித்தியாலய வளர்ச்சிக்காக தமது கடமைகளைச் செய்து உதவிய அதிபர்களும்,ஆசிரியர்களும் என்றும் போற்றப்படவேண்டியவர்கள். இவ்வேளையில் நாம் அவர்களை நினைவில் வைத்தல் அவர்களுக்குச் செய்யும் கைமாறாகும்.

## பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர்கள்

| | |
|---|---|
| 1. திரு ம. சேதுலிங்கம் | 1930 |
| 2. திரு கா. கார்த்திகேசு | 1931 |
| 3. திரு சி. சிவகுருநாதன் | 1935 |
| 4. திரு பூ. சின்னத்துரை | 1935/1936 |
| 5. திரு சு. பொன்னையா | 1940 |
| 6. திரு பூ. சின்னத்துரை | 1951 |
| 7. திரு சி. சுப்பிரமணியம் | 1964 |
| 8. திரு வ. கணபதிப்பிள்ளை | 1966 |
| 9. திரு வ. நமசிவாயம் | 1969 |
| 10. திரு செ. இராசா | 1969/1970 |
| 11. திரு சு. குழந்தைவேலு | 1970 |
| 12. திரு செ. நாகலிங்கம் | 1970 (நடுப்பகுதி) |
| 13. திரு அ. செல்லத்துரை | 1970 (பிற்பகுதி) |
| 14. திரு த. யோகநாதன் | 1970/1971 |
| 15. திரு இ. சின்னத்தம்பி | 1971 |
| 16. திரு வ. ஆழ்வாப்பிள்ளை | 1971 (பின்) |
| 17. திரு மு. திருஞானசம்பந்தப்பிள்ளை | 1972 |
| 18. திரு செ. நடேசு | 1978 |
| 19. திரு சி. சின்னராசா | 1978 (பின்) |
| 20. திரு சு. லோகதாசன் | 1981 |
| 21. திரு எஸ்ஸ. சண்முககுமார் | 1996 - இன்று வரை |

## பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்ட ஆசிரிய திலகங்கள்

### திருவாளர்கள்

க.பரமானந்தர், எஸ்.நவரத்தினம், எம். வேலாயுதபிள்ளை, ஏ.கந்தையா, கனகரத்தினம், செ.இராசப்பா, கு.தியாகராஜா, செ.ராசா, சி.பவானந்தன், கார்த்திகேசு, வேலுப்பிள்ளை, த.இராசரத்தினம், மா.சின்னத்தம்பி, வ.நமச்சிவாயம், ச.பாலசிங்கம், க.வேல்தஞ்சன், மா.அப்புக்குட்டி, தம்பு, பி.கந்தப்பு, அ.நடராசா, செ.குமாரசிங்கம், கே.பொன்னம்பலம், சீ.நடராசா, சீ.நவரத்தினசிங்கம், சி.சுப்பிரமணியம், ம.குணரத்தினம், ந.சுப்பிரமணியம், கா.தம்பிராசா, கா.பசுபதி, எஸ்.சுந்தரமூர்த்தி,

இ.சின்னத்தம்பி, சி.சிவராசா, ஐ.சிங்கராசா, பொ.பத்மநாதன், வே.குமரகுரு, வே.தபோதநாயகம்,நா.கணபதிப்பிள்ளை, அ.தவநாயகம், மு.வேலாயுதபிள்ளை, க.குழந்தைவேலு, த.சுப்பிரமணியம், கி.கதிரவேலு, செ.ஜெயராசா, ஏ.இரத்தினசிங்கம், ச.பாலச்சந்திரன், பி.ஞானசம்பந்தன், கு.வின்சன், ஆ.சுப்பிரமணியம், வை.கதிர்காமநாதன், த.பாலசுப்பிரமணியம், ஆ.விவேகானந்தன், இ.யோகநாதன், ந.பிரபாகரன், நா.பிறேம்குமார், எஸ்.நவரத்தினம், பி.பாலசுப்பிரமணியம், வை.கேதீஸ்வரநாதன், அமிர்தலிங்கம், கே.நடராசா, செ.ஜெயசோதிவரதன்.

### திருமதிகள்

ஈ.நாகரத்தினம், இ.சிவக்கொழுந்து, நா.அருணாசலம், நா.பத்மநாதன், கி.கிருஸ்ணராசா, சுப்பிரமணியம், நவரத்தினம், எஸ்.பத்மாவதி, க.மாணிக்கம், சி.மனோன்மணி, வி.அருமைநாயகம், இ.சரஸ்வதிஅம்மாள், கு.பரமேஸ்வரி, அ.தவமணி, சி.புண்ணியவதி, இ.பொன்னுத்துரை, த.அழகரத்தினம், வி.கைலாயநாதன், அ.நாகேஸ்வரி, பி.ஜெகநாதன், ந.நாகநந்தினி, எஸ்.சடாச்சரம், நா.யோகேஸ்வரி, ர.மதியழகன்.

### செல்விகள்

வி.காரளசிங்கம், ஏ.ஜெயந்தி, சு.குமுதினி, க.ஜெகதீஸ்வரி, சு.அமுதினி, ச.ஒப்பிலாமணி, மு.துஷ்யந்தி, வை.புசாலினி, இ.இதயா, எஸ்.லீலாவதி, செ.இரத்தினேஸ்வரி, ஆ.நாகேஸ்வரி, பூ.குணரத்தினம், ம.குணரத்தினம், தி.கேமாவதி.

### தற்போதைய ஆசிரியர் குழாம்

திரு.எஸ். சண்முககுமார் (அதிபர்) B.A, Sc.Trd, Dip.in.Edu, MEd, SLPS,
திரு.த. சொக்கலிங்கம் (உப அதிபர்) Pr.Trd, SLTS.1
திரு.சி. கிருஷ்ணானந்தன் Pr.Trd, SLTS .1
திரு.சி. கணேசமூர்த்தி So.Trd ,SLTS 2.1
திரு.த. சிவகுமாரன் So.Trd ,SLTS 2.1
திரு.சி. சரவணபவன் Mat.Trd, SLTS 2.1
திரு.பா. பாலமுரளி Dip.in.Mang, Spl Trd.Com
திரு.சி. செந்தில்குமரன் Mat.Trd,
திரு.ப. மயூரன் (Part time English)
திருமதி.ம. அருணாசலம் Sc.Trd, SLTS 2.1
திருமதி.சா. கனகநாயகம் Pr.Trd, SLTS 2.1
திருமதி.ச. பரமசிவம் Dip in Music, Dip in Edu.
திருமதி.அ. சுரேஸ் Dip in Dance, Dip.in.Edu
செல்வி.ஐ. பகீரதி

### கலாசாலை சென்றோர்

செல்வி. மா. டயனேஸ்வரி
திருமதி. கலாநிதி கிருஷ்ணமோகன்
செல்வி. ஆ. தர்மாவதி.

திரு சு. சண்முககுமார், திரு. த. சொக்கலிங்கம், திரு. சி. கிருஷ்ணானந்தன், திரு. த. சிவகுமார், திரு. செ. வைத்தியநாதன் (S.D.S.) ஆகியோர் அன்பளிப்பினால், உள்ளக ஒலிபெருக்கி அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக் காலப் பகுதியில் பாடசாலையை பல வழியிலும் முன்னேற்ற வேண்டும் என்று என்னுடன் கடமை ஆற்றும் சகல ஆசிரியர்களும் தோளோடு தோள் கொடுத்து அனைத்துச் செயற்பாடுகளிலும் உதவியதன் வாயிலாகவே இம் மலர் வெளிவருகின்றது. இதன்போது வரலாறு தேடும் படலத்தில் பாடசாலையின் ஸ்தாபகரின் வழித்தோன்றல்களை அறியும் வாய்ப்புக் கிட்டியது, இம்மலரின் தோற்றத்துக்கான பொருநிதியை வழங்கி இம் மலரை வெளிக்கொணர வைத்த பெருமை அவர்களின் குடும்பத்தையே சாரும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழையமாணவர் உதவியும்.

பாடாசாலை அபிவிருத்திச் சங்கம் உரிய காலங்களில் வித்தியாலய வளர்ச்சிக்கு தம்மாலான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கி வந்துள்ளமை பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தது.

வசதி படைத்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர மோகம் கொண்டு நகர்ப்புறப் பாடசாலைகளில் சேர்க்கும் போது பாடசாலைப் பற்றும் விருப்பும் கொண்ட பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்த்து கற்பிக்கின்றார்கள். இப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் எல்லா வகையிலும் எல்லாக்கற்றல் நிகழ்விலும் முழுமையாக பங்குபற்றி வெற்றிகளை ஈட்ட வசதி செய்யப்படுகின்றது. தேவையான வேளைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்தும் வெளியில் இருந்தும் உதவிய கரங்களை மறக்க முடியாது. குறிப்பாக திரு. ந. ஜெயபாலசிங்கம், திரு.பொ. நடராசா (நடேசு), புலவர் வீடியோ, முத்தொளி வீடியோ, திரு. பாலேந்திரா, திருமதி. தி. வசந்தி, திரு. சீ. குணநாயகம், திரு. வ. சந்திரசேகரன், திரு. திருமதி. செல்வராசா, திரு. சி. கதிரவேலு, திரு. ஐ. சிங்கராசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.பாடசாலை வளர்ச்சியில் முன்னின்று உழைத்த சனசமூகநிலையங்களின் பணி பாராட்டத்தக்கது. அந்த வகையில் கோண்டாவில் சரஸ்வதி ச.ச.நிலையம், கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், உரும்பிராய் மேற்கு அன்னுங்கை இளைஞர் ச.ச.நிலையம், கோண்டாவில் வாகீஸ்கரி ச.ச.நிலையம்ஆகியன குறிப்பிடத்தக்கது.

இவ் வேளையில் லண்டன் வாழ் எமது வித்தியாலய பழைய மாணவனும் பொறியியலாளரும் திரு. த. செல்வரத்தினம் (முருகையா) அவர்கள் எமது பாடசாலைக்கு விஜயம் செய்து பள்ளியை வணங்கி நின்று தனது சேவையாக லண்டன் வாழ் பரஞ்சோதி வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பரஞ்சோதி வித்தியாலய கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் ஒரு நிலையான வைப்பை வைக்கவும் வட்டியில் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஏனைய விழாக்கள் நடாத்துவதற்கும் வழி செய்யும் வகையில் ஒரு ஏற்பாட்டை செய்ய முன்வந்திருப்பது பாடசாலையின் எதிர்காலத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

## ஸ்தாபகர் சி. கார்த்திகேசு ஞாபகார்த்தப் புலமைப்பரிசில்

ஸ்தாபகர் உயர்திரு சி. கார்த்திகேசு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் ரூபா 25,000/= வைப்பிலிட்டு அதன் வட்டியை பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது.

வருட வட்டியை வறுமைக்கோட்டுக்குள் உள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பொறுப்பை ஸ்தாபகரின் புதல்வி திருமதி. யோகேஸ்வரி நாகேந்திரராசா ஏற்றுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

## கலைத்திட்டசெயற்பாடுகள்

எமது வித்தியாலயத்தின் கலைத்திட்டச் செயற்பாடுகள் ஆசிரியர்களால் முழுக்கவனத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் மாணவரின் கற்றல் அடைவுகள் முன்னேற்றம் அடைகின்றது. இதன் பெறுபேறுகளாக புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. ஏனைய மாணவர்களும் பாடரீதியிலான போட்டிகளிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று முன்னடைவைப் பெறுகின்றனர்.

மிகவும் பின்னடைவு நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி உயர்தரப்பாடசாலைப் பெறுபேறுகளுடன்போட்டியிடக் கூடிய திறன்களைப் பெறுவது அவளர்களின் கற்றல் முயற்சிகளின் பலனைக் காட்டுகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணமட்ட தரம் 9 பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் கற்றல் அடைவு பூரண வளர்ச்சியை அடைவதாக உள்ளது மகிழ்ச்சிக்குரியது.

எமது பாடசாலை, பாடவளர்ச்சியை கருத்திற் கொண்டு மன்றங்களை அமைத்து அதன் வாயிலாக தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், கவின் கலைமன்றம், இந்து மன்றம், மாணவர் மன்றம், விஞ்ஞான கணித மன்றம் என பல்வகைப்படும் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள்

பாடசாலையின் முன்னேற்றம் கற்றல் வளர்ச்சி வீதம் கற்றல் திறன், செயற் திறன் என்பன மாணவர்களின் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் மூலமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, சமூகக் கல்விப்போட்டி, சித்திரம், சங்கீதம், நடனப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, மெய்வல்லுனர் போட்டி ஆகிய போட்டிகளில் எமது பாடசாலை ஏனைய பாடசாலைகளுடன் போட்டியிட்டு பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெற்று பாடசாலைக்கு பெருமைசேர்த்து வருகின்றது.

குறிப்பாக உதைபந்தாட்ட அணி (16வயது) யாழ் தேசிய, முன்னிலைப் பாடசாலைகளுடன் மோதி வெற்றிகளையும், சமநிலை வெற்றிகளையும் பெற்று தனக்கென ஓரிடத்தை பிடித்து வைத்திருக்கின்றது.

இதைவிட குருளைச் சாரணர் பிரிவு தனது பணிகளை திறம்பட ஆற்றி வருவதும் சிறப்புக்குரியது. வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதும் மாணவர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து மகிழ்ச்சியும் ஆர்வத்துடனும் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

1. செல்வி. க. கோபிதா - 2002
2. செல்வி. வை. திவ்வியா - 2001
3. செல்வி. க. தர்சிகா - 2001 (இடம்பெயர்ந்த)
4. செல்வன். சி. விமல் - 2000
5. செல்வன். ச. சயந்தன் - 1990
6. செல்வன். இ. ராகுலன் - 1987
7. செல்வன். அ. புஸ்பகுமார் - 1984
8. செல்வன். அ. பாலகுமார் - 1979

## க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

## (1960 - 1968)

1. பொ. பாலசுப்பிரமணியம்
2. சி. சச்சிதானந்தம்
3. சி. கனகாம்பிகை
4. இ. பத்மாவதி
5. க. சரஸ்வதி
6. சி. தவமலர்

(1970 களில் க.பொ.த. (சாதாரண) வகுப்பு இடைநிறுத்தப்பட்டு தரம் 5 வரையான பாடசாலையாக மாற்றப்பட்டது. மீண்டும் 1980 களில் தரம் 6,7,8 ஆக உயர்ந்து 1997இன் பின் தரம் 9 வரை உயர்த்தப்பட்டது. தரம் iii வகையாக இருந்த பாடசாலை தரம் ii வகைப் பாடசாலையாக இன்று தரம் உயர்ந்துள்ளது.

### கோட்ட மட்டத்தில் பரிசு பெற்ற ஆசிரியர்கள்

| பெயர் | விபரம் | இடம் |
|---|---|---|
| 1. திரு. சி. கணேசமூர்த்தி | சமூகக்கல்வியும் வரலாறும் கட்புல சாதனப் போட்டி 2002 | 1ம் இடம் |
| 2. திரு. சி. கணேசமூர்த்தி | சமூகக்கல்வியும் வரலாறும் கட்புல சாதனப் போட்டி 2002 | 2ம் இடம் |
| 3. திரு. சி. செந்தில்குமரன் | கணித உபகரணப் போட்டி 2002 | அதிவிசேடம் |
| 4. திருமதி. சா. கனகநாயகம் | தொடர்பாடல் 2000 | அதிவிசேடம் |
| 5. திருமதி. சா. கனகநாயகம் | மொழி 2002 | விசேடம் |

### கோட்ட மட்டத்தில் பரிசு பெற்ற மாணவர்கள்

| பெயர் | விபரம் | இடம் |
|---|---|---|
| 1. செல்வி. ந. சுரேக்கா | தமிழ்த்தினப் போட்டி 2000 (கட்டுரை கடிதம் பிரிவு 2) | 3ம் இடம் |
| 2. 15 வயதுப் பிரிவு ஆண்கள் | உதைபந்தாட்டப் போட்டி 1999 | 3ம் இடம் |

## கோட்ட மட்டத்தில் பரிசு பெற்ற மாணவர்கள்

| பெயர் | விபரம் | இடம் |
|---|---|---|
| 3. பிரிவு 3 சிறுவர்கள் | ஆங்கில தின நாடகப்போட்டி 1998 | 3ம் இடம் |
| 4. செல்வன். கு. சபேஸ் | முதியோர் தினக் கட்டுரைப் போட்டி 2000 பிரதேச செயலகம் | 3ம் இடம் |
| 5. செல்வி. ச. கஜேந்தினி | ஒட்டுச் சித்திரம் 2002 | திறமை |
| 6. செல்வி. செ. சரண்யா | முதியோர் தினப் கட்டுரை போட்டி 2002 பிரதேச செயலகம் | 3ம் இடம் |

## வலய மட்டத்தில் பரிசு பெற்றோர் விபரம்

| பெயர் | விபரம் | இடம் |
|---|---|---|
| **ஆசிரியர்கள்** | | |
| 1. திரமதி. சா. கனகநாயகம் | தொடர்பாடல் 2001 | அதிவிசேடம் |
| 2. திரு. சி. கணேசமூர்த்தி | சமூகக்கல்வி உபகரணப்போட்டி 2002 | அதிவிசேடம் |
| 3. திரு. சி. செந்தில்குமரன் | கணித உபகரணப்போட்டி 2002 | அதிவிசேடம் |
| **மாணவன்** | | |
| 4. செல்வன். ஆ. ரஜீப் | சித்திரப் போட்டி 2001 | 1ம் இடம் |

## வித்தியாலயத்தில் தங்கப் பதக்கம் பெற்றோர் விபரம்

| பெயர் | விபரம் |
|---|---|
| **ஆசிரியர்கள்** | |
| 1. திரு. சு. லோகதாசன் | அதிபர் சேவை 18 வருடங்கள் |
| 2. திரு. சி. கதிரவேலு | ஆசிரியர் சேவை |
| 3. திரு. வே. குமரகுரு | ஆசிரியர் சேவை |
| 4. திருமதி. ஈ. நாகரத்தினம் | ஆசிரியர் சேவை |
| **மாணவர்கள்** | |
| 5. செல்வன். சி. விமல் | புலமைப்பரிசில் பரீட்சை 2000 |
| 6. செல்வி. வை. திவ்வியா | புலமைப்பரிசில் பரீட்சை 2001 |
| 7. செல்வி. க. கோபிதா | புலமைப்பரிசில் பரீட்சை 2002 (வழங்கப்பட வேண்டியது) |

## தேவைகள்

பாடசாலையின் வளர்ச்சிக்கு இதுவரை நிறைவு செய்யப்படாததும் அவசியமானதுமான தேவைகளாக பின்வருவனவற்றை இனங்கண்டுள்ளோம்.

1. நூலக வசதி
2. விஞ்ஞான, மனையியல் கூடங்கள்
3. செயற்பாட்டறை
4. கணணி ஆய்வுகூடம்
5. தொலைத்தொடர்பு வசதி
6. காவலாளி, சிற்றூழியர் நியமனம்

தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் கல்வித் தேவைகளைக் கருத்திற் கொண்டு இவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று மிகவும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

## நன்றி பகர்தல்

எமது பாடசாலையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கும் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. செ. மகாலிங்கம் அவர்கள் என்றும் எமது சமூகத்தின் நன்றிக்குரியவர்.

தனது நேரடிக் கண்காணிப்பில் எமது பள்ளித் தேவைகளை நிறைவேற்ற என்றும் தயங்காது உதவிடும் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச. காங்கேயன் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

கட்டிட வளத்தேவைகளைத் தருவதிலும் மேற்பார்வை செய்வதிலும் உதவும் யாழ் கல்வித் திணைக்கள பொறியியலாளர் திரு. கு. சிவபாலன் அவர்களுக்கும், தொழில்நுட்ப அலுவலர்களான திரு. க. சிவஞானம், திரு. யு. சிவராஜ் ஆகியோர்க்கும் வித்தியாலயம் சார்பான நன்றிகள்.

வளத்தேவைகளை வழங்கி எம்மை ஊக்கப்படுத்தும் கணக்காளர் திரு. கே.ஆர். துரைசிங்கம் அவர்களுக்கும் களஞ்சியப் பொறுப்பாளர் திரு. ம. பிரதீபன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

பாடசாலையைத் தனது மேற்பார்வையினூடாகக் கண்காணித்துவரும் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கும் என்றும் எமது நன்றிகள்.

பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், ஸ்தாபகரின் குடும்பத்தினர்கள், லண்டன் கிளை பழையமாணவர்கள், கனடா வாழ் பழைய மாணவர்கள், எம் இனிய ஆசிரியர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள்.


**திரு. எஸ் .சண்முககுமார்.**
**அதிபர்**

# எங்கள் உப அதிபர்



**திரு. த. சொக்கலிங்கம்.** Pr.Trd, S.L.T.S -1

# திண்ணைப்பள்ளியாக இயங்கிய கோண்டாவில் பூதவராயர் ஆலயம்





தவத்திரு வடிவேற் சுவாமியார்



இந்துபோட் இராஜரட்ணம்

# ஸ்தாபகரின் குடும்பத்தினர்



திருமதி.ஞானமணி
தர்மலிங்கம்
காலஞ்சென்றவர்



திருமதி. பரிபூரணம்
மயில்வாகனம்
உரும்பிராய்.



திருமதி. பரஞ்சோதி
குமாரசுவாமி
அவுஸ்திரேலியா.



அமரர் - சின்னத்தம்பி
கார்த்திகேசு



திருமதி. சொர்ணம்
கார்த்திகேசு



திரு. கே.தெய்வேந்திரன்
பிரதம எழுதுவினைஞர்
[ஓய்வு] . உடுவில்



திருமதி.
யோகேஸ்வரி
நாகேந்திரராஜா
(B.A.)[ஓய்வு]
திருநெல்வேலி.



Dr. திலகவதி குகதாசன்
லண்டன்

**யாழ்ப்பாணத்துக் கிராமிய கல்விப் பாரம்பரியத்தில் சில ஆத்மீக பொருட் கொடையாளர்களின் சேவைகளினா லேயே உருவாக்கம் பெற்றது. இந்த வரலாற்றில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் உருவாக்கலில் அமரர். திரு. சின்னத்தம்பி கார்த்திகேசுவின் குடும்பத்தினர் அத்திவாரமாகவே அமைந்துள்ளனர்.**

# யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்



**சி. கணேசமூர்த்தி** (Soc.Trd)
*யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்*

**வட** இலங்கையின் யாழ் மாவட்டத்தில் கோண்டாவில் கிராமத்தின் வடபகுதியில் அமைந்துள்ளதே பரஞ்சோதி வித்தியாலயமாகும். தோற்றத்திலே பெரிதாய் இல்லாவிட்டாலும் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை இவ்வித்தியாலயத்திற்கே உண்டு.

1930 ஆம் ஆண்டு கோண்டாவில் சிவபூதவராயர் ஆலயத்தில் திண்ணைப் பாடசாலையாக சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று பல நூறு மாணவர்களைக் கொண்ட கலையகமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பாட சாலையை உருவாக்கியவர்கள் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்தவர்கள் பலர் அவர்களில் முக்கியமாக பாடசாலையை ஆரம்பித்தவர்கள், பாடசாலைக்கான நிலத்தை வழங்கியவர்கள், அதிபர்களாக சேவையாற்றியவர்களின் பணிகள் யாவும் வரலாற்றிலே என்றுமே பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படத்தக்கவையாகும்.

இவ்வூர் மக்கள் அறிவொளி பெற கலையகம் ஒன்றில்லாது கலங்கிய வேளையிலே யாழ்/ இணுவையூரைச் சேர்ந்த திரு. காசிநாதர் சேதுலிங்கம் சட்டம்பியார் இணுவையூரைச் சேர்ந்த தவத்திரு க. வடிவேற்சுவாமியார் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. பரமசுவாமியார் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த பெரியோர்களின் பெரு முயற்சியினாலும் கோண்டாவில் சிவபூதவராயர் ஆலயத்தில் இரவுப் பாடசாலையாக ஆரம்பிக் கப்பட்டது. பல கல்விமான்களை உருவாக்க வித்திட்ட இப் பெரியோர்கள் இவ்வூர் மக்களால் என்றுமே போற்றி வணங்கத்தக் கவர்கள் ஐந்து வருடங்களாக சிவபூதவராசர் ஆலயத்திலேயே இப்பாடசாலை நடைபெற்று வந்தது. திரு. கா. சேதுலிங்கம் சட்டம்பியாரும் திரு. பரமசுவாமியாரும் பெரும்பாடுபட்டு இப்பாடசாலையை செவ்வனே நடாத்தி வந்தனர். அவர்களுடைய பணி மகோன்னதமானது.இவர்களுடன் தவத்திரு வடிவேற் சுவாமியாரும் இணுவையூர் சதாசிவச் சட்டம்பியாரும் அரும்பணி ஆற்றினர்.

இவ்வூர் மக்களுக்கு நிரந்தரமான ஒரு கலைக்கூடம் வேண்டும் அதற்குரிய நிலம் வேண்டும் என்று எண்ணிய பெரியோர்களும் நலன்விரும்பிகளுமான தவத்திரு. கந்தர் வடிவேற்சுவாமியார் கோண்டாவில் திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு, கோண்டாவில் திரு. சீனியர் கந்தையா, இந்துபோட் இராசரத்தினம் போன்ற பெரியோர்கள் மேற்கொண்ட பெரு முயற்சியினால் இன்று பாடசாலை அமைந் துள்ள இடத்தில் நிரந்தரமான கல்விக்கூடம் நிறுவப்பட்டது. முதலில் திரு. சி. கார்த்திகேசு நிலத்தை வழங்கினார் அடுத்து சீனியர் கந்தையாவும் நிலத்தை வழங்கினார் இந்துப்போட் இராசரத்தினமும் மேலும் தேவையான காணியைப் பெற்று

இப்பாடசாலைக்கு வழங்கினார். திரு. சி. கார்த்திகேசு தனது மகளுக்கு இட்ட பெயராகிய "பரஞ்சோதி" என்னும் திருநாமத்தையே இப்பாடசாலைக்கும் "பரஞ்சோதி வித்தியாசாலை" எனப்பெயரிட்டு மகிழ்ந்தார். இப்பாடசாலை ஆரம்பநாள் அன்று கந்தர்மடம் சிவகுருநாத பீடக்குருமணி தவத்திரு மகாதேவசுவாமிகள் ஆசியுரை வழங்கினார். திரு. சி. கார்த்திகேசுவே இப்பாடசாலைக்கு முகாமையாளராகவும் (மனேச்சர்) நியமிக்கப்பட்டார். இவர் மேற்பார்வையாளராய் இருந்த காலத்தில் பாடசாலை கல்வியிலும், கலைத்துறையிலும் சிறப்புடன் வளர்ச்சிபெற்றது.

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் மகனான திரு கார்த்திகேசு மலேசியாவில் அரச உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார் இவர் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த இளையதம்பியின் மகளான பொன்னம்மாவை திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர் இதன் பயனாக ஞானமணியை பெற்றனர். சில ஆண்டுகளில் கார்த்திகேசுவின் மனைவியாகிய பொன்னமா சிவபதமெய்தினார். இதன்பின் இளையதம்பியின் மகளும் பொன்னம்மாவின் சகோதரியுமான சொர்ணம் என்னும் மங்கை நல்லாளை திருமணம் புரிந்து இன்புற்று வாழ்ந்தனர். திரு. சி. கார்த்திகேசுவின் மூத்தமகள் ஞானமணி (காலஞ்சென்றவர்) ஞானமணி + தர்மலிங்கம் (சுகாதார உத்தியோகத்தர்) இவர்களின் பிள்ளைகள் ஞானாம்பிகை + ஜனார்த்தனராஜன் (கனடா) கனகாம்பிகை + தியாகராசா (கோண்டாவில் வடக்கு) பாலசுப்பிரமணியம் (U.S.A), பாலச்சந்திரன் (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா), அமிர்தாம்பிகை (வவுனியா), வனிதாம்பிகை (கனடா). திரு. கார்த்திகேசு சொர்ணம் தம்பதிகளின் புதல்வியாக செல்வி பரஞ்சோதி பிறந்து சில ஆண்டுகளில் காலமானார் அடுத்த மகளாக பரிபூரணம் பிறந்தார் இவர் திரு. மயிலவாகனத்தை திருமணம் செய்து (வனபரிபாலன ACF, உத்தியோகத்தர் ) சீரும்சிறப்புமாக வாழ்ந்து வந்தார்.


தற்போது மயில்வாகனம் காலமாகி விட்டார். அடுத்தமகள் பரஞ்சோதி + குமாரசாமி (M-L-T அவுஸ்ரேலியா). இவரின் பெயரையே பாடசாலைக்கும் சூட்டியுள்ளனர். இவரின் பிள்ளைகளான குமுதினி (அவுஸ்ரேலியா), சுரேந்திரன் (கனடா), குமரேந்திரன் (ஜேர்மனி), சிவபூதவராசர் திருவருளினாலே அடுத்த தவப்புதல்வனாக தெய்வேந்திரம் பிறந்தார் இவர் ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் ஆவார் (உடுவில்) இவரின் பிள்ளைகள் ஐவர் செழியன் (கனடா), பராபரன் (ஆசிரியர் கண்டி), மோகனராம் (பொறியியலாளர், சிங்கப்பூர்), பாலமயூரன் (பேராதனைவளாக மாணவன்), ஹரிராம் (மாணவன்) ஆகும்.

அடுத்து யோகேஸ்வரி (B.A லண்டன், ஓய்வுபெற்ற ஆசிரியை றிபேக்கல்லூரி, சாவகச்சேரி) கணவன் நாகேந்திரம் றிபேக்கல்லூரி சாவகச்சேரி அதிபராக இருக்கிறார். இவர்களின் பிள்ளைகள் நால்வர் கௌரிதரன், கார்த்திகேயன், சுஜீந்திரன் (மாணவர்கள் கொழும்பு) கல்யாணி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி). கார்த்திகேசுவின் தவப்பயனாய்; கனிஷ்ட புத்திரியாய் பிறந்தவர் திலகவதி வைத்தியகலாநிதி குகதாசன் (லண்டன்). இவர்கள் மூவரைப் பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் பிள்ளைகளான இரு ஆண்மக்களும் ஒரு பெண்பிள்ளையுமாவார் வைத்தியகலாநிதி கந்ததாஸ் (லண்டன்), வைத்தியகலாநிதி முரளிதாஸ் (லண்டன்), உமையாள் (மாணவி லண்டன்). திலகவதியின் கணவர் வைத்தியகலாநிதி குகதாசன் மகப்பேற்று நிபுணராக நியூசிலாந்தில் சேவையாற்றுகின்றார்.

திரு. சி. கார்த்திகேசுவின் பிள்ளைகள் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்றவர்கள் என்பது நினைவு கூரத்தக்கது. இவர்களின் தீர்க்கதரிசனமான அளப்பரிய சேவையால் இன்று பாடசாலை பல்வேறு மட்டங்களில் முன்னேற்றமடைந்து வருகின்றது.


தற்பொழுதும் அவர்களது வழித்தோன்றல்கள் இப்பாடசாலைக்கு அளப்பரிய சேவைகளை வழங்கிக் கொண்டே வருகின்றனர். பரஞ்சோதியின் கல்விச் சேவை இவர்களுடைய தொண்டின் வெளிப்பாடாக என்றும் விளங்கும்.

*இந்துபோட் இராசரத்தினம் அவர்களால் தம் கைப்பட எழுதிய கடிதங்கள்.*


THE HINDU BOARD OF EDUCATION
(INCORPORATED UNDER ORDINANCE No. 21 OF 1926)
Jaffna, 10/3/1953

Mrs Sinnetamby Karthikesu is given permission to put up a building ... school premises near the well

S Rajasi...


THE HINDU BOARD OF EDUCATION

JAFFNA 5/1/1956

1935ல் திரு. சிவகுருநாதன் அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பது, மாணவர் எண்ணிக்கையைக் கூட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். சிலமாதங்களே இப்பாடசாலையில் இவரால் சேவையாற்ற முடிந்தமையால் இவரால் எதையும் பூரணமாகச் செய்து முடிக்க முடியவில்லை. அதன்பின் நுணாவிலைச் சேர்ந்த திரு. சின்னத்துரை அதிபர் பதவியை ஏற்றார். இவருக்கும் இவரது உதவி ஆசிரியர்களுக்கும் இரண்டு முக்கியமான பணிகள் இருந்தன. ஒன்று அறிவின் அவசியத்தை மறந்து அதன் தேவையையே உணராதிருந்த அன்றைய சூழலில் வாழ்ந்த மக்களுக்கு கல்வியின்பால் ஆர்வமூட்டல்; மாணவரைப் பாடசாலையில் சேர்த்தல், மற்றையது மாணவருக்கு அறிவைப்புகட்டுவது. இந்த இரண்டு பணிகளையும் செய்வதற்காக ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று அறிவின் அவசியத்தை எடுத்துக் கூறி மாணவர்களைப் பாடசாலையில் சேர்த்ளதனர் சிறந்த அறிவையும் புகட்டினர். இதன் மூலம் தமது இலட்சியத்தில் பெருவெற்றியும் கண்டனர்.

பதினைந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஒரு வருடத்திலேயே நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கத் தொடங்கியது. திரு. சின்னத்துரை அதிபராக இருந்த காலத்தில் இப்பாடசாலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்திருந்தது. அவருடைய சேவையும் இவ்வூர் மக்களால் பாராட்டத்தக்கதே. இவருக்குப் பின்னர் கட்டுவனைச் சேர்ந்த திரு. பொன்னையா அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். இவர் அதிபராகக் கடமை ஆற்றிய காலப்பகுதியில் பாடசாலைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளில் சிலவற்றை செய்து முடித்தார். குறிப்பாக மாணவர்கள் குடிநீருக்காக வெளியே செல்லாது இருப்பதற்காக கிணறு வெட்டப்பட்டது. பாடசாலையின் எல்லைகள் மாணவர்கள் மூலம் உறுதியாக இஸ்திரப் படுத்தப்பட்டது. பத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இவர் காலத்தில் கடமை யாற்றினார்கள் பாடசாலை கல்வியிலும் மற்றும் கலைகளிலும் வளர்ச்சி அடைந்து கொண் டிருந்தது. பலவகுப்புக்கள் கொண்ட பாடசாலையாக இயங்கி வந்தது. இவர்

பாடசாலைக்கு ஆற்றிய பணிகளை மாணவ சமுதாயம் என்றென்றும் மறக்காது நன்றி யுடையதாய் இருக்கும். இவர் 08-08-1951ல் அதிபர் பதிவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

18-10-1951ல் அதிபர் பதிவியேற்ற நீர்வேலியைச் சேர்ந்த திரு. பூ. சின்னத்துரை அவர்கள் திரு. பொன்னையாவின் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். கல்விப் பொதுத்தராதரப் (சாதாரணதரம்) பரீட்சையில் தொடர்ந்தும் சிறந்த சித்தியெய்திய பல மாணவர்களை இப்பாடசாலை உருவாக்கியது இவ்வதிபர்கள் காலத்திலேயாகும். 28-10-1963ல் இவர் இடமாற்றம் பெற்றார்.

இவரைத் தொடந்து அதிபர் பதவியேற்ற வசாவிளானைச் சேர்ந்த திரு. சி. சுப்பிரமணியம் காலத்திலும் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரம்)ப் பரீட்சையிலும் இப்பாடசாலை திறமையான சித்திகளைப் பெற்ற பல மாணவர்களை உருவாக்கியது குறிப்பிடத்தக்கதாகும். இவர் 01.01.1964 தொடக்கம் 22.01.1966 வரை பதவி வகித்தார். திரு. சி. சுப்பிரமணியம் காலத்தின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்று ஏற்பட்டது. பல ஆண்டுகளாக க.பொ.த. சாதாரணதரம் வரை நடைபெற்று வந்த இப்பாடசாலை அன்றைய காலகட்டத்தின் தாக்கம் காரணமாக எட்டாம் தரம் வரை தரம் குறைக்கப்பட்டது. இதனை இவ்வூர் மக்கள் எதிர்த்தனர் பின்தங்கிய கிராமமாகையால் செய்வதறியாது திகைத்தனர். அன்று ஏற்பட்ட மாற்றம் இன்று வரை பூர்த்தி செய்யப்படாது இருப்பது கண்டு பெற்றோரும் நலன் விரும்பிகளும் கவலை கொண்டுள்ளனர்.

தொடர்ந்து 22.01.1966 தொடக்கம் 16.03.1969 வரை அதிபர் பதவிவகித்த இளவாலை திரு. வ. கணவதிப்பிள்ளை அவர்கள் பாடசாலை ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து வந்தாராயினும் முன்னேற்றமான காரியங்கள் எதையும் செய்து முடிக்க முடியவில்லை. இவருக்குப்பின் அதிபர் பதவிவகித்த திரு. வ. நமசிவாயம் 16.03.1969 தொடக்கம் 19.07.1969 வரை சேவையாற்றினார்.

20.07.1969 தொடக்கம் 31.03.1970 வரை அதிபர் பதவியில் இருந்தவர் திரு. செ. இராசா இவர் காலத்தில் உதவி ஆசிரியராய் கடமை ஆற்றிய உரும்பிராயைச் சேர்ந்த திரு. க. குழந்தைவேலு அவர்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியவர். அதிபர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொழுதிலும் அதிபர்கள் இல்லாத காலங்களிலும் பாடசாலையைச் செவ்வனே நடத்தியவர்.

திரு. செ. இராசா அவர்களுக்குப் பின்னர் திரு. செ. நாகலிங்கம் அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார். 15.07.1970 தொடக்கம் 01.09.1970 வரை கடமையாற்றினார். இரண்டு மாதங்களே சேவையாற்றிய இவரால் எதையும் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. இவரைத் தொடர்ந்து திரு. அ. செல்லத்துரை 02.09.1970 தொடக்கம் 12.10.1970 வரை குறுகிய காலம் அதிபர் பதவிவகித்தார். இவ்வதிபருக்குப் பின்னர் திரு. த. யோகநாதன் 16.10.1970 தொடக்கம் 05.01.1971 வரை அதிபர் பதவிவகித்தார் இவருக்குப் பின் திரு. இ. சின்னத்தம்பி அவர்கள் 13.031971 தொடக்கம் 31.07.1971 வரை அதிபராகக் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து அதிபர் பதவிவகித்தவர் திரு. வ. ஆள்வாப்பிள்ளை இவர் 01.08.1971 தொடக்கம் 02.09.1971 வரை ஒரு மாத காலமே சேவையாற்றினார்.

இவருக்குப்பின் வேலணை ஊரைச் சேர்ந்த திரு. மு. ஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் 03.10.1971 தொடக்கம் 08.05.1978 வரை அதிபராகக் கடமையாற்றியவர். பாடசாலையின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை சிறந்த முறையில் பாடசாலை நிர்வாகத்தில் நடைமுறைப்படுத்தியவர்.

இவரைத் தொடர்ந்து அதிபர் பதவிவகித்தவர் திரு. செ. நடேசு அவர்கள் இவர் 08.05.1978 தொடக்கம் 24.10.1978 வரை அதிபர் பதவி வகித்தவர். சிலமாதங்களே கடமையாற்றினாலும் அக்காலத்தில் சிறந்த முறையில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியவர். இவர் காலத்தில்

விளையாட்டுத்துறையில் பாடசாலை சிறப்புற்று விளங்கியது. இவரைத் தொடந்து கொக்குவிலைச் சேர்ந்த திரு. சின்னராசா அவர்கள் அதிபர் பதிவியை ஏற்றார். இவர் 01.11.1978 தொடக்கம் 18.06.1981 வரை அதிபர் பதவிவகித்தார். இவர் பாடசாலையின் பாதுகாப்புக் கருதி பாடசாலை வளவின் தெற்குப் பக்க மதிற்சுவரை கட்டிமுடித்தார். அத்துடன் பாடசாலைக் கட்டடத்தின் பெரும் பகுதியை சிறந்த முறையில் திருத்திக் கட்டி முடித்தவர். இவருடைய சேவை மாணவர்களால் போற்றப்படத்தக்கதாகும்.

இவரைத் தொடர்ந்து 24.06.1981 தொடக்கம் அதிபர் பதவியை ஏற்றவர் ஆனைக்கோட்டை உயரப்புலம் விதானையார் மகன் திரு. சு. லோகதாசன் ஆகும். இவர் காலத்தில் பாடசாலை பல்துறைகளிலும் வளர்ச்சி பெற்றது.

கல்வித்துறையில் ஐந்தாம் ஆண்டு வரையே நடைபெற்று வந்த வகுப்புக்கள் படிப்படியாக ஆறாம் ஆண்டு, ஏழாம், எட்டாம், ஒன்பதாம் ஆண்டுகள் வரை தரம் உயர்த்தப்பட்டது. இவ்வாறு வகுப்புக்கள் தரமுயர்த்தப்பட்டமை இப்பாடசாலையின் சுற்றாடலில் வதியும் மாணவர்களுக்கு கல்வித்துறையில் பெருவாய்ப்பாக அமைந்தது. தொடர்ந்து ஒன்பதாம் ஆண்டுகள் வரை வகுப்புக்களை நடாத்துவதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கிடைக்காமையால் எட்டாம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது,

கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் பாடசாலையின் பிரதான மண்டபத்தின் கூரைப்பகுதி திருத்திய மைகப்பட்டது. இம்மண்டபத்திற்கு கதவுகளும் பொருத்தப்பட்டன. புதியமாடிக் கட்டடமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் ஒருபகுதி கட்டப் பட்டது. சரிந்து விழும் நிலையில் இருந்த கட்டடமொன்று புனருத்தாரணம் செய்யப் பட்டது.

இவர் காலத்தில் காலஞ்சென்ற திரு. இராசசிங்கம்(லாறி) அவர்களினால் நிலையான இடத்தில் காண்டாமணி அமைக்கப்பட்டது. கலைவாணி வசிகசாலை இளைஞர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலை வளவிலும் சுற்றாடலிலும் பெறுமதிமிக்க நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டன. அம்மரங்களின் நிழலில் இன்று மாணவர்கள் விளையாடவும் ஓய்வு கொள்ளவும் வசதியாக அமைந்துள்ளது.

இவ்வதிபரின் விடாமுயற்சியினால் பாடசாலை வளவின் கிழக்கு, மேற்குப்புற எல்லை மதிற் சுவர்கள் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்டன. வடக்குப்பக்க மதிற் சுவரின் ஒருபகுதியை கலைவாணி வாசிகசாலை உதவியுடன் திரு. ந. ஜெய பாலசிங்கத்தின் மனமுவந்த அன்பளிப் புடனும் கட்டிமுடிக்கப்பட்டது.

இவர் காலத்தில் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. கா. தம்பிராசா ஆசிரியர் அதிபருடன் இணைந்து பாடசாலை முன்னேற்றத்திற்கு தன்னாலான பணிகளைச் செய்தார். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக இவ்வூர் பெற்றோரும் நலன் விரும்பிகளுமான திரு. பொ. நடேசு(கவாஸ்),திரு. ந.ஜெயபா லசிங்கம்(யாழி),திரு.இராசசிங்கம்(லாறி), திரு.க.பொன்னம்பலம் (பொன்னுச்சாமி), போன்றவர்கள் காலத்தின் தேவையறிந்து தம்மாலான உதவிகளை மனமுவந்து நல்கினர் இவர்களது சேவை தொடர வேண்டும் என மாணவசமுதாயம் எதிர்பார்க்கின்றது.

1995ல் ஏற்பட்ட காலச் சூழற்சி காரணமாக இப்பாடசாலைச் சமுதாயமும் தென்மராட்சிக்கு புலம்பெயர நேரிட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோரும் பல்வேறு கிராமங்களில் குடியிருப்புக்களை அமைத்தமையால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒன்றிணைத்து ஒரே இடத்தில் இப்பாடசாலையை இயங்கவைக்க முடியவில்லை.

1995 நவம்பரில் அதிபர் வன்னிப் பிரதேசம் செல்ல நேரிட்டமையால்

பரஞ்சோதியின் பொறுப்புக்கள் யாவும் சாதுரியமும் வினைத்திறனும் கொண்ட திரு. த. சொக்கலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் 1995 நவெம்பர் தொடக்கம் 18.071996 வரை அதிபர் பதவியை வகித்தார். இவர் காலத்தில் ஆசிரியர்களின் மாத வேதனத்தைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களையெல்லாம் தனது சாதுரியத்தினால் தீர்த்து வைத்தார். அக்காலத்தின் நெருக்கடி நிலை காரணமாக இணைந்த பாடசாலையாக மட்டுவில் ஸ்கந்தபுர சந்திரோதய மகாவித்தியாலத்தில் இயங்கியது. பல்வேறுபட்ட துயரங்களுக் கிடையேயும் கல்விப்பயிரை வளர்ப்பதில் ஆசிரியர்களும் மாணவச் செல்வங்களும் ஆர்வம் காட்டினார்கள்.

மீண்டும் 1996 ஏப்பிறல் மாதம் அதிபரும் சில ஆசிரியர்களும் பரஞ்சோதியை தரிசிக்க வந்தபோது இப்பாடசாலையின் இருவாசல் இரும்புக் கதவுகளும் உருக்குலைத்திருந்தன. மதிற்சுவர்கள் சேதமாக்கப்பட்டிருந்தன. அலுவலகம் உடைக்கப்பட்டு ஆவணங்கள் யாவும் சிதைந்தும், தொலைந்தும், மழையில் நனைந்தும் வெளியே வீசப்பட்டும் காணப்பட்டன. பாடசாலைத் தளபாடங்களில் பெரும்பகுதி காணாமல் போயிருந்தன. பாடசாலையின் கூரைகள் தகர்க்கப்பட்டும் எஞ்சிய தளபாடங்கள் உடைந்த நிலையிலும் காணப்பட்டன. அதிபர் சக ஆசிரியர்களின் துணையுடன் கிடைத்தவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தார். அதிபர் கலைவாணி வாசிகசாலை நிர்வாகிகளின் துணையுடன் இருவாயில் இரும்புக் கதவுகளும் சீர்செய்யப்பட்டு இஸ்திரப்படுத்தப்பட்டன. உடைந்த மதிற்சுவர்கள் யாவும் திருத்தி அமைக்கப்பட்டு செப்பனிடப்பட்டன. கூரைப்பகுதி திருத்தி அமைக்கப்பட்டது.

1996 மே மாதம் 13 திகதி தொடக்கம் மாணவர் வரவு படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. பெரும்பாலான ஆசிரியர்கள் சமூகமளிக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் மிகுந்த சிரமத்தில் வகுப்புக்கள் நடைபெற்றன. தினசரி ஆசிரியர் வரவும் மாணவர் வரவும் திணைக்களத்திற்கும் படையணிக்கும் தெரிவிக்கப்பட்டது. அக்காலச்சூழலில் ஏற்பட்ட அமைதியற்ற வேளைகளில் மாணவர்கள் திகைப்பும் கலக்கமும் அடைந்தனர். இவ்வேளைகளில் அதிபர் சக ஆசிரியர்களின் துணையுடன் தனது சாதுரியத்தால் மாணவர் மனதில் அமைதியை ஏற்படுததினார்.

இவர் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதி குறைந்த காலமாக இருந்த போதிலும் அமைதியற்ற சூழலில் தனது வினைத்திறமையினால் பாடசாலையை செவ்வனே நிர்வகித்தார். இவரைத் தொடர்ந்து இணுவையூரைச் சேர்ந்த திரு. சுப்பையா சண்முககுமார் 19.07.1996 இருந்து அதிபர் பதவியை ஏற்றார். இளமையும் துடிப்பும் மிக்க செயல்வீரர் இவர். கல்வித்திணைக்கள நிதி ஒதுக்கீட்டிலிருந்து பூர்த்தியாக்கப்படாத நிலையில் இருந்த இரண்டு மாடிக்கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு பூரண பொலிவுடன் காட்சிதருகின்றது. இக்கட்டடத்தால் மாணவர் பெரு நன்மையடைந்துள்ளனர்.

சிதைவடைந்து விரிசலடைந்து மாணவர் தளபாடங்களை உரியமுறையில் பேணமுடியாத நிலையில் இருந்த நூற்றுநாற்பதடி நீளம் இருபதடி அகலம் கொண்ட பாடசாலையின் பிரதான மண்டபத்தின் தரைப்பகுதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு செப்பனிடப்பட்டது.

தரம் ஒன்றிற்கான செயற்பாட்டறை பூர்த்தியாக்கப்பட்டது. தரம் இரண்டிற்கான செயற்பாட்டறையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஜூன் நிறுவனத்தின் உதவியால் எழுபதடி நீளமும் இருபத்தைந்தடி அகலமும் கொண்ட மாடிக்கட்டடமொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் உதவியுடன் தளபாடத் தேவையின் பெரும்பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்விற்குப்பின் மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பொழுது மாணவர்கள் நீர் அருந்துவதற்கு உதவும் நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்திருந் தமையால் திரு. சி. கதிரவேலு ஆசிரியர் உதவியுடன் மீள்நீர் வினியோகம் பூர்த்தியாக் கப்பட்டது.

ஜீ. ரி. இசற் நிறுவனத்தினதும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினதும் உதவியுடன் ஆண்களுக்கான ஆறுபிரிவுகள் கொண்ட கழிப்பிட வசதி அமைக்கப்பட்டது. பெண்பிள்ளைகளுக்காக ஐந்து பிரிவுகள் கொண்ட கழிப்பிடமும் ஆசிரியைகளுக்கான இரண்டு பிரிவுகள் கொண்ட கழிப்பிடமும் அமைக்கப்பட்டன. இக்கட்டடங்களை நிர்மாணித்தமைக்கான தொழில்நுட்பக் கூலியினை றான் நிறுவனத்தினர் வழங்கினர்.

பட்டினிக்கெதிரான இயக்கத்தின் உதவியுடன் பாடசாலைக் கிணறு புனரமைக்கப்பட்டது.

பரஞ்சோதியின் தேவைகளை அறிந்து பொருளுதவி, ஆலோசனை, சேவைகள் வழங்கிய கல்வித்திணைக்களத்திற்கும், ஜீ.ரி.இசற் நிறுவனத்திற்கும், றான் நிறுவனத்திற்கும், பட்டினிக்கெதிரான இயக்கத்திற்கும் இப்பாடசாலைச் சமுதாயம் என்றும் நன்றியுடையதாய் இருக்கும்.

பாடசாலையின் வடஎல்லையில் நிறைவேற்றப்படாது இருந்த ஒருபகுதி மதிற்சுவர் பாடசாலை அபிவிருத்தி சங்க உதவியுடன் பூரணப்படுத்தபட்டது.

அதிபர் திரு. சு. சண்முககுமார் அவர்களின் அன்பளிப்பில் பாடசாலை முன்றலில் கல்வித் தெய்வம் சரஸ்வதியின் சிலை நிறுவப்பட்டது.

இப்பாடசாலையின் இலண்டன் கிளையினர் கல்வி அபிவிருத்திக்கான பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி, ஏனைய போட்டிகள், கலைநிகழ்வுகளுக்கான நிலையான நிதியை வங்கியில் வைப்பில் இடுவதற்கு முன்வந்துள்ளனர். இச்செயற் பாட்டில் முன்னின்று செயற்படும் இப்பாட சாலையின் பழைய மாணவரும் கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான பொறியியலாளர் திரு. த. செல்வறட்டணம் (முருகையா) அவர்களும் அவருடன் இணைந்து செயலாற்றும் எல்லா அன்பு உள்ளங்களுக்கும் பரஞ்சோதிச் சமூகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

திரு. சி. கார்த்திகேசு அவர்களின் நினைவாக அவரது சந்ததியினர் நிதியை வங்கியில் நிலையான வைப்பில் இடவும் அதன் வட்டிப் பணத்தில் இருந்து ஆண்டுதோறும் புலமைப்பரிசில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப்பரிசில் வழங்கவும் எண்ணியுள்ளனர். இவையாவும் பூர்த்தியடைந்து கற்றல், கற்பித்தற் செயற்பாட்டிற்கு உறுதுணையாய் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியர்களும் அதிபரின் செயற்பாடுகளுக்கு உதவியும் ஒத்தாசையும் நல்குவதோடு சிறந்த சேவையாற்றியும் வருகின்றனர். சிறந்த முறையில் வளர்ந்து வரும் இப்பாடசாலையில் சில குறைகளும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. கணனி யுகமாக மாறிவரும் இக்கால சூழலுக்கேற்ப கணனியின் அறிமுகம்தானும் இல்லாமல் இருக்கின்ற மாணவர்களின் ஏக்கம், விஞ்ஞான கூடம் அமையாது இருப்பது, மனையியல் கூடம் இல்லாமை, செயற்பாட்டறை, மாணவர்களுக்கு அவசியமான நூலகம் நிறுவப்படாமை போன்றவையாகும்.

இக்குறைபாடுகளை கல்வித்திணைக் களத்தின் உதவியோடு மட்டுமன்றி இவ்வூர் பெரியோர்கள், பெற்றோர்கள், நலன்விரும் பிகளின் ஒத்திசைவோடு படிப்படியாக இப்பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்யலாம் என்ற நம்பிக்கையுண்டு

என்பதனையும் இப்பாடசாலைச் சமுதாயம் கூறிக்கொள்கின்றது.

தவத்திரு கந்தர். வடிவேற் சுவாமியார் கந்தர்மடம் சிவகுருநாதப் பீடக் குருமணி தவத்திரு மகாதேவ சுவாமிகள் குடைச் சுவாமியார் என மக்களால் போற்றி வணங்கப்படும் சின்னத்தம்பிச் சுவாமியாரின் குருவான கந்தையாச் சுவாமியார் போன்ற அனுபூதிமான்கள் பலமுறை இப் பாடசாலையைத் தரிசித்து அருளாசி வழங்கி வாழ்த்தியுள்ளார்கள். இப்பெரும் பேறுபெற்ற இக்கலையகம் எதிர் காலத்தில் உயர் வகுப்புகள் கொண்டவளம் நிறைந்த கல்லூரியாக மிளிரும் என்பது இப்பாடசாலைச் சமுதாயத்தினது தளராத நம்பிக்கையாகும். இவை அனைத்தும் சிறப்பாக நிறைவேற கோண்டாவில் சிவபூதவராசப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

-சுபம்-

அன்பனே, பொழுதைப் பொன்னாக்கு ஒரு நிமிஷங்கூட வீணாக்காதே. யோசித்து பார். ஒரு நாளைக்கு 24 மணி நேரம் அதில் சுமார் எட்டு மணி நேரம் இளைப்பாறலாம். தேகப்பயிற்சி செய்ய, குளிக்க, துவைக்க, உண்ணவுடுக்க நான்கு மணி நேரம் வைத்துக்கொள். வயிற்றுப்பிழைப்புக்காகத் தொழில் புரிய 8 மணி நேரம் போகட்டும். இந்த 8 மணி நேரத்தைப் பெண்கள் வீட்டு வேலைகளிலும், ஆண்கள் வெளியே சென்று அலுவலகம் அல்லது தொழிற்சாலைகளிலும் கழிக்கலாம். மீதி 4 மணி நேரம் உள்ளது. அதை வீணாக்காதே. அறிவுப் பயிற்சிகளிலும் ஆன்மப் பயிற்சியிலும் அதைச் செலவிடு.

~ சுத்தானந்த பாரதியார்.

உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக்காதீர்கள்! அவற்றை வெளியே சொல்வது இழிவாகுமென்றால் அவற்றை எண்ணுவது அதையும்விட இழிவானது.

~ மகாத்மாகாந்தி

## ஆசிரியர் கழகம் - ௨00௨



**இருப்பவர்கள். →**

திருமதி. சு. அனுஷா, திரு. சி. கணேசமூர்த்தி (உபதலைவர்), திரு. சி. கிருஸ்ணானந்தன் (தலைவர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்), திருமதி. சா. கனகநாயகம் (பொருளாளர்).

**நிற்பவர்கள். →**

திருமதி. ப. சந்தானலக்சுமி (உபசெயலாளர்), திரு. த. சிவகுமாரன்,
திரு. சி. செந்தில்குமரன், செல்வி. ஐ. பகீரதி, திருமதி. ம. அருணாசலம் (செயலாளர்),

## ஆசிரியர் குழாம் - ௨00௨



**நிற்பவர்கள். →**

திரு. ப. மயூரதன், திரு. பா. பாலமுரளி, திரு. சி. செந்தில்குமரன், திருமதி. ப. சந்தானலக்சுமி,
செல்வி. ஐ. பகீரதி, திருமதி. சு. அனுஷா.

**இருப்பவர்கள். →**

திருமதி. ம. அருணாசலம், திருமதி. சா. கனகநாயகம், திரு. சி. கிருஸ்ணானந்தன், திரு. சு. சண்முககுமார் (அதிபர்), திரு. த. சொக்கலிங்கம் (உப அதிபர்), திரு. சி. கணேசமூர்த்தி, திரு. த. சிவகுமாரன்.

> **கோள் மயமாக்கலின் பரவல் ஆரம்பமாகத் தொடங்கியதிலிருந்து இந்நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்தலும், மாணவர்களின் வன்நடத்தைகள் எல்லை மீறுதலும், விழுமியங்களின் வீழ்ச்சியும் புள்ளி விபரங்களினால் எடுத்துக் கூறப்படுகின்றன.**

# கல்வியும் கோள் மயமாக்கலும்




**-பேராசிரியர் சபா.ஜெயராசா**
**(B.Ed,M.Ed,Ph.D)**
**(தலைவர் நுண்கலைத்துறை - யாழ் பல்கலைக்கழகம்)**


**வ**ளர்வுறும் நாடுகள் மீதான வலுப்பிரயோகத்தின் உலகளாவிய வடிவமே கோள் மயமாக்கல் (GLOBALIZATION) "உலகை ஒரு குடும்பமாக்குதல்" என்ற கௌரவமான மகுடத்தின் கீழ் நிகழும் தொடர்ச்சியான சுரண்டலுக்கு தளம் வகுக்கும் செயற்பாடாக இது அமைந்துள்ளது. சிறிய நாடுகளின் பொருளாதாரத்தில் மட்டுமன்றி கல்வியிலும், பண்பாட்டுப் பாரம்பரியங்களிலும் பாரிய தாக்கங்கள் ஏற்படுவதற்கு இந்த நிகழ்ச்சி வழியமைத்துக் கொடுக்கின்றது

கோள் மயமாக்கலின் நேர்ப் பரிமாணங்கள் என்ற வகையில் பின்வருவன சுட்டிக் காட்டப்படுகின்றன.

(1) உலகிலுள்ள அனைத்து சமூகங்களினதும் பண்பாடுகளினதும் தொடர்ச்சியான ஒன்றிணைப்பை அதிகரிக்கச் செய்தல்.

(2) தகவல் தொழினுட்ப முறைகளில் மேற்கூறிய செயற்பாட்டை விரிவுபடுத்துதல்.

(3) நாடுகளுக்கிடையேயான புரிந்துணர்வை வளர்க்கும் வண்ணம் பிரயாண முறையை விரிவுபடுத்துதல்.

(4) கல்விசார் பரிமாற்றங்களை நாடுகளுக் கிடையிலே அதிகரித்தல்.

(5) நாடுகளுக்கிடையே பண்பாட்டு இடைவினைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தல்.

(6) வளம் மிக்க நாடுகளின் தனியார் முதலீடுகளை கடல் கடந்த நாடுகளிலே செயற்படுத்தல்.

(7) வேகமாக வளர்ந்து வரும் புதிய தொழில் நுட்பங்களை உலகெங்கும் பரப்புதல்.

(8) பெரும் உற்பத்தி நிறுவனங்களுக்குரிய அகன்ற சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(9) கோள் மயமாக்கலை நெறிப்படுத்தும் புதிய சட்ட விதிகளை உருவாக்குதல்.

(10) கோள் மயமாக்கற் செயற்பாட்டைத் தீவிரப்படுத்தும் பொருத்தமான கருத்தியல்களையும்(IDEOLOGIES) நிறுவன ஒழுங்கமைப்புக்களையும் கட்டியெழுப்புதல்.

வளர்முக நாடுகளின் கல்விச் செயற்பாடுகளிலும், பண்பாட்டுக் கையளிப்பிலும், பாரம்பரியமான விழுமியங் களிலும் தொழிற்கட்டமைப்புக்களின் கோள் மயமாக்கல் பலவிதமான எதிர்மறைத் தாக்கங்கள் ஏற்படுதலை மிக நிதானமாகவும், அறிவு சார்ந்த புறவயத் தெளிவுடனும் நோக்க வேண்டியுள்ளது. பின்வரும் எதிர்மறைப் பண்புகள் முதலிலே பளிச்சீடு கொள்வதைக் காணலாம்.

(அ) கற்றவர்கள் மத்தியில் நிலவும் வேலையின்மைப் போக்கு அதிகரித்தல்.

(ஆ) தொழிற் பாதுகாப்புக் குன்றுதல்.

(இ) பாரம்பரியமான விவசாயத் துறைகள் நலிவுபெறுதல்.

(ஈ) உற்பத்தித் திறனிலும் நுகர்வுத் திறன்களே மேலோங்குதல்.

(உ) உலகளாவிய சுரண்டலுக்குரிய வலுவான தளம் அமைக்கப்படுதல்.

(ஊ) சூழல் விரைந்து மாசுபடுதல்.

(எ) வளர்வுறும் நாடுகளில் உள்ள பாரம்பரி-யமான கல்வி நிறுவனங்கள் வலுக்குன்றி நலிவடைதல்.

(ஏ) சமூக உதவித் திட்டங்களிலும், நிவார-ணங்களிலும், இலவச கல்வித் திட்டங்-களிலும் உதைப்பு ஏற்படுத்தப்படுதல்.

(ஐ) தன்னிறைவு கொண்ட நாடுகளின் சமநிலை-யைக் குலைத்துவிடுதல்.

(ஒ) மனித உடல் நலத்தைப் பாதிக்கும் புதிய பழக்க வழக்கத்திற்கு அடிமையாதல்.

கோள் மயமாக்கல் இலங்கையின் கல்விச் செயன்முறையில் பல்வேறு தாக்கங்களை பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையில் உருவாக்கப்பட்டு வரும் சர்வதேசப் பாடசாலைகள் இதன் நேரடியான தெறிப்பைக் காட்டுகின்றது. முறைசார் கல்வியின் ஆரம்பம், இடைநிலை மற்றும் உயர்நிலை மட்டங்களில் உருவாக்கப்படும் கலைத்திட்ட வடிவமைப்பு, பாட உள்ளடக்கம், பாடநூலாக்கம் முதலியவை மேலை நாடுகளில் பயிற்றுவிக்கப்பட்டு, மேலை நாட்டு மாதிரிகைகளை இங்கு கால் கோள் கொள்ளச் செய்யுமாறு கருத்தேற்றம் செய்யப்பட்ட நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகச் சந்தையிற் காணப்படும் ஒரு சில உத்தியோக வாய்ப்புக்குரிய நிலவரத்தைக் கருத்திற் கொண்டு முழுக் கல்வி முறைமையும் முடுக்கி விடப்படும் சமநிலைப் பிறழ்வு காணப்படுகின்றது. கோள் மயமாக்கலின் பிறிதொரு விளைவு ஆங்கிலக் கல்விக்குத் தரப்படும் மீண்டெழும் எழுச்சியாகும். இது ஒரு சில உயர்ந்தோருக்குரிய கல்விசார் அனுகூலங்களை மேலும் வளமாக்கும் செயற்பாட்டினை 'கௌரவமாக' முன்னெடுக்கின்றது.

கோள் மயமாக்கற் செயற்பாடு அறிவை ஒரு பண்டமாக (COMMODITY) மாற்றி வருகின்றது. அறிவின் உற்பத்தி, பங்கீடு, ஏற்றுமதி, இறக்குமதி முதலியவை இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் நிலைமை தீவிரமடையத் தொடங்கியுள்ளது. யதார்த்தங்களை உணர்த்தும் மெய்யறிவைத் தாழ்த்தி, பொருள் உற்பத்தியையும், சுரண்டலையும் மேம்படுத்தும் அறிவே மேலானது என்ற தீவிரப்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மானிடப் பண்புக் கற்கைகளுக்குரிய உற்சாகம் குறைக்கப்பட்டு வருகின்றது.

கோள் மயமாக்கற் செயற்பாடும் அதனோடிணைந்த வர்த்தகப் பாங்கும் இந்நாடு பல்லாண்டுகளாக அனுபவித்து வரும் இலவச கல்வித் திட்டத்திற்கு ஒரு வித பயமுறுத்தலை உருவாக்கி வருகின்றது, அறிவு ஓர் உற்பத்திப் பண்டமாக மாறும் பொழுது இலவசம் என்பது இல்லாதொழியும் பெயர்ச்சி வலுவடைகின்றது. இலவசம் தக்க வைக்கப்பட்டாலும், வர்த்தக நோக்கில் அது தரம் குறைந்த எல்லை நிலைப் பண்டமாக வழங்கப்படக்கூடிய சாத்தியம் ஏற்படலாம். இதனால் பிரதிகூலக் குழுவினரே மேலும் பாதிப்புக்கு உள்ளாவர். ஏற்கனவே இலங்கையின் பிரதிகூலக்குழுவினர் மத்தியில் பாடசாலை சேராமையும், இடைவிலகலும் கூடியளவில் இருத்தலைப் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

**கோள் மயமாக்கலின் பரவல் ஆரம்பமாகத் தொடங்கிய-திலிருந்து இந்நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்தலும், மாணவர்களின் வன்நடத்தைகள் எல்லை மீறுதலும், விழுமியங்களின் வீழ்ச்சியும் புள்ளி விபரங்களினால் எடுத்துக் கூறப்படு-கின்றன.**

கல்வியியலிற் கோள் மயமாக்கலின் நன்மைகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றன. நன்மைகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(1) பின்னைக் கைத்தொழிற் r% fjjபு (POST INDUSTRIAL SOCIETY) தீவிர போட்டிக்கு முகம் கொடுக்கக்கூடிய அதிக தரம் மிக்க மாணவர்களை உருவாக்க முடியும் என்ற முன்மொழிவு

(2) விரைந்து வளர்ச்சியுற்று வரும் நவீன தொழில்நுட்பமும் கல்வியும் ஒன்றிணைந்து

முன்னேற்றம் பெறும் என்ற எதிர்பார்ப்பு.

(3) கல்வி வாயிலாக மனித உரிமைகளை அறிதலும், பாதுகாத்தலும், சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்துதலும், மேம்பாடும் என்ற முனைப்பு

(4) கல்வியும் விழிப்புணர்வும் ஒன்றிணைந்து சமூகத்தில் பெண்களுக்குரிய உட்பொதியும் வலுவை அதிகரிக்கச் செய்யும் (EMPOWERMENT OF WOMEN) என்ற நம்பிக்கை.

(5) அரசு மற்றும் ஆட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஒழிவு மறைவு இன்மை (TRANSPARENCY) அதிகரிக்கும் என்ற ஆவல்.

(6) அறிவுப் பரிமாற்றம், அறிவு சார்ந்த புலமைப் பரிசில்கள் முதலியவை உலக ளாவிய முறையில் மேலும் வியாபகமடையும் என்ற முனைப்பு.

(7) பன்முகப் பண்பாடுகளை அறிவுபூர்வமாக உணர்தலும்(MULTICULTURAL AWARENESS) மதிப்பளித்தலும் என்ற செயற்பாடுகளுக்கு கல்வியையும் கலைத் திட்டத்தையும் கருவிகளாக்கும் செயற்பாடு வலிமை பெறும் என்ற உந்தல்.

(8) தொடர்பு சாதனங்களுக்கும் கல்வி க்குமிடையே உள்ள தொடர்புகளும் இடைவினைகளும் மேலும் சிறப்படையும் என்ற கணிப்பீடு.

(9) முன்னரிலும் கூடுதலான சமூக அசைவியக்கத்தை(SOCIAL MOBILITY) கல்வி ஏற்றப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு.


(10) கல்வி உலகுக்கும் வேலை உலகுக்குமிடையேயுள்ள பாரிய இடைவெளி சுருக்கப்படும் என்ற ஆவல்.

## REFERENCES


1. DAWSON , CHRISTOPRER , THE CRISIS OF WESTERN EDUCATION , SHEED AND WOOD , NEW YORK , 1961.
2. DELORS , JACQUES ETAL LEARNING THE TREASURE WITHIN , UNESCO , 1996.
3. LANDES , DAVID , THE WEALTH AND POVERTY OF NATIONS W. W. NORTUM AND CO , LONDON , 1999.
4. NATION INSTITUTE OF EDUCATION , REFORMING EDUCATION , UNFINISHED TASK , MAHARAGAMA , 2001.



**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72 ம் ஆண்டு நிறைவு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புற உளமார வாழ்த்துகிறேன்.**



**திரு. ஐ. சிங்கராசா**


ஓய்வு பெற்ற ஆசிரியர்

யாழ் கோண்டாவில் பரஞ்சோதி வத்தியாலயம்,

கோண்டாவில் வடக்கு,

கோண்டாவில்.

## பரஞ்சோதி மலர்க் குழு



**இருப்பவர்கள்.→**

திருமதி. சு. அனுஷா, திரு. சி. கணேசமூர்த்தி(துணைஆசிரியர்), திரு. எஸ். சண்முககுமார்(காப்பாளர்), திரு. பா.பாலமுரளி (பிரதமஆசிரியர்), திரு. த. சொக்கலிங்கம்(துணைக்காப்பாளர்) , திருமதி. சா. கனகநாயகம்,

**நிற்பவர்கள்.→**

திருமதி. ம. அருணபாசலம்,திருமதி. ப. சந்தானலக்சுமி, திரு. சி. செந்தில்குமரன், திரு. சி. கிருஸ்ணானந்தன், திரு. த. சிவகுமாரன், செல்வி. ஐ. பகீரதி.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



**இருப்பவர்கள். →**


திரு. பா. பாலமுரளி, திரு. ஆ. காசிநாதன், திரு. பொ. நடராசா, திரு. க. சிவாஜி, திரு. சு. சண்முககுமார் (தலைவர்), திரு. சி. கணேசமூர்த்தி (பொருளாளர்), திரு. செ. வைத்தியநாதன் (செயலாளர்), திரு. வ. இரத்தினதுரை, திரு. சி. கிருஷ்ணானந்தன்.


**நிற்பவர்கள்.→**

திருமதி. தி. வசந்தி, திருமதி. ம. பவளராணி, திருமதி. சு. புனிதமலர், திருமதி. ப. சந்தானலக்சுமி, செல்வி. சு. தர்சினி, திருமதி. வே. மாலினி, திருமதி. சு. அனுஷா, திருமதி. பா. சித்திராதேவி,

வரவின்மை - திரு. க. சிங்கராசா

# பாடசாலையின் எழில்மிகு தோற்றம்





> **இ-கற்கையில் இ-நூல்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இ-கற்கை என்பது இ-நூல்களைப் பயன்படுத்தல் என்பதை மட்டுமல்லாது மேலும் பலவிடயங்களை உள்ளடக்கிறது. வகுப்பறையில் கணனிகள் இருக்கும். ஆசிரியர் கற்பிக்கும் விடயத்தை எல்லோரும் தத்தம் கணனியில் பயின்று கொண்டிருப்பர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் ஆசிரியர் அதே வகுப்பறையில் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவர் தனது இடத்தில் இருந்து கொண்டே கற்பிக்கலாம்.**

# கணனிப்பயன்பாடு:
# இ-நூல்களும் இ-கற்கையும்




கலாநிதி சி மகேசன்

(B.Sc.(Jaffna), M.Sc.(Cardiff), Ph.D.(Wales), CEng, MBCS)

தலைவர், முதுநிலை விரிவுரையாளர்

கணனி விஞ்ஞானத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


**க**ணனி இன்று பலருக்கும் பலவிதத்தில் பயன்படும் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. '*பல்லூடகக் கணனிகள்*' எனப்படுகின்ற multi-media computers இன் அறிமுகத்தாலும் '*இணையம்*' எனப்படுகின்ற இன்ரெநெற் (the Internet) இன் அறிமுகத்தாலும் கணனியின் பயன்பாடு எங்கும் பரந்துபட்டுள்ளது. இ-அஞ்சல், இ-வங்கி, இ-வணிகம், இ-நூல்கள், இ-கற்கை, இ-தொலைக்காட்சி, இ-வானொலி என்பன கணனிகளின் புதிய வகைப் பயன்பாடுகளில் சிலவாகும். கணனிகளின் பயன்பாடுகள் பற்றிப் பொதுவாகவும், இ-நூல்கள், இ-கற்கை பற்றிக் குறிப்பாகவும் இச் சிறுகட்டுரையில் சுருக்கமாக நோக்குவோம்.

ஆரம்பத்தில் கணிதத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட, அறைகளை நிரப்புகின்ற அளவில் இருந்த கணனி இன்று திறன் மிக்க, உருசிறுத்த, பல்லூடகப் பயன்பாடுடையதாக, தகவல் தொடர்பு சாதனமாக, அத்தியாவசிய கருவியாக ஒரு புரட்சிகரப் பரிணாமத்தை அடைந்துள்ளது. இப்புரட்சி இன்று எங்கும் கணனி எதிலும் கணனி என்று அதிசயிக்கத்தக்க வகையில் கணனிப் பயன்பாட்டை வியாபிதமடைய வைத்திருக்கிறது.

பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களில் மட்டுமல்லாது, அரச/தனியார் நிறுவனங்கள், வங்கிகள், பாடசாலைகள் மற்றும் வீடுகளிலும் பலவித பயன்பாடுடைய சாதனமாகக் கணனி விளங்குகிறது. இதை இன்னொரு விதமாகக்கூறின், சிக்கல் மிக்க கணிதப் பிரசினங்களைத் தீர்ப்பதற்கும், புதிய புதிய செயற்பாட்டுத் தொகுதி, மற்றும் நானாவித கணிமங்களை உருவாக்கவும், ஆய்வுசாலை உபகரணங்களைக் கட்டுப்படுத்தி இயக்கவும், பாரிய தரவுத்தளங்களை அமைத்து நானாவித அலுவலக நடவடிக்கைகளை தன்னியக்க முறைகளினால் இலகுபடுத்தவும், இயந்திர மற்றும் கட்டட வடிவமைப்புகளுக்கும், விமானிப்பயிற்சி போன்ற போலித்தல்களுக்கும். இசை மற்றும் திரைப்பட ஆக்கங்களுக்கும், சேய்கணனிப் பயன்பாடு, கோப்பு மாற்றுகை, அஞ்சல், தொலைநகல், உரையாடல், தொலைபேசி, காட்சித் தொலைபேசி போன்ற பல்வேறு தொலைத் தொடர்புத் தேவை களுக்கும், வங்கி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும், ஆவணக்களஞ்சிய மாகவும், ஆரம்ப/உயர் கல்வி கற்றலுக்கும், இசை, திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி விளையாட்டுப் போன்ற கலை கேளிக்கைகளுக்கும், மற்றும் அச்சக வேலை களுக்கும் மட்டுமல்லாது

நிபுணர்களைப் போன்று தீர்மானம் எடுக்கக்கூடிய நிபுணத்துவத் தொகுதிகளாகவும், "றோபோ" (Robot) எனப்படுகின்ற வேறுபட்ட திறமைகளுடைய இயந்திர மனிதர்களாகவும் கணனி பயன்படுகின்றது.

இவ்வளவிற்குக் கணனியின் பயன்பாடு பரந்துபட்டுக் காணப்படுவதற்குக் காரணம் கணனித்தொழில்நுட்ப மேம்பாட்டுடன் தொலைத்தொடர்பு மேம்பாடும் இணைந்துகொண்டதுதான். "அபகஸ்"(abacus) எனப்படுகின்ற எண்சட்டத்தில் தொடங்கி, கூட்டல் இயந்திரம், பகுப்பு இயந்திரம் என ஆய்வுக்குட்பட்டு, வால்வுக்கணனிகளாக, ஊடதடையிக்கணனிகளாக, தொகுப்புச்சுற்றுக்கணனிகளாக மாற்றம் பெற்று நுண்முறைப்படுத்திக் கணனிகளாக பல்லூடகப்பயன்பாட்டிற்கும் (பல்லூடகம்-வாசகம், ஒலி, படம்) உகந்ததாக மேம்பாடடைந்துள்ளது. மறுபுறம், பறவைவிடு தூதில் ஆரம்பித்து, புத்தகம், பத்திரிகை, தொலைபேசி, வானொலி, பேசும்படம், தொலைக்காட்சி, செய்மதி எனப் பல்வேறு படிகளூடு இன்றைய செல்லிடத் தொலைபேசி வரை வளர்ந்துள்ளது தொலைத்தொடர்பு நுட்பம். பல சகாப்தங்களாக சமாந்தரமாகத் தனித்தனியே வளர்ந்துவந்த இவ்விரு நுட்பங்களும் அண்மித்த தசாப்தத்தில் ஐக்கியமாகியுள்ளன. இப்பெரு நுட்பங்களினதும் ஐக்கியமே '*தகவல் தொழில் நுட்பம்*' (Information Technology - IT) எனப்பெயர் பெற்றுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் முக்கிய பெறுபேறாக விளங்குவது '*இணையம்*' (the Internet) எனப்படுகின்ற வலையிடைவலை ஆகும். 1969இன் பிற்பகுதியில் நான்கு கணனிகளை தொடர்பாடலுக்காக இணைத்து வெற்றிகண்டார்கள் DARPA எனப்படுகின்ற ஐக்கிய அமெரிக்க பாதுகாப்பு உயர் ஆராய்ச்சி செயல்திட்ட முகவர்கள்! இவ்வெற்றி கணனி வலையமைவு எனும் புதிய பரிணாமத்தை உருவாக்கியது. உள்ளக வலையமைவு, நகரிடை வலையமைவு, விரிபரப்பு வலையமைவு என வேறுபட்ட பரிமாண வலையமைவுகள் உருவாகி அண்மை, சேய்மைக் கணனிகளின் தொடர்பாடல் ஏதுவாகியது. இணையம் என்பது இவ்வாறான பல வலையமைவுகளை உள்ளடக்கி அவற்றை இணைக்கின்ற ஒரு அமைப்பேயாகும். அதுவே உலகின் மிகப்பெரிய விரிபரப்பு வலையமைவாகும்.

இணையம் பொதுமக்களிடையே 1990களின் பிற்பகுதியில்தான் பிரபல்யம் பெற்றது என்று கூறலாம். 1990களின் நடுப்பகுதிவரை பல்கலைக்கழகம், மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டது. முக்கியமாக தூரஉள்ள கணனிகளின் பயன்படுத்தலுக்கும், சிறிய கோப்புப் பரிமாற்றங்களுக்கும், வாசகங்களைக் கொண்ட இலத்திரனியல் அஞ்சல் (மின்னஞ்சல்) பரிமாற்றத்திற்கும் பயன்பட்டது எனலாம்.

ஒரு நிறுவனத்திலுள்ள வினைத்திறன் மிக்க, விலையுயர்ந்த மீகணனி (super computer) ஒன்றை தூரவுள்ள வேறு நிறுவத்தினர் தமது இடத்தில் இருந்துகொண்டே அக்கணனியை தமது தேவைக்குப் பயன்படுத்த முடியும். பணத்தையும் நேரத்தையும் உத்தமமாகப் பயன்படுத்தக்கூடிய இத்தகைய வசதி சேய்கணனிப் பயன்பாட்டின் முக்கியமான அநுகூலமாகும்.

தேவையான தரவுகளையோ அல்லது வேறு தகவல்களையோ ஒரு கணனியிலிருந்து இன்னொரு கணனிக்கு '*சுமை இறக்கம்*' செய்யும் வசதி, கோப்புப்பரிமாற்ற வசதியாகும். இதனாலும் நேரவிரயம் வெகுவாகக் குறைக்கப்பட்டு தேவையான தகவல்களும் தரவுகளும் விரைவாகக் கிடைக்கப்பெற்றுப் பயன்பாட்டிற்கு உதவும். தரவுகளும், தகவலகளும் கணனிச் சேமிப்பு உபாயங்களில் (storage devices) '*கோப்புகளாக*' சேமித்து வைக்கப்படுகின்றன.

மூன்றாவது முக்கிய பயன்பாடான இ-அஞ்சல் (இலத்திரனியல் அஞ்சல் என்பதன்

சுருக்க வடிவமாகிய இது மின்அஞ்சல் எனவும் அழைக்கப்படுகிறது) என்பது ஒருவர் ஒரு கணனியிலிருந்து கணனி வலையமைவூடாக இன்னொரு கணனிப் பயன்படுத்துநருக்கு அனுப்பும் கடிதமாகும். சாதாரண அஞ்சல் போலவே இதற்கும் முகவரி தேவைப்படுகிறது. முகவரி எங்கே யாருக்கு அஞ்சல் அனுப்பப்பட வேண்டும் என்ற விபரங்களைக் கொண்டிருக்கும். உதாரணமாக, mvitha@sltnet.lk, mahesans@jfn.ac.lk, smn@cs.cf.ac.uk, எனும் மின்னஞ்சல் முகவரிகளில் mvitha, mahesans, smn என்பன முகவரியாளர்களது (குறியீட்டுப்) பெயர்களையும், sltnet.lk, jfn.ac.lk, cs.cf.ac.uk என்பன அவ்வவ் முகவரியாளர்களது அஞ்சல்சேவைக் கணனி அமைந்துள்ள ஆட்சியையும் குறிக்கிறது. இந்த விபரங்களைக் கொண்டு அஞ்சல்கள் குறிப்பிட்ட கணனிக்குச் செல்லும். அஞ்சல்சேவைக் கணனியைப் பயன்படுத்தும் போது தமக்குரிய அஞ்சல் ஏதும் வந்துள்ளதா என அறிந்து அஞ்சலைப் பெற்றுக்கொள்வர். ஒரு குறிப்பிட்ட ஆட்சியில் அமைந்துள்ள அஞ்சல்சேவைக் கணனியில் பதியப்பெற்ற ஒவ்வொரு பயன்படுத்துநருக்கும் ஒவ்வொரு குறியீட்டுப்பெயர் இருக்கும். உதாரணமாக, hotmail.com எனும் ஆட்சியில் suganthan குறியீட்டுப்பெயருடன் ஒருவர் தன்னைப் பதிவுசெய்து கொண்டால் இன்னொருவர் அப்பெயரில் பதிவுசெய்ய முடியாது. suganthan_s என்றோ ssuganthan என்றோ suganthan1989 அல்லது வேறு ஆனால் இதுவரை பதிவுசெய்யாத பெயரைத் தெரிவு செய்யவேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட ஆட்சியில் பதியப்பெற்ற ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான குறியீட்டுப்பெயர் இருக்கும். அதனால் *குறியீட்டுப்பெயர்;ஆட்சிப்பெயர்* எனும் வடிவில் அமைகின்ற முகவரியும் ஒரு தனியானதாக இருக்கும்.

கோப்புப் பரிமாற்றத்தில் கோப்புகளின் அளவு ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. இன்று பரிமாறிக்கொள்ளக் கூடிய ஒலி, மற்றும் அசையும்/அசையா சித்திரங்களுக்கான தரவுகள் ஆரம்பத்தில் பரிமாற்றத்துக் குட்படவில்லை எனலாம். இவற்றைச் சேமிக்க மிகப்பெரிய அளவு கோப்புகள் தேவை. அவ்வாறே, மின்னஞ் சலிலும் வாசகசெய்திகள் மட்டுமே அனுப்ப/பெறப்பட்டன. செயற்பாட்டு வேகத்திலும், நினைவக, சேமிப்புக்களஞ்சிய அளவிலும், பரிமாற்றவேகத்திலும் சிறந்து விளங்குகின்ற இன்றைய கணனிகள் மூலம் மிகப்பெரிய அளவு கோப்புகளையும் குறுகிய நேரத்துள் பரிமாறிக்கொள்ள முடிகிறது. இதனால் வாசக செய்தி மட்டுமல்லாது. ஒலி மற்றும் காட்சியுடன் சேர்ந்த செய்திகள், பல்வகை ஆவணங்கள் போன்றவற்றையும் அனுப்ப/பெற முடிகிறது.

மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறுவதற்குக் காரணமாக இருந்தது www (w3 அல்லது world wide web அல்லது the web) என்கின்ற வசதியின் அறிமுகந்தான். இதன் அறிமுகத்தினால் இணையத்தில் பெறக்கூடிய தகவல்களை இலகுவாக அடையமுடிந்தது. இவ்வாறு தகவல் பெறக்கூடிய தளங்கள் 'இணையத் தளங்கள்' (websites) எனப்பட்டன. இவ்வசதியின் காரணமாக பல புதிய தளங்கள் புதிதுபுதிதாய் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தளத்திற்கும் முகவரி (பெயர்) இருக்கும். http://www.cmb.ac.lk என்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் இணையத்தளமாகும்.

http://www.jfn.ac.lk யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கென அமைய இருக்கும் இணையத் தளமாகும். www அமைவதற்கு அடிப்படையானது http (hypertext transfer protocol) எனப்படும் வழக்காறாகும். ஓர் இணையப்பக்கம் (இணையத் தளம் ஒன்றிலிருந்து ஒரு தருணத்தில் பார்க்கின்ற ஆவணம்) வேறு இணையப் பக்கங்களுக்கு தொடுப்புடைய சுட்டிகளைக் கொண்டிருக்கும். இச்சுட்டிகள் மூலம் இலகுவாக அது தொடுக்கின்ற பகுதியை உடனே பார்க்கலாம். அப்பகுதி அதே தளத்தில் அதே பக்கத்தில் அல்லது

வேறுபக்கத்தில் இருக்கலாம், அல்லது உலகின் மறுகோடியிலுள்ள தளத்திலுள்ள பக்கத்தில் இருக்கலாம். அது எங்கே இருக்கின்றதென பயன்படுத்துநர் கவலைப்படத் தேவையில்லை. இத்தகைய வசதியை அளிப்பது http என்கின்ற வழக்காறேயாகும்.

இவ்வாறு தளங்களை அமைத்து வெறும் ஆவணக்களஞ்சியமாக மட்டுமல்லாது தங்கள் தங்கள் தொழிற்பாடுகளையும் இணைய வலையமைவூடு புரிய ஆரம்பித்துள்ளார்கள். வங்கிகள், தானியங்கி இயந்திரங்களை அமைத்தும், இணையத் தளங்களை அமைத்தும் பணம்பெறல், பணமாற்றம் போன்ற நானாவித வங்கிச் சேவைகளையும் இலகுபடுத் தியுள்ளனர். வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ஒருவர் தனது வெளிநாட்டுவங்கி அட்டையைப் யாழ்ப்பாண வங்கி ஒன்றிலி ருக்கும் இயந்திரத்திலிட்டு பணத்தைப் பெறுகின்றார். இதுபோல பல வசதிகள் இ-வங்கி நடைமுறையில் உண்டு.

இ-வங்கி செயல்பாடுகள் இ-வணிகத்தை நடைமுறைப்படுத்த ஏதுவாக்கின. வர்த்தக நிறுவனம் ஒன்றின் இணையத்தளத்திற்கு சென்று எமக்குத் தேவையான பொருட்களை கணனியின் காட்சித்திரையில் இருந்து தெரிவு செய்து, அதற்கான பணத்தை அவர்கள் கணக்கிற்குச் செலுத்துமாறு எமது வங்கிக்கு கோரிக்கைக் கட்டளை விடுத்து பொருட்களை ஓரிரு நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இவை யாவற்றையும் வீட்டிலி ருந்தவாறே இணையத்தில் இணைக்கப்பட்ட எமது கணனியூடு செய்யமுடிகிறது. இவ்வாறான இ-வணிகம் மூலம் புத்தகங்கள், வீடியோ நாடாக்கள், வீட்டு நாளாந்த பாவனைப் பொருட்கள், ஆடைகள் எனப் பல்வேறுபட்ட பொருள் வர்த்தகமும் நடைமுறையில் இருப்பினும் சில வகைப் பொருட்களுக்கு இவ்வணிக முறை எவ்வளவிற்கு நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் (சேலைக்குப் பொருத்தமாக சட்டைத்துணி வாங்கல்) அல்லது எவ்வளவு தூரம் சாத்தியம் (கார் வாங்குதல்) என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இவ்வாறு இ-, இ- என்று எல்லாம் இலத்திரனியல் சார்ந்து நிற்பது போல் நூல்களும், கலைக்களஞ்சியங்களும் கல்வி முறையும் இலத்திரனியல் சார்ந்து இ-நூல்கள் (e-books), மற்றும் இ-கற்கை (e-learning) எனப்படுகின்றன. இவற்றைச் சிறிது விரிவாக நோக்குவோம்.

கற்க, புதிதாய் அறிய, அறிவை வளர்க்க இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கும் எதையும் இ-நூல் எனக்கூறமுடியும். இ-நூல் பலவடிவகையில் இருக்கின்றன. சாதாரண வாசக கோப்பாக (text files), இணையப்பக்கம் போன்ற அமைப்பில் (html, xml, etc. ), PDF மற்றும் PS எனும் அச்சுப்பதிதயார் நிலை வடிவங்கள், மற்றும் கணிம/இ-நூல் உருவாக்குநர் வடிவமைக்கும் பிரத்தியேக வடிவங்களிலும் இருக்கும். இ-நூல்களின் தனித்துவத்தை சொல்லிப்புரிய வைப்பது கடினம். பயன்படுத்தும் போதுதான் அதன் மகத்துவம் தெரியும். சாதாரண நூல்களில் பெறக்கூடிய அநுகூலங்களுடன் இன்னும் பற்பல உண்டு. (ஆனால் இ-நூலைப் படிப்பதற்குக் கணனி வேண்டும், சாதாரண நூல்களைப் படிக்க நல்லவெளிச்சம் போதும். நின்றும், கிடந்தும், திரிந்தும் இந்நூல்களைப் படிக்கலாம் என்பதும் உண்மைதான். ஆனாலும் இவ்வாறெல்லாம் பயன்படுத்தக் கூடிய கணனிகள் விரைவில் கிடைக்கும் என்று கூறினால் அது மிகையல்ல).

இ-நூல்கள் பல விடயங்களில் சாதாரண நூல்களிலிருந்தும் வேறுபட்டு சிறப்படை கின்றன. அவை பல அநுகூலங்களுக்கு ஏதுவாக இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

- இ-நூல்கள் இசை, பேச்சு, சத்தம் என வேறுபட்ட ஒலிவடிவங்களைக் கொண்டிருக்கும். சிங்கம் கர்ச்சிக்கும் என்றால் கர்ஜனையைக் காதால் கேட்டு அறியக்கூடியதாக இருக்கும். திமிங்கிலமிடும் சத்தம் எப்படியிருக்கும் எனக் கேட்டுணரலாம்.

காலையில் பாடப்படும் ராகம் பூபாளம் என்றால் அவ்விராகம் எப்படியான தெனக் கேட்டு அறியமுடியும். இவ்வாறே பாடல்களையும் கேட்டுக் கேட்டுப் படிக்கலாம். சந்தரனில் காலடிவைத்தபோது நீல் ஆம்ஸ்ரோங் என்ன சொன்னார் என அவர் குரலிலேயே கேட்கலாம். இத்தகைய பலவித ஒலி வடிவங்களையும் உள்ளடக்கியதாக இ-நூல் அமைய முடியும். சிறார்களுக்கு அ, ஆ, இ, ஈ . . . என்று A, B, C, D. . . என்று சொல்லிச் சொல்லி இ-நூல்கள் கற்பிக்கும்.

- இ-நூல்களில் படங்கள் இருக்கும். அசையாப் படங்கள், தொடரியக்கப படங்கள், அசையும் படங்கள். மயில் அழகாக ஆடும். டொல்ஃபின் பந்தடிக்கும் நேரே பார்ப்பது போல் பார்க்கலாம். இருதயம் துடிக்கிறது, இரத்தம் பாய்கிறது, சுவாப்பை விரிகிறது, இரத்தம் சுத்திகரிக் கப்டுகிறது என இரத்த சுற்றோட் டத்தை தொடரியக்கப்படமாக் காட்டலாம். சொல்லி விளக்குதலிலும் இத்தகைய படங்கள் மூலம் இலகுவாகவும் தெளிவாகவும் விளக்க முடியும். அத்துடன் நாம் இலகுவில் பார்க்க முடியாதவற்றையும் (சுவாசத் தொகுதியின் தொழிற்பாடு, எரிமலை வெடிப்பு) தத்ரூபமாக அறியமுடியும்.
- இ-நூல்கள் கையடக்கமானவை. ஓர் அலுமாரியை நிரப்புகின்ற அடங் கன்களை இரண்டு மூன்று அடக்கத் தட்டுக்களிலேயே (compact discs) அடக்கிவிடலாம்.
- ஆசான் இல்லாமலே பல விடயங்களைக் கற்கலாம். பயிற்சி களைச் செய்யலாம். சரியான விடைகளுக்குப் பாராட்டுப்பெறலாம். விடை தெரியாவிடின் சரியான விடையறிய ஜாடை உதவி பெறலாம், இன்னமும் முடியாவிட்டால் விடையை அறிந்து கொள்ளலாம். பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்யும் போது வேறுவேறு வினாக்களைப் பெறலாம். சிறுவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கும் அம்சங்கள் உள்ளடக் கப்பட்டிருப்பதால் சிறுவர்கள் விரும்பி விரும்பி திரும்பத் திரும்ப இ-நூல்களைப் பயன்படுத்திப் பலன்பெறுவர்.
- கணனி வலையமைவில் ஓர் இ-நூலை ஒரே நேரத்தில் பலர் பயன்படுத்தி தாம்விரும்பிய பக்கத்தைப் படிக்கலாம். நூலின் பக்கங்களை பல்லூடக ஒளியெறிகருவி மூலம் ஒரு திரையில் பல மாணவரும் பார்த்துப் படிக்கும் வண்ணம் பெரிதாகத் தோன்றச் செய்யலாம். சாதாரண புத்தகங்களின் பக்கங்களையும் இவ்வாறு தோன்றச் செய்யலாம் எனினும் இ-நூலின் பக்கங்களை தோன்றச்செய்வது இயல்பாக, சுலபமாகும்.

இவற்றை விட ஒரு குறிப்பிட்ட விடயத்தைக் கணப்பொழுதில் தேடிப் பிடித்தல். குறிப்பிட்ட அத்தியாயத்திற்குள உடன் செல்லல், பாடம் சார்ந்து தேடல் எனப் பல அநுகூல அம்சங்களைக் கொண்டிருக்கும் இ-நூல்கள் கையாள்வதற்கு இலகுவானவை. சோர்வின்றி விருப்புடன் பயன்படுத்தலாம். மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்.

இ-நூல்கள் சிறுவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அரிவரிப்பாடம் முதல், கணிதம், விஞ்ஞானம் எனப் பலவிட யங்களிலும் சிறுவர்களுக்கென இருக்கின்றன. சிறுவர்கள் விரும்பிப் படிக்கின்ற வகையில் அசையும் சித்திரங்கள், ஒலி விநோதங்கள், வேடிக்கைக் காட்சிகள், விளையாட்டுக்கள், மற்றும் பல உற்சாகமூட்டும் உளவியல் நுட்பங்கள்சேர்அம்சங்களை உள்ளார்ந்தமாகக் கொண்டிருக்கும் அவற்றைக் கண்ட மாத்திரத்திலேயே சிறார்கள் குதூகலிக் கிறார்கள். உளவியலாளர்கள் பரிந்து ரைக்கின்ற *குதூகலத்தூடு கல்வி* என்ற சிறார்களுக்கான கல்விமுறைக்கு உகந்த

வகையில் இ-நூல்கள் அமைந்துள்ளன. அப்படித்தான் அமையவேண்டும். அப்படி அமைந்த நூல்களால் ஏற்படுகின்ற அறிவு வளர்ச்சியின் அபிரிமிதத்தைக் காணமுடிகிறது. இது சிறார்களுக்கு மட்டுமல்ல, வளர்ந்தவர் களுக்கும் சாலப்பொருந்தும்.


அரிவரி சிறுவர்கள், முதல் ஆராய்ச்சியாளர் வரை பலமட்டத்தினருக்கும் இ-நூல்கள் பலவிதத்திலும் பயன்படுகின்றன, இ-நூல்கள்/ பயிற்சிகள் பல இணையத்தளங்களிலிருந்து இலவசமாகப் பெறலாம். பணம் செலுத்திப் பெறலாம். மேலும், அடக்கத்தட்டாக புத்தகசாலைகளிலும், நூலகங்களிலும் பெற்றுப் பயனடையலாம்.

இலத்திரனியல் சார் அம்சங்களில் இ-நூல்களையடுத்து இ-கற்கை பற்றிப் பார்ப்போம். **இ-கற்கையில் இ-நூல்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இ-கற்கை என்பது இ-நூல்களைப் பயன்படுத்தல் என்பதை மட்டுமல்லாது மேலும் பலவிடயங்களை உள்ளடக்கிறது. வகுப்பறையில் கணனிகள் இருக்கும். ஆசிரியர் கற்பிக்கும் விடையத்தை எல்லோரும் தத்தம் கணனியில் பயின்று கொண்டிருப்பர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் ஆசிரியர் அதே வகுப்பறையில் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவர் தனது இடத்தில் இருந்து கொண்டே கற்பிக்கலாம்.** மாணவருடன் உரையாடலாம். அவர்கள் சந்தேகங்களைத் தீர்க்கலாம். இம்முறையில் ஒரே நேரத்தில் பல வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கலாம். ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படும். போக்குவரத்து சிரமங்களும் இல்லை. ஆசிரியர் ஏற்கனவே தயாரித்த இ-நூலைப் படிக்க பல அவகாசங்கள் இருக்குமாகையால் ஆசிரியருடனான நேரடி சந்திப்பில் ஐயங்களைத் தீர்க்கவும் பாடவிடயங்கள் குறித்து கலந்துரையாடவும் போதிய நேரம் கிடைக்கிறது. இ-அஞ்சல், இ-உரையாடல் மூலம் தமது குழாம் மாணவர்களுடன், ஆசிரியர் மற்றும் வேற்றிடப் பண்டிதர்களுடன் கலந்துரையாடல், ஐயந்தீர்த்தல் என்பனவும் இ-கற்கையின் அம்சமாகக் கொள்ள முடியும். பல்கலைக்கழக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இ-கற்கை பாடசாலை மட்டங்களிலும் நடைமுறைக்குவரும். குறிப்பாக ஆரம்ப பாடசாலைகளில் இ-நூல்களை அறிமுகம் செய்து இ-கற்கையை ஆரம்பிக்கலாம். இவ்விதத்தில் கணனிகளைப் பயன்படுத்த சிறுவர்களைப் பயிற்றுவது மிகவும் இலகுவான ஒன்றாகும். கணனி உள்ள வீடுகளில் கணனியை அதிகம் விரும்பிப் பயன்படுத்துபவர் சிறுவர்களாகவே காணப் படுகின்றனர்.

கணனி நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு நுட்பங்களின் அபிரிதமான வளர்ச்சியும், அவ்விரு நுட்பங்களின் ஐக்கியம் தந்த தகவல் தொழில் நுட்பப் பெறுதிகளாக அமைந்த பல கணனிப்பயன்பாடுகள் பற்றிப் பொதுவாகவும், இ-நூல்கள், இ-கற்கை பற்றிக் குறிப்பாகவும் சுருக்கமாக இச்சிறு கட்டுரையில் பார்த்தோம். இவை ஒவ்வொன்று பற்றியும் விரிவாகப் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே போகலாம். அதிவேகத்துடன் மேம்பாடடையும் தகவல் தொழில்நுட்பம் அதன் பயன்பாடுகளை மேம்படச்செய்வதுடன் இன்னும் பல புதிய பயன்பாடுகளையும் தோற்றுவிக்கும். புதுமை நாடிச்செல்லும் நாளைய சமூகத்தை வழிநடத்தப்போகின்ற இன்றைய மாணவர் களை இவ்வுலகிற்கேற்பத் தயார்செய்ய வேண்டும். இத் தயார்செய்தல் ஆரம்ப


பாடசாலைகளிலேயே ஆரம்பித்தல் வேண்டும். அதுவே மிகச்சிறந்த பெறுபேற்றைத் தரும். நாடிச் செல்லும் நாளைய சமூகத்தை வழிநடத்தப்போகின்ற இன்றைய மாணவர் களை இவ்வுலகிற்கேற்பத் தயார்செய்ய வேண்டும். இத் தயார்செய்தல் ஆரம்ப பாடசாலைகளிலேயே ஆரம்பித்தல் வேண்டும். அதுவே மிகச்சிறந்த பெறுபேற்றைத் தரும்.


**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72 ம் ஆண்டு நிறைவு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புற மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.**



**திரு. ந. ஜெயபாலசிங்கம் (யாழி)**
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72 ம் ஆண்டு நிறைவு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புற இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.**





**திரு.சீ. குணநாயகம்**
முன்னாள் பாடசாலை அ.ச. செயலாளர்,
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

# தமிழ்த் தின விழா 2002

பிரதம விருந்தினர் திருமதி.க.சுப்பிரமணியம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் மேடைக்கு அழைத்து வரப்படும்போது.





மாணவிகளின் நடன நிகழ்வுகளின் போது




சிறுவர் நாடகத்தில் மாணவர்கள்

**19 ஆம் நூற்றாண்டு காலனித்துவ காலம் தொடக்கம் பொருளாதர நடவடிக்கைகளில் அந்நிய முதலீடு பங்கேற்றுள்ளது. எவ்வாறெனினும் இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இந் நேரடி முதலீடு தன்மையிலும், செயற்பாடுகளிலும் குறிப்பிடத் தக்களவு மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டது. இவ்வகையில் உலகளாவிய நிலையில் அந்நிய முதலீடுகளின் முக்கியத்துவம் ஆழமாக அதேவேளை ஒருவிரிவான பங்கையும் வகிக்கின்றது.**

# இலங்கையின் திறந்த பொருளாதாரமும் அந்நிய முதலீடும்



**திரு. க. தேவராஜா,**
**தலைவர்,**
வணிகத்துறை,
முகாமைக்கற்கைகள் வணிக பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

சுதந்திரமடைந்த காலம்தொட்டு அபிவிருத்திக்கான ஒரு சாதனமாகக் கைத்தொழில் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வெவ்வேறு கொள்கைகளின் மூலம் கைத்தொழில் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு காலமும் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் வேறுபட்ட வழிமுறைகளைப் பின்பற்றுதல் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி என்பதை ஏற்படுத்த முற்பட்டன. இவ்வகையில் இலங்கை சுதந்திரத்திற்குப் பிற்பட்ட குறுகிய காலப்பகுதியில் குடியேற்ற நாட்டுவாத தலையிடாக் கொள்கையே பின்பற்றியது. இக்கொள்கையின் கீழ் நாட்டுக்குத் தேவையான அனைத்துக் கைத்தொழில் பொருட்களும் இறக்குமதி மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. இதற்கான வருவாயைப் பெருந்தோட்ட ஏற்றுமதி வருவாயின் மூலம் பூர்த்தி செய்தது. எனினும், இக்கொள்கையினால் 1950 இன் பின் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதாவது,

1. ஏற்றுமதி விலைக்குறைப்பு.
2. வர்த்தக மாற்றுவீதம் மோசமடைந்தமை
3. சென்மதிநிலுவைப் பிரச்சனை
4. வெளிநாட்டுச்சொத்துக்களின் வீழ்ச்சி

இந்நிலைகளினால் இறக்குமதிச் செலவீட்டை எதிர்கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது. இவ் இறக்குமதிக் கட்டுப்பாடு அப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யவேண்டிய தேவைகளை ஏற்படுத்த ஏனைய குறைவிருத்தி நாடுகளில் 1950 இல் கடைப்பிடித்து வந்த இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கையையே கைத்தொழிலாக்கத்திற்கான ஓர் உபாயமாகக் கருதி இலங்கையும் . இக்கொள்கை யைப் பின்பற்றியது. இக்கொள்கையானது மரபுவழி ஏற்றுமதி நிலையிலிருந்த பொருளா தாரத்தை சில அமைப்பு ரீதியான மாற்றங்களு க்குள் முடக்கிவிடுவதாக இருந்தது. இத்துடன் கைத்தொழில்களை உருவாக்குவதையும் தூண்டிவிட்டது.

இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையானது பொருளாதாரத்தில் அபிவிருத்திக்கோ அல்லது கைத்தொழில் துறையின் பாரிய மேம்பாட்டிற்கோ வழியமைத்துக் கொடுத்தது

என்று கூறிவிட முடியாது. அதற்குப் பதிலாக இலங்கைப் பொருளாதாரம் ஏற்கனவே எதிர்நோக்கியிருந்த பல பிரச்சனைகளை மேலும் உயிரூட்டிவிடுவதாகவும் அதனுடன் இணைந்த வகையில் வேறுபல நெருக்கடி களையும் உருவாக்கியது. இவ் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் பின்னடைவுகளை அல்லது குறைபாடுகளைப் பின்வரும் நிலைகளில் சுட்டிக்காட்டலாம்.

1. வெளிநாட்டு உள்ளீடுகளில் கூடியளவு தங்கியிருத்தல்.
2. சென்மதிநிலுவைப் பிரச்சனை
3. வேலையின்மை அதிகரிப்பு
4. பொதுத்துறைக் கைத்தொழில்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் அதாவது,
    - பல பொதுத்துறைத் தாபனங்கள் நட்டத்தில் இயங்கியமை
    - அதிகமான பொதுத் துறைத் தாபனங்கள் முதல் செறிவுடையதாகக் காணப்பட்டமை. நவீன தொழில்நுட்ப பாவனை இன்மை
    - அரசாங்க முதலீடு களையும் மானியங் களையும் எதிர்நோக்கியே தொடர்ச்சியான செயற்பாடு தங்கியிருத்தமை
    - திறமையின்மையும் குறைந்து செல்லும் உற்பத்தித்திறனும்
    - உற்பத்திச் செலவைவிடக் குறைந்தளவு விலை நிர்ணயிக்கப்பட்டமை
    - உள்நாட்டு உயர்வர்க் கத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தலைக் கருத்திற்கொண்டிருந்தமை
5. குறைந்த வளர்ச்சி வீதங்கள் (வெளியீடு, வேலைவாய்ப்பு, தலாவரு மானம்)
6. நீண்டகால அபிவிருத்திக்கு இட்டுச் செல்லாமை
7. இவ் உள்நாட்டு காரணிகளுடன் இணைந்த வகையில் இலங்கையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலையில் உலகளாவிய நிலையில் ஏற்பட்ட பிரச்சனைகள் : எண்ணெய் விலை உயர்வு, உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு, பணவீக்கம் போன்ற நெருக்கடி நிலைகளையும் வெற்றி கரமாக எதிர்கொள்ளக்கூடிய சக்தி பொருளாதாரத்திற்கு இருக்கவில்லை. இந்நிலையின் காரணமாக இக்காலப் பொருளாதார அமைப்பு மக்களின் தேவைகளின் நிமிர்த்தம் மேலும் கட்டுப்பாடுகளை இறுக்கமடையச் செய்வதைத்தவிர வேறுவழிமுறைகள் காணப்படவில்லை. இவ் இறுக்கக் கட்டுப்பாடுகள் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமைவதற்குப் பதிலாக பிரச்சனைகளின் தன்மையை மேலும் தீவிரப்படுத்தியது.

எனவே, இத்தகைய பின்னணியில் புதிதாகப் பதவிக்கு வந்த அரசாங்கமானது 1977 க்கு முன்பு கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கத்தன்மையான பொருளாதார அமைப்புச் செய்முறையிலிருந்து மாறுபட்ட வகையில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தியது. இவ்வகையில் பொருளா தாரமும் நிதித்துறையும் ஒரு வெளிநோக்கிய தன்மையைப் புலப்படுத்தின. இதனால் பொருளாதாரக் கொள்கையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இக் கொள்கையின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தியானது இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையிலிருந்து ஏற்றுமதிசார் கைத்தொழில் (Exported industrialization) கொள்கையாக மாற்றப்பட்டது. இக் கொள்கை மாற்றத்திற்கு உள்நாட்டு ரீதியாகவும், உலகளாவிய ரீதியாகவும் நாடு எதிர்நோக்கிய பிரச்சனைகள் மட்டும் காரணமின்றி சில வெளிப்புறக் காரணிகளான வெளிநாட்டு முதலீடு, உதவி என்பதில் தங்கியிருத்தல். அவ்வாறு பெறப்பட்ட உதவிகள் கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டமை. ஏற்றுமதிசார் கைத்தொழில் கொள்கையைப் பின்பற்றி அபிவிருத்தியடைந்த புதிய கைத்தொழில்

நாடுகளின் பிரவேசமும் அவற்றின் அனுபவமும் இலங்கை போன்ற கைத்தொழில் அபிவிருத்தியை வேண்டி நிற்கும் நாடுகளையும் இக்கொள்கையைப் பின்பற்றுவதற்குத் தூண்டி விட்டதெனலாம்.

## 2.0 திறந்த பொருளாதாரக் கொள்கையின் அம்சங்கள்

நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியைத் தன்னகத்தே கொண்டிருந்த திறந்த பொருளாதாரக் கொள்கையானது பல அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப் பட்டது. இவ் அம்சங்களை நோக்க முன்பு இப் பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களைப் பார்ப்போமாயின் அவை,

1. உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதங்களும் வாழ்க்கைத்தரமும்
2. வேலையின்மையைக் குறைத்தல்
3. சமமான தேசிய வருமானப் பங்கீடு
4. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்
5. சென்மதி நிலுவையினை ஸ்திரப்படுத்திக்கொள்ளல்

என்பனவே திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் முக்கிய குறிக்கோளாகக் காணப்பட்டது. இந் நோக்கங்களை அடைவதற்கான தந்திரோபாயமாக ஏற்றுமதிசார் கைத்தொழிலாக்கம் என்பதும் அதன் வழி கைத்தொழிலாக்கச் செய்முறைக்குப் பொருளாதார செயற்பாடுகளில் அழுத்தம் கொடுக்கப்பட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் அம்சங்களாவன:

## 2.1 இறக்குமதி வர்த்தகமும் அந்நியச் செலாவணி தாராண்மையும்

இச் சீர்திருத்தத்தின் கீழ் இறக்குமதிகள் குறித்து 1950 முதல் அமுலிலிருந்து கட்டுப்பாடுகள் பெருமளவுக்கு நீக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட ஒரு சில பொருட்களைத் தவிர ஏனைய பொருட்கள் அனுமதிப்பத்திர முறையின் கீழிருந்து திறந்துவிடப்பட்டது. இப் பொருட்களின் மீது இருந்த நேரடிக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுப் புதிய தீர்வை முறைகள் அமுல்படுத்தப்பட்டது. உள்நாட்டில் நிறுவப்பட்ட கைத்தொழில் துறைகளுக்கு ரூபா 700,000 வரைக்குமான மூலப்பொருள் இறக்குமதி தீர்வையிலிருந்து தவிர்க்கப்பட்டது. மேலும், இக் கைத்தொழில்களுக்கும் பாரியளவு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டது. அரசாங்க வியாபார தனியுரிமைத் தன்மை படிப்படியாக நீக்கப்பட்டதுடன், பொதுத்துறை தனியார் துறைகளுக்கிடையேயான போட்டித்தன்மை உருவாக்கப்பட்டது. தீர்வைச் சீர்திருத்தத்தின் கீழ் தீர்வைச் சீர்திருத்த ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டதுடன் 1980 இன் பின் இது சனாதிபதி ஆணைக்குழு என உருமாற்றத்திற்கு உட்பட்டது. இக்குழுவின் முக்கிய கடமையானது முற்றான பாதுகாப்பின் அளவினைக் குறைப்பதும் பல்வேறு கைத்தொழில்களிடையே பாதுகாப்பைச் சமப்படுத்தும் வகையில் தீர்வை அமைப்பைத் திருத்தியமைப்பதுமாகும்.

இவ்வாறான தீர்வைச் சீர்திருத்தமானது பல எதிர்பார்ப்புகளுடனேயே அறிமுகப் படுத்தப்பட்டது. அதாவது இதற்கு முற்பட்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையில் காணப்பட்ட இயலளவு குறைபாடு, உயர்முதல் செறிவுடைய அந்நிய உள்ளீடுகளில் தங்கியிருத்தல், மிகையான நிர்வாக ஒழுங்குக் கட்டுப்பாடு போன்றவற்றைத் திருத்தி உள்நாட்டு ரீதியில் ஓர் சிறந்த கைத்தொழில் அமைப்பொன்றை உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

## 2.2 அரசமானியங்கள் குறைக்கப்பட்டமை

நுகர்வோருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மானியங்கள் குறைக்கப்பட்டது. மாத வருமானம் 300 ரூபாவுக்கு மேல் பெறுபவர்களிடமிருந்து உணவு மானியம் பின்வாங்கப்பட்டது. இம் மானியக் குறைப்புக்களைச் சீர்திருத்துவதற்கான சம்பள உயர்வு நெல்லுக்கு உத்தரவாத விலைத்திட்டம், வேலையற்றோருக்கு வருமானச் சலுகை போன்றன வழங்கப்பட்டது.

6301

இதனுடன் இணைந்த வகையில் 1989 ம் ஆண்டு ஜனசவியத் திட்டமும் ஆரம்பிக்கப் பட்டது.

### 2.3 விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை

1977 க்கு முற்பட்ட காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டு அதிகரித்து வந்த விலைக் கட்டுப்பாடுகளும் ஏனைய கட்டுப்பாடுகளும் அத்தியாவசிய ஒரு சில நுகர்பொருள் தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கு நீக்கப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத் தீர்மானங்கள், நிர்வாக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் இதுவரை மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள், இலாப தீர்மானங்கள் என்பன நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகத் திறந்த சந்தை சக்திகளுக்கும் தனிப்பட்ட ஒருவரின் திறமைக்கு ஏற்ப இலாபங்களை உழைத்துக் கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கப்பட்டது.

### 2.4 செலாவணி விகிதச் சீர்திருத்தம்

1968 ஆம் ஆண்டு முதல் அமுலிலிருந்து வந்த அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (FEECs) நீக்கப்பட்டு அதனுடன் இணைந்திருந்த இரட்டை விகித முறைக்குப் பதிலாக வர்த்தக தாராண்மையின் ஓர் பிரதான அம்சமாக ஒருமித்த கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மிதக்கும் நாணயமாற்று விகித முறை (Unified managed floating exchange rate) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் அமுற் ட்படுத்தப்பட்டதால் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக ரூபாவை 42.1 சதவீதத்தினாற் பெறுமதிக் குறைப்புச் செய்யப்பட்டது. இப்புதிய நாணயமாற்று வீதமானது ஏற்றுமதி ஊக்குவிப்பு நாணய மிகைப் பெறுமதி மூலம் ஏற்பட்டு விலை திரிபுகளை நீக்குவதற்கும் உள்நாட்டு விவசாய வெளியீட்டை அதிகரிப்பதற்காகவுமே மேற் கொள்ளப்பட்டது.

### 2.5 நேரடி அந்நிய முதலீடுகளைக் கவருதல்

1977 இல் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகக் கைத்தொழிலாக்கம் கருதி உள்நாட்டு வெளிநாட்டு தனியார் துறைகளின் பொருளாதார செயற்பாடுகள் மேம்படுத் தப்பட்டன. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது நேரடி அந்நிய முதலீடு களைக் கவரும் வகையில் பல சலுகைகள், முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல், இரட்டை வரிச் சலுகை, முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை நிறுவுதல் போன்ற வற்றை அரசாங்கம் முன்வைத்தது.

### 2.6 ஏற்றுமதி மேம்பாடு

அந்நிய முதலீடுகளுடன் இணைந்த வகையில் ஏற்றுமதியை மேம்படுத்தும் வகையில் உற்பத்தி அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது. அதற்குரிய வலுவான நிர்வாக ரீதியாக பின்னணியை வழங்கும் வகையில் 1979 ஆம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் ஆக்கப்பட்டது. இதன் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையின் முக்கிய கடமைகளாக அரசாங்கத்தின் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்குதல், ஏற்றுமதி மேம்பாட்டுச் செய்முறைகளை ஊக்குவித்தல், நிதிரீதியான உதவிகளையும் இறக்குமதிக் கழிவுகளையும் வழங்குதல் போன்றவைகளும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய பிரச்சனைகளை அரசாங்க த்துடன் இணைந்த வகையில் தீர்த்து வைத்தலிலும் ஈடுபடுகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை மத்திய வங்கியுடனும் ஏனைய சுதேசிய வங்கிகளுடனும் இணைந்து நிறுவனங்களின் ஏற்றுமதி நிலைச் சக்திக்கு ஏற்ப நிலையான மூலதனம், நடைமுறை மூலதனம் என்பவற்றை வழங்கவும் முன்வந்தது. இந்நிறுவனமானது மேலும் ஏற்றுமதியை ஊக்குவித்தல் கருதி இறைத்

தூண்டுதல்களை ஒழுங்குபடுத்தவும் சீர் திருத்தவும் நடவடிக்கை எடுத்தது. இவ்வகையில் முற்றான வரிவிடுதலை, ஏற்றுமதி அபிவிருத்தி நிதி, உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான அபிவிருத்திகள் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 3.0 தனியார் மயமாக்கல் கொள்கை அறிமுகம்

1977 வரை பொதுத்துறையானது பாரியளவு முதலீட்டை நாடி நிற்கும் தொழில்களாகவும் இலாபக்குறைவு, திறமை க்குறைவு நட்டத்தில் இயங்குதல் போன்ற காரணங்களாலும் பொருளாதாரத்தில் சுமை யாகச் செயற்பட்டமையும் இதுவரை தனியார் துறை முயற்சியாளரைக் கவராத துறையாகக் காணப்பட்டது. இதனால் 1977 ஆம் ஆண்டுகளில் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் இப் பொதுத்துறை நிறுவனங் களைக் களைவதற்கும், அவற்றின் உடமையை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வகையில் 1978 ஆம் ஆண்டு அரசாங்கம் வெளியிட்ட நான்கு அம்சத்திட்டம் இவற்றின் பொருளாதார சுமையைக் குறைப்பதிலும் இலாபகரமாக இயங்கச் செய்வதிலும் திறமையை அதிகரிப்பது போன்றவற்றை உள்ளடக்கி யிருந்தது. இவ் அம்சங்களாவன:

1. நிதி ரீதியாகத் தன்னிச்சையாக இயங்கும் வகையில் குறைந்தபட்சக் கட்டுப்பாடுகளை விதித்தல்
2. தனியார் துறையுடன் எதுவித பாராபட்சமுமற்ற வகையில் சமமாகப் போட்டியிட வேண்டுமென்ற நிபந்தனை
3. முகாமையின் உயர்மட்டத்தின் கீழ் தொழிலுக்குரியதாக்குதல்
4. சிக்கனமும் திறமையுமற்ற செயற்திட் டங்களைத் தனியார் மயப்படுத்தல் அல்லது முற்றாக மூடிவிடுதல்

இவ்வகையில் தனியார் மயமாக்குதல் என்பதே தீவிரப்படுத்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் தனியார் மயமாக்கலை செயற்படுத்தும் ஆரம்பத் திட்டமாக ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. சில தொழில்கள் முன்போல பொதுத்துறைக்குரியதாக மாத்திரம் ஒதுக்கிவைக்கும் முறை கைவிடப்பட்டது. ஆகவே இப்போது தனியார்துறை ஈடுபடக்கூடிய கைத்தொழில்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை. மேற்கூறியவற்றைத் தவிர ஊழிய நிரம்பல் தொடர்பான ஊழியச் சந்தைக் கட்டுப்பாடுகளை நீக்கியமை, கைத்தொழில் துறைக்கெனச் சிறப்பாக சில இறை தூண்டுதல்கள், அபிவிருத்திகள், தீர்வை முறைகள் என்பனவும் திறந்த பொருளாதாரச் செய்முறையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுவரை நிலையிலிருந்த கட்டுப்பா டுகளின் வழிப்பட்ட கைத்தொழில் மயமாக்க முயற்சிகளினின்றும் விடுபட்ட வகையில் புதிய தொழில் பாதையில் கைத்தொழில் அபிவிருத்தி திருப்பிவிடப்பட்டது. இக் கைத்தொழிலாக்கம் என்பதை இந்நிலையில் நோக்கும்போது இக் கைத்தொழில்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தன. இவ்வகையில் குறிப்பிட்டுக்கூறக்கூடியதாக விளங்குவது மூலதனப் பற்றாக்குறையாகும். இம் மூலதனப் பற்றாக்குறை என்பதை நீக்கும் வகையில் நேரடி அந்நிய முதலீடுகள் ஊக்குவிக்கப் பட்டன.

## 4.0 கைத்தொழில் துறைகள் சார் நேரடி அந்நிய முதலீடு.

அந்நிய முதலீடானது,

1. தனியார் முதலீடு
2. பொது முதலீடு

எனப் பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். இத்தனியார் முதலீட்டை நேரடி முதலீடு என்றும் மறைமுக முதலீடு என்றும் மேலும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். இங்கு நேரடி அந்நிய தனியார் முதலீடு என்பது ஒரு நாட்டின் உரிமைக் கம்பனியானது இன்னுமொரு நாட்டில் முதலீடு செய்வதாகும். இவ் உரிமைப் பரிமாற்றத்திற்காக முதலீடு செய்யும் கம்பனியானது நிதி, முகாமைத்துவம் தொழில்நுட்பம், வர்த்தகக் குறி, மற்றும்

ஏனைய வளங்களையும் மற்றைய நாட்டிற்கு மாற்றுச் செய்யும். இவ்வாறு முதலிடும் போது ஒரு புதிய முதலீடாகவோ அல்லது உள்நாட்டினரிடமிருந்து பெறப்பட்ட ஒரு தொழிலாகக் காணப்படும். இவ்வகையில் சில முதலீட்டாளர்கள் தம்முடன் பாரியளவு முதலீட்டைக் கொண்டுவரலாம். அல்லது உள்நாட்டவரிடமிருந்து முதலீடு சேர்க்கப் படலாம் அல்லது இரண்டு விதமான நடவடிக் கையிலும் ஈடுபடலாம். மேலும் சிலர் தமது நாடுகளிலிருந்தும் ஊழியமாற்றீட்டைச் செய்யும் அதேவேளை சிலர் ஊழியத்தை உள்நாட் டிலேயே பெற்றுக்கொள்கின்றனர். இதிலிருந்து நேரடி அந்நிய முதலீடானது குறிப்பிட்ட சில வளங்களின் மாற்றீடு எனக் குறிப்பிட முடியாது. நேரடி அந்நிய முதலீடானது பணவடிவிலோ அல்லது ஆளணி வடிவிலோ இடம்பெறலாம்.

ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங்கையில் அந்நிய முதலீடுகள் தற்போது முக்கியத்துவப்படுத்தப்பட்டாலும் இது ஓர் பாரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. **19 ஆம் நூற்றாண்டு காலனித்துவ காலம் தொடக்கம் பொருளாதர நடவடிக்கைகளில் அந்நிய முதலீடு பங்கேற்றுள்ளது. எவ்வா றெனினும் இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இந் நேரடி முதலீடு தன்மையிலும், செயற்பாடுகளிலும் குறிப்பிடத் தக்களவு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டது. இவ்வகையில் உலகளாவிய நிலையில் அந்நிய முதலீடுகளின் முக்கியத்துவம் ஆழமாக அதேவேளை ஒருவிரிவான பங்கையும் வகிக்கின்றது.** எனவே, அந்நிய தனியார் முதலீடுகள் அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகளில் கைத்தொழில் மயமாக்கச் செய்முறைகளில் அல்லது நவீன செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் இந் நேரடி அந்நிய முதலீடுகளின் உள்வருகை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வாகவும் அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. அந் நிலையை உறுதிப்படுத்தும் வகையில் அண்மைக் காலத்தில் அபிவிருத்தியடைந்த புதிய கைத்தொழிலாக்க நாடுகளின் (NICs) அனுபவமும் காணப்படுகிறது.

இலங்கையில் கைத்தொழில்சார் அந்நிய முதலீடு குறிப்பாக ஏற்றுமதிசார் கைத்தொழில் துறைகளில் முக்கியமான கொள்கையாகவும் கைத்தொழில் துறைகளில் முக்கியமான கொள்கையாகவும் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிதியிடலில் 1980 இலும் முதல் பங்களிப்புச் செய்துள்ளது. இவ் வகையில் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கையின் கீழ் அந்நிய முதலீடு வரவேற்கப்பட்டாலும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான அவசரத் தேவையாக இவ் அந்நியச் செலாவணியைக் கருதவில்லை. எவ்வாறெனினும் உள்நாட்டு கைத்தொழில் அமைப்புக்களைப் பாதுகாக்கும் வகையில் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்ட வகையில் நேரடி அந்நிய முதலீட்டைக் கவருவதற்கான சில வசதிகளும் தூண்டுதல் களும் வழங்கப்பட்டது. எனினும், இக் கொள்கையின் கீழ் பாரியளவு நேரடி அந்நிய முதலீடு கவரப்படவில்லை என்பதுடன் பெறப்பட்ட முதலீடுகளும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை நிறுவுவதற்குப் பதிலாக ஏற்றுமதித் துறை சார்ந்த நிலைகளிலேயே கூடிய அக்கறை காட்டின.

1977 இன் பின்னர் ஏற்றுமதி சார் கைத்தொழிலாக்கக் கொள்கையின் கீழ் நேரடி அந்நிய முதலீடுகளுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மேலும் திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் பல தீர்வைகள், வரி விதிப்புக்கள், ஊக்குவிப்புக்கள், இறைக் கொள்கைகள் போன்ற தூண்டுதல்கள் அளிக்கப்பட்டன. இதனுடன் இணைந்த வகையில் அந்நிய முதுலீடுகளைக் கவருவ தற்கான ஒரு சாதனமாகவும் அவற்றின் நிர்வாக ரீதியான தேவைகளை வழங்குவதற்கும் முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை நிறுவு வதற்கும் அரசாங்கம் முன்வந்தது. இவ்வகையில் நேரடி அந்நிய முதலீடுகளின் தீர்மானம் மேற்கொள்ளல் மத்தியமயப்படுத்தப் பட்டது. இதன் மூலம் பாரிய முதலீடுகளைக் கவருவதற்கும் அவற்றினால் ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான பிரச்சனைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் வழியேற்படுத்திக் கொண்டது. இது தொடர்பாக சேவையாற்று

வதற்கென இரு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஆந்நிய முதலீட்டு ஆலோசனைக்குழு என்பன முதலீட்டு மேம்பாட்டு வலயங்களின் முகாமை, நிர்வாகம் என்பவற்றை மேம்படுத்துவதற்காகச் சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களாக அமைக்கப்பட்டன. இவ் இரண்டு நிறுவனங்களும் சுதந்திர வர்த்தக வலயம், அதற்கு வெளிப்பட்ட நிலையங்களில் அமைக்கப்படும் நேரடி அந்நிய முதலீடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு இரு தனிப்பட்ட நிறுவனங்களாக உருவாக்கப்பட்டன. 1990 இல் இவ் இரண்டு நிறுவனங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு முதலீட்டுச் சபையாக மாற்றப்பட்டு செயற்பாடுகள் ஒரு தலைமையின் கீழ் மாற்றப்பட்டன.

## 5.0 நேரடி அந்நிய முதலீடுகளின் போக்கு

நேரடிய அந்நிய முதலீடுகளைப் பொறுத்தவரையில் 1977 ஆம் ஆண்டினை ஓர் திருப்பு முனையாகக் கொள்ளலாம். எனவே, இதற்கு முற்பட்ட காலத்துடன் ஒப்புநோக்கும் போது 1977 க்கு பிற்பட்ட காலங்களில் நேரடி அந்நிய முதலீடுகளின் உள்வருகையானது மேல்நோக்கிய வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தது. இந்நிலைக்கு புதிய திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மாற்றங்கள், சர்வதேச வர்த்தகத்தில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை. புதிய சலுகைகள் வழங்கப்பட்டமை என்பவற்றைக் காரணமாக முன்வைக்கலாம். 1977 ஆம் ஆண்டுகளின் பின்னர் கைத்தொழில் துறைசார்ந்த வகையில் GCEC, FIAC போன்ற நிறுவன அமைப்புக்களின் ஊடாக உள்வந்த நேரடி முதலீடுகளின் அளவு அட்டவணை (1) இல் காட்டப்பட்டுள்ளது.

பொதுவாக அட்டவணைத் தரவுகளை நோக்கும் போது GCEC இன் அனுமதிக்குட்பட்ட திட்டங்களின் முதலீட்டு அளவைவிட FIAC திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட முதலீட்டு அளவு அதிகரித்துச் செல்லும் நிலையைப் பிரதிபலிக்கின்றது. இந் நிலைக்கான முக்கிய காரணமாக FIAC யின் கீழ் நிறுவப்படும் கைத்தொழில்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். ஆனால் FIAC யின் கீழ் தயாரிப்பு கைத்தொழில்களும் தயாரிப்பு அல்லாத கைத்தொழில்களும் நிலையரீதியான கட்டுப்பாடுகளும் தவிர ஏனைய கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். எனவே, FIAC யின் கீழ் உருவாக்கப்பட்ட கைத்தொழில் அமைப்புக்கள் GCEC நிறுவனங்களை விட்டு பொருளாதாரச் செயற்பாடுகளில் கூடிய தாக்கம் செலுத்தியது. இவ் இரண்டு நிறுவனங்களுக்குமிடையே ரத்துச் செய்யப்பட்ட கைத்தொழில் திட்டங்களில் பாரிய வேறுபாடுகள் காணப்படாவிடினும் GCEC யின் கீழ் 51 சதவீதமான திட்டங்களே அனுமதிக்கப்பட்டன.

நேரடி அந்நிய முதலீடுகளின் போக்கை 1978 - 92 வரையிலான காலப்பகுதியில் பார்க்கும்போது நாடு எதிர்நோக்கிய சமூகப் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஏற்ப மூன்று உபகாலப்பகுதிகளாக பிரித்து அறிதல் சிறப்பானதாகும். முதலாம் உப காலப் பகுதியான 1984 - 87 வரையும் மூன்றாம் உப காலப்பகுதியாக 1988 - 1992 ஆம் ஆண்டு வரையும் காட்டப்படலாம்.

ஏனைய காலப்பகுதிகளுடன் ஒப்பிடும்போது முதலாவது காலப்பகுதியை கூடுதலான நேரடி அந்நிய முதலீட்டைக் கவர்ந்த காலப்பகுதியாகவும் உச்சளவான முதலீடு உள்வந்த காலப்பகுதியாகவும் குறிப்பிடலாம். இக் காலப்பகுதியின் ஆரம்பத்தில் GCEC 53 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இம் முதல் உப காலப்பகுதியின் இறுதியில் (1983) 13 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு மொத்த திட்டங்களின் எண்ணிக்கை 184 ஆக (அனுமதித்தது) அதிகரித்தது. முதலீட்டைப் பொறுத்தவரையில் 1978 இல் ரூபா 938 மில்லியனாகக் காணப்பட்ட நிலை 1983 இல் ரூபா 1171

| | கைத்தொழில் வகை | FIAC யில் திரட்டிய தொகை | | | GCEC யில் திரட்டிய தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண்ணிக்கை | உள்ளூர் முதலீடு | அந்நிய முதலீடு | திட்டங்களின் எண்ணிக்கை | உள்ளூர் முதலீடு | அந்நிய முதலீடு | மொத்தங்களின் எண்ணிக்கை |
| 1. | உணவு, குடிபானம், புகையிலை | 33 | 719 | 812 | 04 | 28 | 22 | 06 |
| 2. | துணி, ஆடை வகை, தோற் கைத்தொழில்கள் | 106 | 1699 | 1053 | 74 | 658 | 2772 | 29 |
| 3. | மரமும் மரப்பொருட்களும் | 26 | 179 | 185 | 03 | 07 | 28 | 05 |
| 4. | இரசாயன, பெற்றோலிய றப்பர், பிளாஸ்ரிக் பொருட்கள் | 79 | 1300 | 494 | 26 | 488 | 1389 | 17 |
| 5. | உலோகமல்லாத கனிப்பொருட்கள் | 47 | 837 | 839 | 28 | 476 | 1075 | 18 |
| 6. | அடிப்படை உலோகப் பொருட்கள் | 53 | 939 | 393 | - | - | - | 08 |
| 7. | கட்டுமான உலோகப் பொருட்கள்,இயந்திரப் போக்குவரத்து உபகரணங்கள் | 07 | 76 | 52 | 13 | 84 | 435 | 03 |
| 8. | தயாரித்தபொருட்கள் | 16 | 219 | 77 | 67 | 949 | 2135 | 13 |
| 9. | ஏனையன | 38 | 256 | 117 | 08 | 477 | 2363 | 07 |
| | தயாரிப்புத்துறை மொத்தம் | 405 | 6224 | 4031 | 223 | 3167 | 10219 | 100 |

ஆதாரம் :- இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2000

மில்லியனாக அதிகரித்திருந்தது. FIAC நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இக் காலப்பகுதியிலேயே குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1978 இல் 8 நிறுவனங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட FIAC 1983 இல் 53 ஆக அதிகரித்தது. முதலீட்டின் அளவும் ரூபா 27 மில்லியனிலிருந்து ரூபா 50 மில்லியனாக அதிகரித்தது.

2 ஆம் உப காலப்பகுதியை எடுத்துநோக்கும் போது GCEC இல் 1984 இல் 13 நிறுவனங்களிலிருந்து 1987 இல் 31 திட்டங்களும் அனுமதியளித்தது. எனவே. இக் காலப்பகுதியில் அனுமதியளிக்கப்பட்ட மொத்தத் திட்டங்களின் எண்ணிக்கையானது 67 ஆகவே காணப்பட்டது. முதலீட்டின் தொகையும் ரூபா 190 மில்லியனிலிருந்து ரூபா 592 மில்லியனாகவே அதிகரித்தது. FIAC ஐப் பொறுத்தவரை இக் காலப்பகுதியில் திட்டங்களின் எண்ணிக்கையானது 50 இலிருந்து 71 ஆக அதிகரிக்க முதலீட்டுத்தொகை 4833 இலிருந்து 383 ஆகக் குறைந்துள்ளது. இறுதியாக 3 ஆம் உப காலப்பகுதியான 1988 இலிருந்து 1992 வரையுள்ள நிலையை எடுத்து நோக்குவோமாயின் 1988 இல் அனுமதி யளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை யானது 31 இலிருந்து 1992 இல் 191 ஆகக் காணப்பட்டது. முதலீட்டின் தொகையானது ரூபா 1,120 மில்லியனிலிருந்து 17,610 ஆக அதிகரித்தது.

எனவே திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள நிலையில் நேரடி அந்நிய முதலீடானது முதலாம் உப காலப்பகுதியில் (1978 - 83) நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மை, புதிய கொள்கையின் அறிமுகம் என்பவற்றால் உள்வருகை அதிகரித்துச் செல்லும் போக்கில் காணப் பட்டாலும் பிற்பட்ட காலங்களில் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்கள், ஏனைய சாத்தியமற்ற சூழ்நிலைகளினால் பொருளா தாரச் செயற்பாடுகளில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை எதிர்நோக்க ப்பட்டமை, பின்வந்த காலங்களில் நேரடி அந்நிய முதலீட்டின் தொகை குறைவடைந்து செல்வதற்கான காரணமாகக் குறிப்பிடலாம். இவற்றுடன் இணைந்த வகையில் சில அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஏற்றுமதி குறித்து மேற்கொள்ளப்பட்ட சில கட்டுப்பா டுகளும் இந்நிலையினை மேலும் விரிவடையச் செய்தது. அதிலும் குறிப்பாக இந்நாடுகளில் தைத்த ஆடை ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட இத்துறையே இலங்கையில் அந்நிய முதலீட்டைக் கூடுதலாகக் கவர்ந்த துறையாகக் காணப்பட்டமையாலும் கூடிய தாக்கம் ஏற்பட்டது.

கைத்தொழில் ரீதியான நேரடி அந்நிய முதலீட்டை எடுத்துநோக்குவோமாயின், திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் நேரடி அந்நிய முதலீட்டைப் பல்வேறு நோக்கம் கருதி வரவேற்கப்பட்டாலும் கைத்தொழில் ரீதியாக நோக்கும்போது இது ஓர் இடத்தில் குவிக்கப்பட்ட தன்மையையே புலப்படுத் துகின்றது. GCEC யின் கீழ் நிறுவப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் குறுகிய காலத்தைக் கொண்ட நிலையான அடித்த ளமற்ற ஆடைத் தயாரிப்புத் தொழிலிலேயே முடிக்கப்பட்டது. இந் நிலையிலிருந்து பின்னர் ஏற்பட்ட மாற்றம் கூட ஊழியச் செறிவை அதிகளவில் நாடி நின்ற இரசாயனப் பொருட்கள் உலோகமல்லாத கனிப்பொருட்கள், அடிப்படை உலோகப் பொருட்கள் போன்ற கைத்தொழில் வகைகளையே நாடிச் சென்றன.

மேலும் 1977 - 92 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் GCEC, FIAC கீழ் நிறுவப்பட்ட தொழில்களில் 180 திட்டங்கள் ஆடைத் தயாரிப்பு வகையையே சார்ந்திருந்தது. ஏனெனில் இக் கைத்தொழில் முதலீட்டை மேற்கொண்டவர்களில் பாரிய வீதத்தினர் புதிய கைத்தொழிலாக்க நாடுகளின் முதலீட்டா ளர்களாகும். இந் நாட்டவர்களின் ஆடைத் தயாரிப்புத் தொழிலுக்கான கிடைப்புப் பங்கு ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் போன்றவற்றில் கட்டுப்பாட்டிற்குட் படுத்தப்பட்டதால் அதன் இழப்பை ஈடுசெய்து கொள்வதற்காக இங்கு அவ்வகைக் கைத்தொழில் முதலீட்டை மேற்கொள்வதிலேயே

ஆர்வம்காட்டினர். இதனுடன் ஏனைய குறைவிருத்தி நாடுகளைவிட இத் துறையில் இலங்கையில் குறைந்த கூலியில் ஊழியரைப் பெறக்கூடிய சாத்தியமும் காணப்பட்டது. அண்மைக்காலங்களில் GCEC, FIAC என்பன இவ்வகைக் கைத்தொழில் களுக்கான நேரடி அந்நிய முதலீட்டைக் கட்டுப்படுத்தினாலும் இன்று வரை இக் கைத்தொழில் வகையே ஆதிக்கம் செலுத்தி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட நேரடி அந்நிய முதலீட்டினில் முக்கியமாகக் கவனிக்கக்கூடிய இன்னுமொரு அம்சம் என்னவெனில், நிறுவனங்களின் அளவு, முதலீட்டுத் தொகை என்ற இரண்டிலும் அபிவிருத்தியடைந்து வரும் புதிய கைத் தொழிலாக்க நாடுகளின் முதலீட்டாளர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். GCEC ஏறத்தாழ 50 சதவீதமான தொகையினர் புதிய கைத்தொழிலாக்க நாட்டு முதலீட்டாளர்களேயாவர். இதில் குறிப்பிடத் தக்களவான பங்களிப்பு தென்கொரியா, பாங்கொங் முதலீட்டாளர்களால் மேற் கொள்ளப்பட்டது.

இன்னுமொரு முக்கிய நிலையாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது இக்காலப் பகுதியில் பாரிய பல்தேசியக் கம்பனிகளின் முதலீடு குறையாகக் காணப்பட்டமையாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் பல்தேசியக் கம்பனிகள் முதலீட்டை மேற்கொண்டாலும் ஒப்பீட்டளவில் அதன் அளவு குறைவாகும்.

அடுத்து குறிப்பிடக்கூடியது GCEC யுடன் FIAC முதலீட்டு நிலைகளை ஒப்பிட்டு நோக்கும்போது GCEC இல் அபிவிருத்தி யடைந்துவரும் முதலீட்டாளர்களின் ஆதிக் கமும் மாறாக FIAC இல் யப்பானில் முதலீட்டாளர்களின் ஆதிக்கமும் மேலோங்கி விளங்கியபோது ஆசிய முதலீட்டாளர்களே திட்டங்களின் எண்ணிக்கையிலும் முதலீட்டுத் தொகையிலும் உச்சநிலை வகித்துவரு கின்றனர். ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம் தவிர்ந்த ஏனைய நாடுகளின் திட்டங்களின் எண்ணிக்கை, முதலீட்டுத்தொகை அதிகரித்துச் சென்றாலும் உரிமை மூலதனத்தைப் பொறுத்து திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஆரம்ப காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது பிற்பகுதியில் நிலையான தன்மையே காணப்பட்டு வருகின்றது.

மேலும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் அந்நிய முதலீட்டின் மூலம் கைத்தொழில்துறை வளர்ச்சியை ஏற்படுத் துவதும் அதன் கீழ் கைத்தொழில் பொருள் ஏற்றுமதியை அதிகரித்துச் சென்மதி நிலுவை நிலைகளை முன்னேற்றிக்கொள்வதும் ஒரு நோக்கமாகக் காணப்பட்டது. இவ்வகையில் தேறிய ஏற்றுமதி நிலைகளை எடுத்துநோக்கு வோமாயின், இத் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் தேறிய ஏற்றுமதி வருமானங்கள் அதிகரித்துள்ளன என்பது சுட்டிக்காட்டப் படக்கூடியதாகும். 1980 இல் ஏற்றுமதி வருமானங்கள் ரூபா 524 மில்லியனாகக் காணப்பட்டது. இது இதற்கு முற்பட்ட நிலைகளுடன் ஒப்பிடும்போது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஏற்றுமதி வருமானங்கள் 1978 இல் 1.14 சதவீதமாகவும் 1990 இல் ஏறத்தாழ 25 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1983 க்கும் 1993 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏறக்குறைய 20 சதவீதமான கைத்தொழில் ஏற்றுமதி அதிகரிப்புக்கள் நேரடி அந்நிய முதலீட்டின் மூலம் பெறப்பட்டதாகும். எனினும், தேறிய ஏற்றுமதி வருமானங்கள், மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான அளவு பங்களிப்பை வகிப்பினும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது யாதெனில் இதில் பெரும் பங்கை ஆடை ஏற்றுமதியே வகித்துள்ளது என்பதாகும். ஏனைய துறைகளைப் பொறுத்து இவ் வளர்ச்சி மந்தமாகவே காணப்பட்டது. நேரடி அந்நிய முதலீட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட நிறுவனங்களின் 1979 இல் 61 சதவீதமாகக்

காணப்பட்ட தயாரித்த ஆடை ஏற்றுமதி 1990 இல் ஏறத்தாழ 75 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## 6.0 முடிவுரை

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் அந்நிய முதலீடானது பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தல், அபிவிருத்தி செய்தல், வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளல், வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல், முகாமைத்துவத் திறமைகளை வளர்த்தல், பயிற்சியுடைய தொழிலாளர் குழாமை உருவாக்குதல், ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல், அந்நியச் செலாவணி நிலைமைகளை மேம்படுத்தல், சென்மதி நிலுவை நிலைகளைச் சீர்படுத்தல் போன்ற காரணிகளை அடைவதை முன்வைத்தே அமுல் நடாத்தப்பட்டது.

எனினும், திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த இன்றைய நிலையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என நோக்கும்போது நேரடி அந்நிய முதலீடு என்பது திறந்த பொருளாதாரக் கொள்கையை உருவாக்கிய எதிர்பார்ப்பாளர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்றே கூறவேண்டும். (1981 - 82, 1988 - 89 என்ற காலப்பகுதி தவிர்த்து) ஏனெனில் உருவாக்கப்பட்ட தொழில்களில் பெருமளவு ஊழியச் செறிவையும், குறைந்த கூலியில் பெறக்கூடிய தொழிலாளர்களையும் குறைந்த விலையுடன் தேசிய வளங்களையும் மையமாகக் கொண்டே அமைக்கப்பட்டது. இதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பதற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை விடத் தனியார் இலாபமே மேலோங்கிக் காணப்பட்டது. எனவே, இவ்வாறான கைத்தொழிலாக்கம் சமூக பொருளதார நிலைகளை மேம்படுத்தல், சிறப்புத்தேர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் என்பவற்றில் எல்லையளவு கவனமே செலுத்தியது. மாறாக இலாபமே உச்சநோக்கமாகக் காணப்பட்டது. உள்நாட்டு மூலவளங்களை உச்சமாகப் பாவனைக்குட்படுத்தும் சில நிறுவனங்கள் நிறுவப்பட்டாலும் பெருந்தொகையான நிறுவனங்கள் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளையே (ஊதியம் தவிர்ந்த) நாடி நின்றன. உதாரணமாக GCEC நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த உள்ளீட்டுத் தேவையில் 10 சதவீதம் மாத்திரமே 1981 - 92 ம் காலப்பகுதியில் உள்நாட்டிலிருந்து பெறப்பட்டது.

ஏற்றுமதி வருமானங்கள் அதிகரிக்கப்பட்டாலும், இவ் ஏற்றுமதிகளும் கோட்டா நிலைகளைப் பொறுத்து காணப்பட்டதுடன் குறிப்பிட்ட சில கைத்தொழில் வகைகள் குறித்து மையப்படுத்தப்பட்டதாகவும் காணப்பட்டது. இந்நிலை வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் என்ற நோக்கத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இவ் வகைக் கைத்தொழில்களும் நிலையான அடித்தளமுடையதாகக் காணப்படாமல் தளம்பல் நிலையிலேயே காணப்பட்டன. இதன் மூலம் வருமானங்களும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஆரம்ப காலத்துடன் ஒப்புநோக்கும் போது அண்மைக் காலங்களில் குறைவாகவே காணப்பட்டன. திறந்த பொருளாதார கொள்கைக்கு முற்பட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது பிற்பட்ட காலப்பகுதியில் நேரடி அந்நிய முதலீடுகளின் தொகை அதிகரித்தாலும் இந்நிலை பொருளாதார நிலையிலோ அல்லது சென்மதி நிலுவையிலோ குறிப்பிடத்தக்க மாற்றங்களை அபிவிருத்தியையோ ஏற்படுத்தவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். மேலும் இந்நிலை சென்மதி நிலுவையின் மாறும் செலவில் ஏற்பட்ட குறைகளை நிரப்புவதற்கும் பற்றாக்குறையாகவே காணப்பட்டது.

1980 இல் இருந்தே கைத்தொழிலாக்க நடவடிக்கைகள் இரு வேறு கொள்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட அதாவது


இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட அதாவது இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை மூலம் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலும் பின்னர் திறந்த பொருளாதாரத்தில் ஏற்றுமதிசார் கைத் தொழிலாக்க செய்முறையில், சலுகைகள், வரிவிடுதலை என்பவற்றை வழங்கிக் கைத்தொழிலாக்கம் உருவாக்க எத்தனிக் கப்பட்டது. எனினும், கைத்தொழிலாக் கத்திற்கான ஆர்வமுடைய ஒரு சமூகமோ காணப்படாத நிலையிலேயே நேரடி அந்நிய முதலீடு வரவேற்கப்பட்டது. இதன்வழி முதலீட்டுப் பற்றாக்குறை, அடிப்படைக் கட்டுமான வசதிகளில் விருத்தி என்பன எதிர்பார்க்கப்பட்டாலும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் வரவேற்கப்பட்ட நேரடி அந்நிய முதலீடு இத்தகைய அபிவிருத்திகளை முன்னெடுத்துச் சென்றதாகக் கூறிவிடமுடியாது.

மேலும் இலங்கையின் பொருளாதார சமூக நிலைகளில் காணப்பட்ட சில இடர்பாடுகளும் பாரிய பல்தேசியக் கம்பனி களின் நேரடி அந்நிய முதலீட்டை கவருவதில் பின்னிற்க வைத்தன. அதாவது உலோக வளங்களின் பற்றாக்குறை, அரசியல் சூழ்நிலைகளினால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை, முதலீட்டின் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள், இங்கு உற்பத்தி செய்யும் கைத்தொழில் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட கட்டுபாடுகள், ஏற்றுமதிசார் கைத்தொழிலாக்கக் கொள்கையை இலங்கை பிந்திய காலப் பகுதியில் ஆரம்பித்தமை போன்றவற்றைக் காரணமாகக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.


இறுதியாக திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகமும் அதன் மூலமும் நேரடி அந்நிய முதலீடு வரவேற்கப்பட்டுக் கைத்தொழிலாக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு நடைமுறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் அந்நிய முதலீடுகள் அதிகரித்தாலும் அவை ஒரு குறித்த தன்மையுடையதாகவும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை மேம்படுத்துவதாகவோ கைத்தொழிலாக்கச் செய்முறையை வலுப்படுத்துவதாகவோ காணப்படவில்லை என்பதை நேரடி அந்நிய முதலீட்டின் போக்கு எடுத்துக் காட்டுகின்றது.

| | |
|---|---|
| சுறுசுறுப்பாயிரு | ஆனால் படபடப்பாயிராதே |
| பொறுமையாயிரு | ஆனால் சோம்பலாயிராதே |
| சிக்கனமாயிரு | ஆனரல் கருமியாயிராதே |
| அன்பாயிரு | ஆனால் அடிமையாயிராதே |
| இரக்கம் காட்டு | ஆனால் ஏமாந்துபோகாதே |
| கொடையாளியாயிரு | ஆனால் ஒட்டாண்டியாகாதே |
| பற்றற்றிரு | ஆனால் காட்டுக்குப் போய்விடாதே |
| வீரனாயிரு | ஆனால் போக்கிரியாகாதே |
| நல்லோரை நாடு | ஆனரல் அல்லோரை வெறுக்காதே |

## குருளைச் சாரணர் அணி - 2002



## உதைபந்தாட்டஅணி - 2002
### 16 வயதுப் பிரிவு



**இருப்பவர்கள்.→**

செல்வன்.ச. சுதாகரன், செல்வன். இ. நிதர்சன், திரு. த. சொக்கலிங்கம் (உப அதிபர்), திரு. எஸ். சண்முககுமார் (அதிபர்), திரு. பா. பாலமுரளி (பொறுப்பாசிரியர்), செல்வன்.சு. சாள்ஸ் (தலைவர்), செல்வன். ந. றஜீவன்.

**நிற்பவர்கள்.→**

செல்வன். சு. சுமணன், செல்வன். யோ. தினேஸ்காந், செல்வன். ப. முகுந்தன், செல்வன். செ. யாதீஸ், செல்வன். ந. பிரபாகர், செல்வன். கு. கிரிசாந்தன், செல்வன். க. கிசோதன்.

வரவின்மை.

செல்வன். கு. மோகன்ராஜ, செல்வன். கு. மயூரன்.

அநீதிகள் பற்றிய பிரக்ஞையையும், அவற்றைக் களைய வேண்டும் என்ற சாத்தியப்பாடுகளையும் ஏற்படுத்த பல விழிப்புணர்வுகளைப் பாட அலகுகளின் ஊடாக ஆரம்ப ஆசிரியர் நடைமுறைப்படுத்தலாம். இதனூடாகப் பிள்ளைகள் சமூக நீதிக்காகக் கதைக்க முற்படுவர். தன்னுடையதும், மற்றவர்களினதும் உரிமைகளையும், கடமைகளையும் சிறுபராயத்தில் இருந்தே விளங்கிக்கொண்டு நடைமுறையிலும் பின்பற்றினால் அதனால் உருவாகும் பழக்கங்கள் நாட்டு நலனுக்கு உதவும்.

# ஆரம்பக் கல்வியினூடாக மனிதவிழுமிய அடிப்படைகளுக்கான அத்திவாரமிடல்



**கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதன்**
**பீடாதிபதி**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**ஆ**ரம்பக் கல்வியே இடைநிலை, உயர் கல்விக்கும் உவப்பான வாழ்வுக்கும் மாணவர்களை உயர்த்தும் ஏணியாகும். இன்றைய கல்வியுலகும் சமுதாயமும் இத்துறையில் அதி கூடிய அக்கறை காட்டி வருகின்றன. இலங்கையில் அண்மைய பிரதான கல்விச் சீர்திருத்தங்களில் ஆரம்பக் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறையின் பண்புசார் கல்வியில் கவனக் குவிப்பும் ஏற்பட்டுள்ளது. ஒரு பிள்ளையின் 1-5 வரையிலான தரங்களில் கற்கும் கல்வியின் பண்புசார் தன்மை அதனது வாழ்க்கை முழுவதும் கற்கும் கல்வியின் பண்புசார் தன்மையைத் தீர்மானிக்கின்றது.

இவ்வகையிலேயே ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்நடவடிக்கை நாட்டு அபிவிருத்தியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அடித்தளமாகும். இக் கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தும் போது நாட்டின் ஒவ்வொருபிரஜைக்கும் நற்பயனை விளைவிக்க வேண்டும். ஒரு சில பிரதேசங்களுக்கோ அல்லது வசதிபடைத்த மக்களுக்கோ மட்டும் நன்மைகளைக் கொடுப்பதற்கு ஏதுவாக நடைமுறைப்படுத்துவது தவறாகும். நாட்டின் எதிர்காலப் பிரசைகளான ஒவ்வொருவருக்கும் வேண்டிய அறிவையும், தகவல்களையும் வழங்குவதன் மூலம் அவர்களை வலுவூட்ட வேண்டும்.

ஆரம்பக் கல்வி மூலம் பிள்ளை,

- அறிவைப் பெற்றிருத்தல்.
- நடைமுறைத் திறன்களைப் பெற்றிருத்தல்.
- கட்டொழுங்குகளைப் பெற்றிருத்தல்.
- பண்புத்திறன்களைப் பெற்றிருத்தல்.
- நல் மனப்பாங்குகள், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.

என்ற வகையில் அடிப்படைத் தேர்ச்சிகளினூடு மாணவர் மையக் கல்வி வழங்கப்படுகின்றது. இதனூடாகப் பிள்ளைப் பருவத்திலேயே நாட்டுப் பற்றையும், நாட்டுக்குச் சேவைசெய்யும் அர்ப்பணிப்பு மனப்பாங்கையும் மொழி, நாடகம், கதை, பாட்டு ஆகியவை மூலம் இவர்களின் மனங்களில் விதைகளாக விதைக்கலாம். பண்பாட்டு மரபுகளிலிருந்தும் ஒவ்வொரு இனத்தையும் சார்ந்த தலைவர்களினாலும், சமயங்களினாலும் செய்யப்பட்ட பங்களிப்புக்களில் இருந்து இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேர்ச்சிகளினூடு மாணவர் மையக் கல்வி வழங்கப்படுகின்றது. இதனூடாகப் பிள்ளைப் பருவத்திலேயே நாட்டுப் பற்றையும், நாட்டுக்குச் சேவைசெய்யும் அர்ப்பணிப்பு மனப்பாங்கையும் மொழி, நாடகம், கதை, பாட்டு ஆகியவை மூலம் இவர்களின் மனங்களில் விதைகளாக விதைக்கலாம். பண்பாட்டு மரபுகளிலிருந்தும் ஒவ்வொரு இனத்தையும் சார்ந்த தலைவர்களினாலும், சமயங்களினாலும் செய்யப்பட்ட பங்களிப்புக்களில் இருந்து இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்பக்கல்வியினூடாக சமூக நீதியைப் பொறுத்த அளவில் **அநீதிகள் பற்றிய பிரக்ஞையையும், அவற்றைக் களைய வேண்டும் என்ற சாத்தியப் பாடுகளையும் ஏற்படுத்த பல விழிப்பு ணர்வுகளைப் பாட அலகுகளின் ஊடாக ஆரம்ப ஆசிரியர் நடைமுறை ப்படுத்தலாம். இதனூடாகப் பிள்ளை கள் சமூக நீதிக்காகக் கதைக்க முற்படுவர். தன்னுடையதும், மற்றவர் களினதும் உரிமைகளையும், கடமை களையும் சிறுபராயத்தில் இருந்தே விளங்கிக்கொண்டு நடைமுறையிலும் பின்பற்றினால் அதனால் உருவாகும் பழக்கங்கள் நாட்டு நலனுக்கு உதவும்.**

கரிசனைகாட்டிக் கற்பித்தல் ஆரம்பக் கல்விகற்கும் பிள்ளைகளின் மனதில் இலகுவாகப் பதியவைக்கக்கூடிய ஒரு மனப்பாங்காகும். சகல சூழ்நிலைகளிலும் ஒருவரோடொருவர் போட்டியிடுவதைவிட ஒருவர்மீது ஒருவர் சிரத்தைகாட்டும் படி பிள்ளைக்குக் கற்பிக்க வேண்டும். பாடசாலையில் வளர்க்கப்படும் இவ்வியல்புகள் வீட்டுச் சூழலிலுள்ள நடத்தைப் போக்கினால் அர்த்தமற்றதாக்கப்படக்கூடும் என்பதால் இவ்விடயத்தில் பெற்றோரின் ஆதரவையும் பெறல் வேண்டும். பிற கருத்துக்களுக்கும், தேவை, விருப்பம் போன்றவற்றிற்கும் மதிப்புக் கொடுக்கக் கூடிய விழிப்புணர்வுக்கு இது வழிகாட்டுவதால் ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை, விட்டுக்கெடுத்தல், இசைவு என்பன போன்ற பண்புகள் ஏற்படுகின்றன.

கலந்துரையாடுதல், கலந்தாலோசித்தல் என்பவற்றின் அவசியம் ஆக்கபூர்வமான கண்டனங்களை வழங்கும். ஏற்றுக்கொள்ளும் ஆற்றல், ஏனையோருடன் சேர்ந்து செயற்படுதல் என்பன போன்றவற்றின் அனுபவங்களை குழுவாக மேற்கொள்ளும் கற்றல் செயற்பாடுகளினூடாக ஆரம்பப் பாடசாலையில் கல்வி பெறும் பிள்ளைகளுக்கு வழங்கலாம். இதன் மூலம் ஏனையவர் களுடைய தனித்துவங்கள், கலாச்சாரம், தனது சொந்தக் கலாச்சாரத்தை நயத்தல் கருத்தூன்றியும், விடாமுயற்சியுடனும் செயற்படுவதன் மூலம் தனது கற்றலிலும் அக்கறை காட்டுதல்.

கற்பதற்குக் கற்றல், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவற்றுடன் சம்பந்தப்பட்ட விடையங்களைக் கையாளுதல், மாற்றங்களை எதிர்பார்க்கும் வல்லமை, மாற்று உபாயங்களை கையாண்டு செயற்படும் திறன்கள் என்பவற்றிலும் எந்தவொரு சித்தாந்த எதிர்பாராத விடயங்களைச் சமாளிப்பதன் மூலம் பாதுகாப்புணர்வைப் பெறுதல் போன்ற புதிய அம்சங்கள் கூட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு அப்பாற்பட்டவையல்ல. துணிவுடன் அபாயங்களை எதிர்பார்ப்பதன் மத்தியில் காரியமாற்றக்கூடிய துணிவுள்ளவர் களாக அவர்களை ஆக்க முடியும்.

மேலும் தங்களையும் தங்களைச் சூழ்ந்திருப்பவர்களின் ஆரோக்கியத்தையும், நலத்தையும் தாமே எவ்வாறு பேணவேண்டும் என்பது பற்றியும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு உணர்த்தலாம். நெருக் கடியற்ற சுதந்திரமான சமூக வாழ்விற்கு உதவும் விதத்தில் சட்டதிட்டங்களைப்பின்பற்றி நடத்தல் பிரச்சனைகளை எதிர்நோக்குவதற்கு ஒழுங்கான திட்டத்திற்கமையச் செயற்படுதல் என்பன பிள்ளைகளிற்கு வழங்கப்படக்கூடிய ஏனைய தகமைகளாகவுமுள்ளன. இதன் விளைவாக சமநிலையான நன்கு முதிர்ந்த நடத்தையை அவர்களின் பிற்கால வாழ்வில் காணக்கூடியதாகவிருக்கும். இதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும், அதிபர்களும் பல உள்ளக வேலைத்திட்டங்களைப் பாடசாலையில் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் ஆரம்பநிலைக் கல்வியை உள்ளடக்கிய 1-5 வரையான வருடங்கள் பௌதீக- மனஇயல்- உணர்வுகள், விழுமியங்கள் என்பவை எதிர்

கால சமூக அபிவிருத்திக்கு அடித்தளமிடு பவைகளாகும். புதிய ஆரம்பக் கல்விச் சீர் திருத்தம் மனித விழுமியங்கள் மேம்பாடடையச் செய்யும் மிக முக்கிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு

i. கல்வி வாய்ப்புக்களை விரிவாக்கல்.

ii. கல்வியின் பண்புசார் மேம்பாடு.

iii. மாணவர்களின் நல் விழுமிய மனப்பாங்கை விருத்திசெய்தல்.

iv. ஆசிரியர்களின் வாண்மையை உயர்த்துதல்.

v. அதிபர்களினூடாக கல்வி முகாமைத்துவ விருத்தி

என்பவற்றினூடாக மனிதத்துவத்தை நோக்கிய நல் எதிர்காலத்திற்கு வித்திடும் செயல்முறைகளே தற்போது நடைமுறைப் படுத்தப் படுகின்றது. இதை எமது பிரதேச பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும், சமூகமும் சரியாகப் புரிந்து கொண்டு பயனடைய வேண்டும். ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தை மேலும் சரியாக அமுல்படுத்த ஆசிரியர்கள்,அதிபர்களினதும் அர்ப்பணிப்பும் தேவையாகவுள்ளது.

மிகச் சிறந்த பாடசாலைகளிலும்கூட சகல மாவட்டங்களிலும் கணிதம் மற்றும் தமிழ் ஆகியவற்றின் உண்மையான நிறைவேற்றல் தரத்துக்கு இல்லை எனப் பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. ஐந்து வருடங்கள் பாடசாலைக்குச் சென்ற பின்னர் பிள்ளைகள் கற்றுக்கொண்டவை என்ன? என்ற 1995 இல் வெளியிட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் அறிக்கையில் தரம் 5 மாணவர்கள் மத்தியில் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு, விழுமியம் சார் மனப்பாங்குகளில் மிகக் குறைந்த மட்ட புலமைக் கற்றல் அடைவுகள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இக் கண்டுபிடிப்புக்களே தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் ஆரம்பக்கல்வி பிள்ளைப்பராய அபிவிருத்திக்கான ஜனாதிபதி துரித செயலணி ஆகியவற்றால் ஆரம்பக்கல்வியில் பண்புசார் தன்மையை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களில் பாரிய அழுத்தங்களுக்கு வழிகாட்டியது.

1999 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவக ஆரம்ப கணித செயற்திட்டத்தினால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட கணித பாடம் தொடர்பான ஆய்வில் அடிப்படைக் கணிதக் கொள்கைகள் விழுமியங்களில் குறைந்த மட்ட புலமை மாணவர்களிடத்தே கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறான பிரச்சனைகளை உடனடியாகத்தீர்க்க பின்வரும் ஐந்து துறைகளில் தகைமைக் கொள்கை ஊடாக கற்றல் விழுமிய அடைவுகளை அதிகரிக்க தற்போது விரைவான செயற்தொடர்கள் ஆரம்பமாகியுள்ளன. அவை

1. தொடர்புப்பிணைப்பு.
2. சூழல்.
3. நீதிநெறியும் சமயமும்.
4. விளையாட்டும் ஓய்வுநேரமும்.
5. எவ்வாறு கற்கவேண்டும் என்பதற்குக் கற்றல்.

ஆகிய அடிப்படைத் தேர்ச்சிகளினூடாக தேர்ச்சி மைய விழுமிய அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இங்கு தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியவை இணைந்த ஓர் இயலுமையாகும். தேர்ச்சிமட்டங்களை ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அடைய பல்வேறு கற்றல் அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை,

1. போட்டி விளையாட்டுக்கள். (Play)
2. விநோத விளையாட்டுக்கள். (Guided Play)
3. விளையாட்டுக்களும் செயற்பாடுகளும். ( Play and Activities)

4. எழுத்து வேலை. (Desk Work)

இவற்றினூடாக கற்றலை மேற் கொண்டு கற்பதன் பயனாக நாட்டிற்கு உகந்த நற்பிரசைகளாக ஆரம்பக்கல்விச் சிறார்களை ஆக்குவதற்கும், நல்ல விழுமியங்களைக் கைக்கொள்கின்ற மானுடம் தழுவிய நல் மனிதர்களாக அவர்களை உருவாக்க முதலில் ஆசிரியர்களும், அதிபர்களும் அவ்வாறான பண்புகளுடன் திகழ்ந்து முன்மாதிரியாக நடந்து ஆரம்பக் கல்வியினூடாக மனித விழுமிய அடிப்படைகளுக்கான அத்திவாரத்தை இடல் வேண்டும். இதற்கு சமயபாடத் தேர்ச்சிகள் மட்டும் போதாது. எல்லாப்பாடங்களும் அவற்றின் அலகுகள் ஊடாக ஒவ்வொரு மானிட விழுமியங்களை பிள்ளைகளுக்கு எடுத்தியம்பி அவர்களைக் கைக்கொள்ள கற்றுக் கொடுத்தல் மூலம் ஒளி பொருந்திய எதிர்கால சந்ததிகளை உருவாக்கலாம்.

**வருவதும் போவதும் இரண்டு, செல்வம் ~ தரித்திரம்**

**வந்தால் போகாது இரண்டு, கீர்த்தி ~ அபகீர்த்தி**

**போனால் வராது இரண்டு, மானம் ~ உயிர்**

**தன்னுடன் வருவது இரண்டு, பாவம் ~ புண்ணியம்**



## மனித தர்மம்

- ஏழ்மையிலும் நேர்மை
- கோபத்திலும் பொறுமை
- தோல்விலும் விடாமுயச்சி
- தரித்திலும் பரோபகாரம்
- துன்பத்திலும் தைரியம்
- செல்வத்திலும் எளிமை
- பதவியிலும் பணிவு




தரம் - 1 திறப்பு விழாவில் கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.மகாலிங்கம் அவர்கள்
2000





பிரியாவிடை வைபவமும் தங்கப் பதக்கம் சூட்டலும்
1999
பிரதம விருந்தினர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் (கல்விப்பணிப்பாளர்-யாழ்-வலயம்)

**GTZ** இன் மலசல கூட கையளிப்பு நிகழ்வில் சமூக சேவைப் பணிப்பாளர் திருமதி. இராஜேஸ்வரன்-பொன்மலர்



> வீட்டுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளிற் கற்கும் மாணவர்கள் பெரும் நன்மை அடைகின்றார்கள். போதிய நேரம் கிடைக்கின்றது தம் ஆர்வத்துக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப இணைப்பாட முயற்சிகளில் ஈடுபட அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது உடல் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாத தேகப்பயிற்சியில், விளையாட்டுக்களில், பெற்றோருக்கு உதவி செய்வதில் மாணவர்களின் கவனம் செலுத்தப்படும் வளரும் பருவத்திற்கேற்ப உணவுவகைகளை உரிய நேரத்தில் உட்கொள்ளவும், களைப்பின்றி பாடங்களை மீளப்படிக்கவும் அவர்களால் முடியும்.

# கிராமம்புற பாடசாலைகளின் நோக்கமும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளும்.



**திருமதி. யோகேஸ்வரி நாகேந்திரராசா**
B.A Dip.in Education
(ஓய்வு ஆசிரியை, றிபேக் கல்லூரி,
ஸ்தாபகரின் புதல்வி, பழைய மாணவி)

**கல்**வியின் நோக்கம் காலத்தின் தேவையை பிரதிபலிப்பனவாகவே உள்ளன. வாழ்க்கையின் நோக்கத்திற்கேற்ப கல்வியின் நோக்கம் மாறுகின்றது. எனினும் எமது முன்னோர் அறிவையும் பண்பையும் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார்கள். "அறிவு என்பது சக்தி. அதன் மூலம் காரியங்கள் நிறைவேறுகின்றன" என சோக்கிரெட்டீஸ் கூறுகின்றார். இதே போன்று கல்வியானது ஒழுக்கத்தையும் பண்பையும் வளர்க்காவிடத்து பணம், அதிகாரம், திறமை, ஆரோக்கியம் என்பன தேவையற்றனவாகிவிடும். இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் ஒருமுறை பட்டமளிப்பு விழாவென்றில் "எங்களது கல்வியின் தரம் சித்தியடைந்தவர் சித்தியடையாதவர் ஆகியவர்களின் புள்ளிவிபரங்களைக் கொண்டு அளவிட முடியாது. கல்வியின் தரம், விழுமியங்களைப் பேணுவதிலும் நெறிப்பட வேண்டும்" எனக் கூறினார். இக் கூற்று ஒழுக்கப் பண்பியல்தான் கல்வியின் நோக்கு என்பதை தெளிவாக்குகின்றது. "உலகம் போற்ற வாழ்" என்று கூறுகையில் உலகம் என்பது அறிவும் பண்பும் உடைய சான்றோரைக் குறிப்பதாக விளங்குகிறது.

இவ்வாறு அறிவையும் பண்பையும் கல்வியின் நோக்கமாகக் கொண்டு எங்கள் முன்னோர்கள் செயற்பட்டனர். யாழ் மாவட்டத்தில் ஒவ்வோர் கிராமத்திலும் ஆகக்குறைந்தது ஒரு பாடசாலையாவது நிறுவி சிறார்கள் கற்க வசதி செய்தனர். கல்வியின் இன்றியமையாமையை உணர்த்த நம் முன்னோரின் தொலைநோக்கால், பரந்த சிந்தனையால், தியாகத்தால், சமூக முன்னேற்றத்தை இலக்காக் கொண்டு நிறுவப்பட்ட கல்விக் கூடங்கள் - கலைக்கோவில்கள் இவை. இவற்றினூடே மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கு வழிவகுத்தனர். வீட்டுக்கு அண்மையில் பாடசாலை இருக்க வேண்டியது அவசியம் என்ற உண்மையை உணர்ந்ததன் விளைவாகவே இப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. இத்தகையதொரு நோக்கோடு 1930ம் ஆண்டு அமரர் சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்களால் தோற்றம் பெற்ற ஒரு பாடசாலையே கோண்டாவிலில் இயங்கும் பரஞ்சோதி வித்தியாலயம். பாடசாலை அமைக்கப்பட்ட காலம்தொட்டு கூடுதலாக வறிய பிள்ளைகளே பயன்பெற்று வருகின்றனர்.

எங்கள் முன்னோர்கள் எந்த நோக்கோடு பாடசாலைகளை ஸ்தாபித் தார்களோ அந்த நோக்கு இன்று நிறைவேறாது பலவகையிலும் புறக்கணிக்கப்பட்ட பாடசாலை களாக கிராமம்புற பாடசாலைகள் கணிக்க ப்படுகின்றன. சகல வளங்களுடன் கிராமந் தோறும் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளை புறக்கணித்து நகர பாடசாலைகளை

மாணவர்கள் நாடுகின்றனர். இதனால் அம்மாணவர்கள் மட்டுமன்றி பாடசாலைகளும் பாதிப்பு அடைவதைக் காண்கின்றோம். அதேவேளை வீட்டுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளிற் கற்கும் மாணவர்கள் பெரும் நன்மை அடைகின்றார்கள். போதிய நேரம் கிடைக்கின்றது. தம் ஆர்வத்துக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப இணைப்பாட முயற்சிகளில் ஈடுபட அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது. உடல் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாத தேகப்பயிற்சியில், விளையாட்டுக்களில், பெற்றோருக்கு உதவி செய்வதில் மாணவர்களின் கவனம் செலுத்தப்படும். வளரும் பருவத்திற்கேற்ப உணவுவகைகளை உரிய நேரத்தில் உட்கொள்ளவும், களைப்பின்றி பாடங்களை மீளப்படிக்கவும் அவர்களால் முடியும். வீதிப் போக்குவரத்தில் விரயமாகும் நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் கல்விக்காக பெற்றோர் செய்யும் செலவும் குறைகின்றது. வளர்ந்துவிட்ட கிராமப்புற பாடசாலைகளின் சமநிலை தளம்பாது பாதுகாக்கும் நோக்குடன் "கொத்தணி", "கோட்டம்" என்பனவற்றை தோற்றிவித்தனர். ஆனால் அவை தோல்வியுற்றது மட்டுமன்றி கிராமப்புற பாடசாலைகளின் வெற்றிக்கு தடையாக இருப்பவை யாவை என்பதையும் விளக்கிநின்றது. இதனை கல்வி உலகம் நன்கு உணர்ந்திருக்கும்.

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகரமெங்கும் பல பல பள்ளி"

என்ற பாரதியார் கூற்றின்படி நமது முன்னோர் ஊர்தோறும், நகர்தோறும் எழுப்பினர் கல்விக் கூடங்கள். இருந்தும் இன்று நகர் பாடசாலைகளை வசதிபடைத்தவர்கள் மட்டுமன்றி வறிய மக்களும் நாடுவதும், கிராமப்புற பாடசாலைகளை புறக்கணிப்பதும் தடைபோட முடியாததொன்றாகி உள்ளது.

இலங்கையில் ஏறத்தாழ 10 280 அரசாங்க பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் வடமாகாணத்தில் 955 பாடசாலைகள் உள்ளன என புள்ளிவிபரம் கூறுகின்றது. மக்கள் ஆட்சியில் அனைவருக்கும் கல்வியை வழங்கவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே பாடசாலைகள் 1962ல் அரசுரிமை ஆக்கப்பட்டன. தீவின் தென்பகுதியில் இதன் நோக்கம் பெருமளவுக்கு நிறைவேற்றப்பட்டன என்றே கூறவேண்டும். வடமாகாணத்தில் கல்விநிலை கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளதாக கணிக்கப்பட்டு வளங்கள் வழங்குவதில் மட்டுப்படுத்தப்பட்டன.

வடமாகாணத்தில் தொண்ணூற்றுவீதம் அரசாங்க பாடசாலைகளாக விளங்கியபோதும் அவை ஒவ்வொன்றும் மாணவர் தொகையிலும் பௌதீக வளங்களைப் பொறுத்தவரையிலும் மிகவும் வேறுபாடு கொண்டவைகளாக விளங்குகின்றன. அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை பெறுவதில் ஒன்றுடன் ஒன்று போட்டி இடுகின்றன. சமூகத்தில் செல்வாக்குள்ளோரை ஒவ்வொரு பாடசாலையும் பெற்றோர் ஆக்குவதிலும் முனைப்பாயிருக்கின்றன. இங்கு பாடசாலை அனுமதியில் பல்வேறு கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இதன் விளைவாக பெரிய வசதிவாய்ந்த பாடசாலைகள் வசதியுள்ள மேலும் பெரியனவாகவும் வசதி கூடியனவாகவும் திகழ்வதைக் காண்கின்றோம்.

பிரபல பாடசாலைகளின் வளங்கள், அரச ஆதரவு பெற்றவர்களது ஈடுபாடு, அனுமதிக்கப்படும் மாணவர்களின் தரம், கிடைக்கின்ற ஆசிரியர்களின் திறமை என்பவற்றை நோக்கும் போது வசதி குறைந்த பாடசாலைகள் அதிகாரிகளாலும் பெற்றோர்களாலும் அலட்சியப்படுத்தப்படும். பாடசாலைகளை வளர்ப்பது என்பது பகீரதப்

பிரயத்தனம் எடுக்கவேண்டியதென்றாக இன்று விளங்குகின்றது.

மேலும் தரம்மிக்க மாணவர்களை கொண்ட பாடசாலைகளில் பொதுப் பரீட்சைகளில் பெருந்தொகையானோர் பெறும் விசேட சித்திகள், கல்லூரியின் பாரம்பரியம், விளையாட்டுக்கள், பேச்சு, இசை, நாடகம் போன்ற துறைகளில் பெறப்படும் பரிசுகள் பாராட்டுக்கள் போன்றன மாணவர்களை கவர்கின்றன. வசதியான பெற்றோரின் பிள்ளைகள் இக்கல்லூரிகளில் கற்பதைக் காணும்போது தாங்களும் இத்தகைய கல்லூரிகளில் கற்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுகின்றது. ஆனால் இது தொடர்பாக ஏற்படும் உடற்சிரமம், பொருட்செலவு, உளச்சிக்கல் போன்றவை தோற்றுவிக்கும் சமூக பொருளாதார தாக்கங்கள் சுமக்கப்பட முடியாதவை என்பதை மறந்து விடுகிறார்கள்.

இன்று பாடசாலைகளில் பெறும் சித்திகளும் சான்றிதழ்களுமே உயர்கல்விக்கூடங்களுக்கும், தொழில் உலகுக்கும் நுழைவுச்சீட்டுகளாக அமைகின்றன. பரீட்சை சான்றிதழ் ஒருவரின் வருங்காலத்தை தீர்மானிக்கின்றது. இணைப்பாடவிதானங்கள் முக்கியம் எனக்கருதப்பட்டு பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டபோதும் கணிசமான மாணவர்கள் கலந்துகொள்வதில்லை. முக்கியமாக 'பிரபல' பாடசாலைகளில் மாணவர்கள் இவற்றில் கலந்து கொள்வது குறைவு. இதற்கு எதிர்மாறாக புறக்கணிக்கப்படும் பாடசாலைகளில் இணைப் பாடவிதான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அதிகம் கிடைக்கின்றது.

ஆகவே, கல்வித்திணைக்கள அதிகாரிகள், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு பெறவாய்ப்பு இருப்பின் கிராமப்புற பாடசாலையை உயர்ந்த நிலைக்கு கொண்டு வரலாம் என்பது மறுக்கப்படமுடியாதது. அதிபர், பாடசாலை அபிவிருத்தி சபையினர் முன்வைக்கும் தேவைகளை ஆய்ந்தறிந்து முன்னுரிமை அடிப்படையில் திணைக்களம் அவற்றை நிறைவு செய்தல் வேண்டும். ஆசிரியர் தேவை, ஏனைய ஆளணியின் தேவை, பௌதீகத் தேவைகள் என்பனவற்றை அத்தியாவசியத் தேவைகளாகக் கருதி பெரிய பாடசாலை சிறிய பாடசாலை என்ற பாகுபாடு இன்றி அவற்றையும் திணைக்களம் வழங்கவேண்டும். கல்வி அடைவுகளில் சமநிலை பெறும் வாய்ப்பு அனைத்தும் கிடைக்கக்கூடிய வகையில் கல்வித் திணைக்களம் செயற்பட வேண்டும். இவ்வாறு அதிபர், பெற்றோர், மாணவர், அரச திணைக்களம் என்பவற்றின் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் உயர்ந்த பாடசாலைகளாக எங்கள் மாகாணத்தில் இவை எழவேண்டும்.

1945ம் ஆண்டு இலவசக்கல்வித்திட்டம் சி.டபிள்யு.டபிள்யு (C.W.W) கன்னங்கரா அவர்களால் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே எங்கள் பிரதேசத்தில் தாராளசிந்தை கொண்டவர்கள் இலவசக் கல்வி மூலம் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தனர். கல்வி மூலம் கிறிஸ்தவ சமயத்தை பரப்ப முயன்ற மிஷனறிகளும் பாடசாலைகளை அமைத்து கல்வியை வளர்த்தனர். இதனால் கற்றவர்கள் கூடுதலாகக் காணப்பட்டதால் இலவசக்கல்வி எங்கள் மாகாணத்தில் பாரிய மாற்றத்தையோ உதவியையோ வழங்க முன்வரவில்லை. எங்கள் முன்னோரின் கல்வியில் இருந்த ஈடுபாடே தமிழ் சமுதாயத்தை கல்வியில் தலைநிமிர்ந்து நிற்க வைத்தது. இன்று இந்நிலை சரிந்து கொண்டே போய்க்கொண்டிருக்கின்றது. கல்வி நிலையை மேம்படுத்த சகல பாடசாலைகளும் தரம்மிக்கவையாக வளர பாடுபட வேண்டும்.

அதிகாரிகளுக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைந்து, தாமதத்தையும் தவறுகளையும் தவிர்த்து, முன்னுரிமை அடிப்படையில் வளங்களை பகிர்ந்து கிராமப்புற பாடசாலை களை மீண்டும் உயிர்ப்புடன் செயற்படவைத்து ஒவ்வொரு பிரதேசமும் கல்வியில் தன்னிறைவு பெற வழிவகுக்க வேண்டியது கல்விப் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளின் கடமையாகும்.

இன்று பரஞ்சோதி வித்தி யாலயம் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள், மாணவர்களின் கூட்டுமு யற்சியால் வளர்ந்து வருவதைக் காண்கி ன்றோம். மேலும் அரச திணைக்களத்தினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று தரமான பாடசாலையாக விளங்க வேண்டும் என வாழ்த்துகின்றோம். இவ்வாறு வளர்ச்சி அடையும்போது இப்பாடசாலையை ஆரம்பித் துவைத்த கார்த்திகேசு அவர்களின் இலட்சியமும் நிறைவெய்தியதாகக் கொள்வோம்.

யுத்த சம்பந்தமாக ஜனாதிபதி ஏபிரகாம்லின்கன் அனுப்பிய ஓர் உத்தரவைப் பார்த்தார் அவரது போர் அமைச்சர் ஸ்டாண்டன். கோபம் மேலிட, "சுத்தமுட்டாளாயி ருக்கிறாரே?" என்று வெடித்தார்? சமாசாரம் லின்கன் காதுக்கு எட்டிற்று. "அப்படியா சொன்னார் ஸ்டாண்டன் விஷயம் தெரிந்தவர். என்னை அவர் முட்டாள் என்று சொல்லியிருந்தாரானால் அனேகமாக அது சரியாகத்தான் இருக்கும், எதற்கும் அவரைக் கேட்கிறேன்" என்று ஸ்டாண்டனின் அறைக்குச் சென்றார், அளவளாவினார், உத்தரவு எப்படிச் சரியானதல்ல என்று ஸ்டாண்டன் விளக்கியதும் லிங்கன் ஒப்புக் கொண்டு அதை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

## உலகில் உயரமானவை


ஏரி - டிட்டிகா - அன்டீஸ் மலைத்தொடர்

உயரமாகப் பறக்கும் பறவை - டெர்ன்

நீர்வீழ்ச்சி - சாஸ்டோர் ஏஞ்சல்

உயரமான தலைநகர் - லாசா . தீபெத்


எரிமலை - கொட்டபக்சி . தென் அமரிக்கா



கல்விச் சுற்றுலா
2002




சிரமதானப்
பணியில்
மாணவர்கள்
1996



(ACTION FAIM)
புனரைமைக்கப்பட்ட கிணறு
திறப்பு விழா
2001

**1901~1997வரை பல கல்விச் சட்டங்களும், கல்விச் சீர்திருத்தங்களும், கல்வி வெள்ளை அறிக்கைகளும் இடம்பெற்றன. இவை யாவும் இலங்கைக் கல்வி வரலாற்றில் பல முக்கிய அம்சங்களைத் தாங்கி வந்து கல்வியைச் செழுமைப்படுத்தின. கல்வி அறிவியல், சீரமியம், ஒழுங்கமைப்பியல் போன்ற செயற்பாடுகளூடாக வளர்ச்சி பெற்றுப் பெருவிருட்சமாகிக் கிளைபரப்பியுள்ளது.**

# 1900 இன் பின்னர் கல்விவரலாற்றில் ஏற்பட்ட முக்கிய கல்விச் சட்டங்களும், கல்விச் சீர்திருத்தங்களின் சுருக்கமும்.



**திரு. எஸ். சண்முககுமார்**
B.A, Dip.in.Edu. M.Ed, S.L.P.S.
**அதிபர்**
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

இலங்கையின் கல்வி வரலாறானது கி.பி 1900 ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் அதன் பரிணாம வளர்ச்சியில் பல முக்கிய காலகட்டங்களைச் சந்தித்தது. அவற்றின் பல்வேறு அம்சங்களையும் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவுக்கு எழுத வாசிக்கத் தெரிந்தோர் கூடுதலாக உள்ள நாடுகளில் இலங்கையும் விஷேடமான இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமையானது இலங்கைக் கல்வி வரலாற்றில் முக்கியமான அம்சமாகும்.

போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அன்னியர் கைகளில் கல்வி வசப்பட்டிருந்த போது அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே கல்விக் கொள்கைகளை வகுத்திருந்தனர். இங்கு அவர்கள் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். வரலாறு காட்டும் எச்சங்களிலிருந்து நாம் இதனை அறிய முடிகின்றது.

1901 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக் கல்வியின் கல்விச் சட்டங்களிலும், திருத்தங்களிலும் இங்கிலாந்தில் கல்வி பயின்ற இலங்கையரதும், அரசியல், சமூக, பொருளாதார வசதி படைத்தவர்களதும் நெறிப்படுத்தல் இருப்பதை வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது.

1900 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்ட 1829 இன் கோல்புறூக் - கமரன் கல்விச் சீர்திருத்தம், 1868 இன் மோர்கன் குழுவின் கல்விச்சிபார்சு என்பன ஆங்கிலேயரால் திட்டமிடப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களாகவே இருந்தன. இவற்றினால் ஒருசில நன்மைகளே கிடைத்தனவாயினும் அந்நிய கலாசாரத்திற்கு உட்பட்டதாகவே காணப்பட்டன.

1900 இற்குப் பின்னர் அத்தகைய நிலை சற்று மாற்றமடைந்து கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 1901 கல்விச் சட்டத்திலிருந்து கல்வி கற்ற இலங்கையரின் கல்விக் கொள்கைகளுக்கும், வேண்டுகோளுக்கும் செவிசாய்க்கப்பட்டு வந்தமையும் இலங்கையின் கல்வி வரலாற்றில் புதிய திருப்பத்தை உண்டுபண்ணியது எனலாம். இக் காலங்களில் தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களின் வளர்ச்சிப் போக்கும் அப்போதைய அரசியல், பொருளாதார தாக்கங்களுக்கு இடந்தரக்கூடியதாகவே கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு கல்வியில் வளர்ச்சிப் போக்கைக் கட்டிக் காத்து நிற்க உதவியது. **1901~1997வரை பல கல்விச் சட்டங்களும், கல்விச் சீர்திருத்தங்களும், கல்வி வெள்ளை அறிக்கைகளும் இடம்பெற்றன. இவை யாவும் இலங்கைக்**

**கல்வி வரலாற்றில் பல முக்கிய அம்சங்களைத் தாங்கி வந்து கல்வியைச் செழுமைப்படுத்தின. கல்வி அறிவியல், சீர்மியம், ஒழுங்கமைப்பியல் போன்ற செயற்பாடுகளூடாக வளர்ச்சி பெற்றுப் பெருவிருட்சமாகிக் கிளைபரப்பியுள்ளது.** இவ்வகையில் ஏற்பட்ட கல்விச் சட்டங்கள், சீர்திருத்தங்கள் என்பவற்றின் சுருக்கங்களை நோக்குவோம்.

### 1901 ஆண்டு - குடிசன மதிப்பீடு பற்றிய அறிக்கை.

சேர். பொன். அருணாசலம் தலைமையிலான குழுவானது பரந்தளவில் எழுத்தறிவின்மை காணப்பட்டமை, பாடசாலை செல்லாத பிள்ளைகள் அதிகம் காணப் பட்டமை, மற்றும் பாடசாலைகள் போதியளவு காணப்படாமை போன்ற குறைபாடுகளைக் கண்டறிந்து பாடசாலைகளில் மாணவர் வரவு கட்டாயம், சிறு பிள்ளைகளுக்கு சுய மொழியில் கல்வி அவசியம் வழங்கப்பட வேண்டும் என்றகோரிக்கைகளை முன் வைத்தது.

### 1905 ஆண்டு - ஆரம்பக் கல்வி ஆணைக்குழு (வேல்ஸ் குழு) வின் சிபார்சுகள்.

சனத்தொகை கூடிய இடத்தில் பள்ளிகளை அமைத்தல், பள்ளி நிர்வாகத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் பங்குகொள்ளல், ஆரம்பப் பிரிவுக்குக் கட்டாயக் கல்வி, கல்விக்கென கல்விமாவட்டம், கல்வி வட்டாரக் குழுக்கள் என்பன அமைத்தல், கட்டாயக் கல்வி மனச்சான்று வாசகத்திற்கு மதிப்பளித்தல், கல்விச் செலவில் மத்திய அரசுக்கு அரைப்பங்கும் உள்ளூர் நிறுவனங்கள் அரைப்பங்கும் ஏற்றுக்கொள்ளல். பாடசாலைகள் பரிசோதிக்கப்பட்டு வருடாந்த மதிப்பீட்டு அறிக்கை கொடுத்தல் என்பன இக் குழுவின் சிபார்சுகளாக முன்வைக்கப்பட்டன.

### 1906 ஆண்டு - நகர்ப்புறப் பாடசாலைக் கட்டளைச் சட்டம்.

இது வேல்ஸ் கல்விச் சிபார்சுகளின் படி உருவானதாகும்.

- இடைநிலைக் கல்விக்கு முக்கிய மளித்தல்.
- உள்ளூர் மன்ற உதவி நன்கொடை மாதிரியில் பள்ளிகளை அமைத்தல்.
- 6-12 வயது வரை கட்டாயக் கல்வி வழங்க வரவுஅலுவலரை நியமித்தல்.
- அரச பள்ளிகளில் மத போதனை இல்லை. உதவி நன்கொடை பெறும் பள்ளிகளில் மனச் சான்று வாசகப் படி நடத்தல்.
- சுயமொழிக் கல்விக்கு உரிய இடமளித்தல்.

என்பன போன்ற அமசங்களைக் கொண்டதாக அமைந்தது.

### 1907 ஆண்டு - கிராமப்புறப் பாடசாலைக் கட்டளைச் சட்டம்.

இச் சட்டத்தின் பிரகாரம்

- கிராமப்புறம், மலையகம் என்பவற்றில் வசதியற்ற பிள்ளைகளுக்குச் சுயமொழிக் கல்விக்கு ஏற்பாடு செய்தல்.
- வரி இறைப்பகுதி கல்வி மாவட்டப் பொறுப்பில் 6-12 வயது வரை கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்தல்.
- பள்ளியில் மனச்சான்று வாசகப்படி இயங்குதல்.
- ஒவ்வொரு பாடசாலையும் பரிசோதித்து அறிக்கைதயாரித்தல்.

என்பன முக்கியம் பெறுகின்றன.

### 1911 ஆண்டு - மக்லியட் அறிக்கை.

இடைநிலைக் கல்வி பற்றி ஆராய ஆள்பதியால் நியமிக்கப்பட்ட குழுவே மக்லியாட் குழுவாகும். இதன் அறிக்கை

சுயமொழிப் பள்ளிக்குப் பதிலாக ஆரம்பப் பள்ளியும், இடைநிலைப்பள்ளியும் அமைதல் வேண்டும். ஆரம்ப வகுப்பில் கல்விமொழியாக தமிழ் / சிங்களம் அமைதல் வேண்டும். மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்கலாம். மேலும் நான்காம் வகுப்பில் சித்தியடைந்தால் உதவி நன்கொடை பெறலாம் என்பதாகவும், கலைத்திட்டத்தில் விஞ்ஞானம் பொதுவானதாகவும் ஆண்களுக்கு உடலுழைப்பு, பெண்களுக்கு வீட்டுவேலை என்பதாகவும் அமைந்தது. எட்டாம் வகுப்பில்

இறுதித் தேர்வு நடத்தப்படல் வேண்டும், முதலாம் தர சிவில் சேவை அதிகாரி கல்விப்பணிப்பாளராக செயற்படல் வேண்டும். பல்கலைக்கழகக் கல்வியை இலங்கை யிலிருந்து மேற்கொள்ள வசதி ஏற்படுத்தல் போன்ற விடயங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

### 1912 ஆண்டு - பிறிச் அறிக்கை.

இவ்வறிக்கையின் படி, இடைநிலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல், அதாவது எல்லோருக்கும் இடைநிலைக்கல்வியை வளங்குதல், அரச உத்தியோகத்தர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பித்தல், பெறுபேறுகளுக்குப் பதிலாக வரவு அடிப்படையில் நன்கொடை வழங்குதல், என்பன சிபார்சுகளாக அமைந்தன. மேலும் ஆசிரியர்களுக்குப்பயிற்சி அவசியம் எனப்பட்டதுடன் உள்ளூர்த் தேர்வு வைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

### 1920 ஆண்டு - கல்விக் கட்டளைச் சட்டம்.

இதுவே இலங்கையில் முதன்முதலில் முறைப்படி நிறைவேற்றப்பட்ட சட்டமாக கருதப்படுகின்றது. இது 1919 இல் கொண்டுவரப்பட்டு 1924 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் படி,

- கல்வித் திணைக்களத்துக்குச் சட்டரீதியாகப் பணிப்பாளரைப் பெற்றுக் கொடுத்தல். இவர் ஆள்பதிக்குப் பொறுப்புக் கூறல் வேண்டும்.
- கல்விச் சபையானது ஆள்பதியால் நியமனம் பெற்றது. இதில் 16-20 உறுப்பினர்கள் காணப்படுவர். இது பணிப்பாளருக்கு ஆலோசனை கூறும்.
- பள்ளியில் சேர ஒருமதம் தடையாக அமையக்கூடாது. உதவி பெறும் பள்ளியில் மனச்சான்று வாசகம் உண்டு.
- கட்டாயக் கல்விக்கு கல்விமாவட்டக் குழுக்கள் உருவாக்கல்.
- தோட்டப் பள்ளிக்கு 6-10 வயது வரை கல்வி அவசியம் என்பன முக்கியம் பெற்றன.

### 1939 ஆண்டு - கல்விக் கட்டளைச் சட்டம்.

இச்சட்டத்தின் முக்கிய விடயங்களாக

- கல்விச் செயற்குழு அமைத்தல்.
- இக் கல்விச் செயற்குழுவுக்கு அதிகாரம் உண்டு. கல்விப் பணிப்பாளருக்கு வக்குரிமையில்லை.
- கல்விச் செயற்பாடுகளைப் பரவலாக்க உள்ளூர் அதிகார சபையை உருவாக்குதல்.
- பெற்றோரின் சம்மதத்துடனேயே சமயக் கல்வி போதிக்கப்படல்.
- அரச பள்ளியில் சமயம் போதிப்பதில்லை. பெற்றோர் விரும்பினால் சமய உரைநிகழ்த்தலாம்.
- கல்வித்துறை சார்ந்த சட்டக்கோவை ஆக்கும் உரிமையைக் கல்வி நிர்வாகக்-குழுவிற்கு உரியதாக்குதல்.
- 6-14 வயது வரை கட்டாயக் கல்வி. 6-10 வயது வரை தோட்ட, முஸ்லீம் மக்களுக்கான கட்டாயக் கல்வி.

என்பன இவ்வறிக்கையில் காணப்பட்டன.

### 1942 ஆண்டு - பல்கலைக் கழகக் கல்விக் கட்டளைச் சட்டம்.

இதன் முக்கிய அம்சங்களாக

- கலை, விஞ்ஞான பீடங்களுடன் கூடிய பல்கலைக்கழகம் அமைத்தல்.
- மருத்துவக் கல்லூரி இணைந்து செயற்படல்.
- பொறியியல், விவசாய பீடங்களை உருவாக்கி இணைய வாய்ப்பை ஏற்படுத்துதல்.

என்பனவை காணப்பட்டன.

### 1943 ஆண்டு 24 ஆம் இலக்க பருவப்பத்திரம். (கல்வி விசேட குழு அறிக்கை) C.W.W. கன்னங்காரா அறிக்கை.

இவ்வறிக்கையின் முக்கிய விடயங்களாக தாய்மொழி மூலம் கல்வி,

அனைவர்க்கும் இலவசக் கல்வி என்பன காணப்பட்டன.

### 1950 ஆண்டு - கல்விச் சட்டம்.

இதன் படி பாடசாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

1. இடைநிலைப் பாடசாலை - தரம்.i பாடசாலை.
2. சிரேஷ்ட பாடசாலை - தரம்.ii பாடசாலை.
3. செய்முறைப் பாடசாலை - தரம்.iii பாடசாலை.

### 1951 ஆண்டு - கல்விச் சட்டம்.

கல்வித் திணைக்களத்தில் ஆங்கிலப் பிரிவு, விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவு, என்பன இதன் கீழ் உருவாக்கப்பட்டன.

### 1961 ஆண்டு - கல்வி மாநாட்டுத் தீர்மானங்கள்.

இதன் கீழ் நாட்டுக்குக் கல்விப் பணிப்பாளரும், மாகாணத்திற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளரும், மாவட்டத்திற்கு பிரதம கல்வி அதிகாரியும் நியமனம் செய்யப்பட்டு இவர்களூடாக கல்வி நிர்வாகம் செயற்பட்டது.

### 1961 ஆண்டு - கல்வி தேசிய ஆணைக்குழு அறிக்கை.

இதன் படி சகல பாடசாலைகளும் அரச பொறுப்பின் கீழ் வரவேண்டும். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்பன அமைந்தன.

### 1964 ஆண்டு - கல்வி வெள்ளை அறிக்கை.

இதன் படி பொதுக் கல்வியுடன் தொழிலநுட்பக் கல்வியை இணைக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

### 1966 ஆண்டு - கல்விச் சட்டம்.

கல்விப் பணிப்பாளரின் பதவி பணிப்பாளர் நாயகம் என மாற்றியமைக்கப்பட்டது. உதவியாக இரு உதவிப் பணிப்பாளர்கள் நியமனம் பெற்றனர். இதே ஆண்டில் உயர்கல்விச் சட்டத்தின் படி வித்தியோதய, வித்தியலங்கார பல்கலைக்கழகங்கள் முழுநிலைக்கு உயர்த்தப்பட்டன.

### 1972 ஆண்டு - கல்விச் சீர்திருத்தம்.

**இச்சீர்திருத்தப்படி**

- ஆரம்பக் கல்விக்கான வயது 6 ஆக்கப்பட்டது.
- ஆரம்ப நிலை 1-5 வகுப்பு.
  கனிஷ்ட இடைநிலை 6-9 வகுப்பு.
  சிரேஷ்ட இடைநிலை 10-11 வகுப்பு.
  அடியெடுக்கும் வகுப்பாக 12 ஆம் வகுப்பு அமைந்தது.
- கனிஷ்ட இடைநிலைக் கல்வியில் தொழில் முன்னிலைப் பாடம் i, தொழில் முன்னிலைப் பாடம் ii என்ற புதிய பாடம் அறிமுகமானது.
- கனிஷ்ட இடைநிலைக் கல்வியில் நடைமுறைச் சிங்களம் அல்லது தமிழ் கற்பிக்கலாம்.
- தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சை நடாத்தப்படல்.
- பல்கலைக்கழகக் கல்வியில் பொதுநிதியும் வரிவிதிப்பும், கல்வி பெருந்தோட்ட முகாமைத்துவமும், மதிப்பீடும், வெகுசனத்தொடர்பு, நூலகக்கலை அபிவிருத்திக் கற்கை நெறி என்றவாறு புதிய நெறிகள் சேர்க்கப்பட்டது.

### 1981 ஆண்டு - கல்விச் சீர்திருத்தம்.

இச் சீர்திருத்தம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியது.

- வகுப்பு என்ற பதம் நீக்கப்பட்டு ஆண்டு என்ற பதம் அறிமுகமானது.
- வகுப்புக்கள்,
  ஆரம்பநிலை - ஆண்டு 1-5 வரை.
  கனிஷ்ட இடைநிலை - ஆண்டு 6-8 வரை.
  சிரேஷ்ட இடைநிலை - ஆண்டு 9-11 வரை.
  கல்லூரி மட்டம் - ஆண்டு 12-13 வரை.
  என்றவாறு வகுக்கப்பட்டன.
- தொழில்நுட்பப்பாடம் இடம்பெற்றது.
- கொத்தணி அமைப்பு முறை :- இதன் கீழ் கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளும், கொத்தணிப் பாடசா-

லைகளும் உருவாக்கப்பட்டன.

■ மேலும் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழு, தொழில்னுட்பக் கல்வி அதிகார சபை, விவசாயக் கல்விச்சபை, தேசியகல்வி ஆணைக்குழு, கல்வி மதியுரைச் சபை போன்ற புதிய அமைப் புக்களும் உருவாக்கப்பட்டன.

### 1981 ஆண்டு - மாவட்டக் கல்வி நிர்வாக மீள் ஒழுங்கு.

இதன் கீழ்

■ சகல கல்வி அலுவலகங்களிலும் நிர்வாக ஒழுங்கை மேற்கொள்ளல்.

■ பிரதேச கல்விப் பணிப்பாளர்களை குழுத்தலைவராக்குதல்.

■ பிரதேசத்திற்குரிய கல்வி அபிவிருத்தி, திட்டமிடலுக்குப் பொறுப்பாக்கல்.

■ பாடசாலைத்திட்டமிடல், கல்வி அபிவிருத்தியைப் பொறுப்பித்தல்

என்பன அமைந்தன.

### 1984 ஆண்டு- முகாமைத்துவ ரீதியான கல்விநிர்வாக மீள் ஒழுங்கு.

இதன் முக்கிய விடயங்களாக

■ பிரதேச மட்டத்தில் உப பிரதேச மட்டம். (கோட்டம் அமைத்தல்)

■ வட்டாரக் கல்வி அதிகாரி முறைமை ஒழித்தல்.

■ பாடசாலை வலயமாக்கல் (கொத்தணி)

■ மாவட்ட முகாமைத்துவ நிலையம்/ பயிற்சி அளித்தல் . என்பன இடம்பெற்றன.

### 1985 ஆண்டு - 28ஆம் இலக்கக் கல்விச் சட்டம்.

இதன் கீழ் தேசிய கல்வி நிறுவகம் (NIE) நிறுவப்பட்டது. இதுவே பாடநூலாக்கம், கல்வியபிவிருத்தி, ஆசிரிய பயிற்சிகள், பட்டப்பின் பயிற்சிகள், ஆளணி முகாமைத்துவப் பயிற்சிகள் மற்றும் கல்விக்குப் பொறுப்பாக அமைகிறது.

### 1986 ஆண்டு - 30 ஆம் இலக்கக் கல்விச் சட்டம்.

இதன்படி கல்விக் கல்லூரிகள் உதயமாகின. இவை க.பொ.த. உயர்தரப் பரீட்சைச் சித்தியுடன் உள்வாங்கி நிறுவனரீதியாக வதிவிடத்துடன் கூடிய ஆசிரிய பயிற்சியை வழங்கி ஆசிரியர்களை உருவாக்கும் நிறுவனங்களாக விளங்குகின்றன.

### 1991 ஆண்டு - 19 ஆம் இலக்கக் கல்விச் சட்டம்.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது கல்விக் கொள்கை, பாடநூலாக்கம், பதவியுயர்வு, ஆசிரிய ஆளணித்தேவை, ஆசிரியர் நியமனம், இடமாற்றம், கலைத்திட்டம், பயிற்சிகள், மாணவர் அனுமதி என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது.

### 1997 ஆண்டு - புதியகல்விச் சீர்திருத்தம்.

இதன்படி,

■ ஆரம்பக் கல்விக் கலைதிட்டம் 3 முதன்மை நிலைகளாக வகுக்கப்பட்டது.

■ ஆரம்பக் கல்வி அர்த்தமுள்ள விளையாட்டுடன் கூடிய கல்வியாக அமைதல்.

■ கனிஷ்ட இடைநிலைக் கல்வி முடிவில் (தரம் 6-9) கனிஷ்ட பள்ளிக்கூடத் தேர்ச்சித்தேர்வு நடைபெறும்.

■ சிரேஷ்ட இடைநிலையில் (10,11) அடிப்படைப்பாடங்கள், தெரிவுப் பாடங்கள் என்ற வகையில் பாடத் தெரிவு இடம்பெறுகிறது.

■ உயர்தரத்தில் கலை,விஞ்ஞானம், வர்த்தகம், தொழினுட்பம் என்ற 4 பிரிவுகள் இருக்கும்.

■ பாடசாலைகள்

(i) 1-9 ஆம் தரம் வரையானது.

(ii) 10-13 ஆம் தரம் வரையானது. என மீள் கட்டமைப்புச் செய்யப்படும்.

■ வாழ்கைத் தேர்ச்சிகளுக்கான கல்வி இடைநிலைமட்டத்தில் புகுத்தப்படல்.

■ ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.

■ செயற்பாட்டறை, விளையாட்டு, செயற்றிறனுடன் ஆற்றுப்படுத்தலும் சீரியமும் கூடிய கல்வி, தேர்ச்சி மட்டக் கல்வி என்ற புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டிருத்தல்.

■ பல்கலைகழகப் புகுமுகப்

பரீட்சையில் மூன்று பாடங்களுடன் பொதுச் சாதாரண தேர்வும் இடம்பெறல்.

■ ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் வாண்மை நிலை அதிகரிப்பு, மேம்பாட்டை உயர்த்தும் பயிற்சிகள்மேற்கொள்ளப்படல் என்பவற்றை ஊக்குவித்தல். போன்ற விடயங்கள் முதன்மை பெற்றுள்ளன.

இவ்வாறாக கி.பி. 1900 ஆம் ஆண்டின் பின்னர் பல்வேறு முன்மொழிவுகளும் கல்விச் சீர்திருத்தங்களும் காலத்திற்குக் காலம் தோன்றி இலங்கையின் கல்வி வரலாற்றினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளன.

## உசாத்துணைநூல்கள்.



1. "கலைத்திட்டமும் பாடசாலைச் சமூகமும்" திறந்த பல்கலைக்கழகம்- துண்டம்-06
2. "ஆசிரியர் இயல்" கலாநிதி சபா. ஜெயராசா ஸ்ரீலங்கா புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
3. "அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்" பாடவிதான அபிவிருத்திப்பிரிவு-ஆரம்பக்கல்வி, தேசிய கல்வி நிறுவகம்.
4. "பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் நினைவுப் பேருரை" பேராசிரியர் வ. ஆறுமுகம்.
5. "புதிய கல்விச் சீர்திருத்தவேலைத்திட்டம்" உயர்கல்வி அமைச்சு.
6. "புதிய கல்விச் சீர்திருத்தம் ஒரு நோக்கு" கலாநிதி சபா. ஜெயராசா. பொஸ்கோ, நல்லூர்.
7. "புதியகல்விச் சீர்திருத்தம்" (பொதுக்கல்விக்குரியது) கல்வி உயர் கல்வி அமைச்சு.
8. "கல்வியின் புதிய பாதை" கல்விச் சீர்திருத்த அறிக்கை.
9. 1981 கல்வி வெள்ளை அறிக்கை.
10. "இலங்கையின் கல்வி வளர்ச்சி" சோ.சந்திரசேகரன், மா.கருணாநிதி. சூடாமணி பிரசுரம். சென்னை
11. "புதிய கல்விச் சீர்திருத்தங்கள்" யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம். 1999
12. "கல்வி வெள்ளை அறிக்கை" (வீரகேசரி 13-11-1981.)
13. "இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர்" பகுதி iii.


**வலிமை, உடலினின்று வருவதில்லை அசைக்க முடியாத மன உறுதியிலிருந்து வருகிறது.**


**நமது மனத்தின் தூய்மை அதிகமாக இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும். அவ்வளவுக்கவ்வளவு வெற்றி இன்னும் வேகமாகக் கிடைக்கும்.**

**காந்தியடிகள்**

## கட்டிமுடிக்கப்படாத திறந்த வெளி அரங்கு



## கட்டிமுடிக்கப்படாத மாடிக் கட்டடம்



வறுமையை போக்குவதற்கு இலங்கையில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. பாடசாலையிலும்கூட சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை இன்றுங் கூட தொடர் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன.

# கல்வி அபிவிருத்தியின் பின்புலத்தில் வறுமை



**மு.பரஞ்சோதி**
அதிபர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**21ம்**நூற்றாண்டின் ஆரம்பத்திலும்கூட வறுமை நாம் எதிர்நோக்கும் பெரிய சவாலாக அமைந்துள்ளது. இலங்கையில் கல்வியறிவு வளர்ச்சி வீதம் 92% மாக காணப்பட்ட போதும்கூட இலங்கையில் கிராம குடித் தொகையில் 79% சதவீதமானோர் வறியவர்களாக இருந்து வருகின்றனர் என்ற உண்மையை உலக வங்கி அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. 1995/96ம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி இலங்கையின் மொத்த குடித்தொகையில் 26.7% குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

இலங்கையில் வறுமையை தோற்று விக்கும் காரணிகளாக பொருத்தமற்ற கல்வி முறைமை, குறைந்த மட்டத்திலான மானிட அபிவிருத்தி, பெண்களின் தாழ்வான சமூக அந்தஸ்து என்பனவும், அரசியல், பொருளாதார, யுத்த நடவடிக்கைகளும் வறுமையை குறைந்தகாலத்தில் தோற்றுவிக்கும் காரணி களாக அமைந்துவிட்டன. வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தியின் பின்புலத்தில் வறுமை முழுமையாக குடி கொண்டுள்ளது. எனினும் வெளிநாட்டு வருமானங்கள் அதனை வெளிக்காட்டாமல் மூடி இருக்கும் நிலையையும் கவனத்திற் கொள்ளுதல் அவசியம்.

வறுமை கல்வியை வெகுவாக பாதிக்கும் கல்வியானது வறுமைச்சூழலை இல்லாதொழிக்க வேண்டும். இந்த இரு வேறுபட்ட சூழலை கட்டியெழுப்ப மனித வள அபிவிருத்தி கல்வி கலாச்சார அமைச்சு பல கல்விச் செயற்திட்டங்களை வகுத்துள்ளது. கல்வித்திட்டங்களை உருவாக்குவது மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்தி அதன் வெளியீட்டின் பயனை பெற வேண்டும்.

கல்வியும் பிரதேச வளமும் இணைய வேண்டும். அதற்கூடாக வேலைவாய்ப்பும் அதற்கூடாக பொருளாதர சமூக அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும். இச் செயற்பாடே சமூக அபிவிருத்தியை எழுச்சி பெறச் செய்ய வறுமையை இல்லாதொழித்து விடும். இலங்கையில் இளைஞர்கள் தாம் பெற்ற கல்விக்கு ஏற்ற விதத்திலான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகின்றது. இது இளைஞர்களை விருத்தி நிலைக்கு இட்டுச்செல்கின்றது. வடக்கு கிழக்கு மக்கள் கல்விக்காக பெரும் மூலதனம் இடுகின்றனர். அந்த மூலதனம் வீண் விரயமாகும் போது சமூக கிளர்ச்சிகள் தோற்றம் பெறுகின்றன. 1999ல் இலங்கையில் வேலையின்மை 8.8% வீதமாக காணப்படுகின்றது.

தொழில் வாய்ப்புக்களை உருவாக் ககூடிய கல்வி முறையினை புகுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். உயர் கல்வி வரையறுக்கப்பட்ட நிலையிலிருப்பதால், ஆண்டு தோறும் க.பொ.த.சாதாரணதரம் சித்தியடைந்த, க.பொ.த.உயர்தரம் சித்தி யடைந்த பெரும்பாலான பிள்ளைகள் பொருத்தமான வழிகாட்டலின்றி கைவிடப் படுகின்ற நிலை கல்விப்புலத்தில் இன்றும் அவதானிக்க கூடியதாக உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. முறைசாரா கல்வி அமைப்புக்கள் வலுவுள்ளதான பயிற்சி களையும், தொழிலுக்கு தொடர்ச்சியான வழி காட்டியாகவும் அமைய வேண்டும். இலங்கையை பொறுத்தவரை முறைசாராக்

கல்வி அமைப்புக்கள் ஓரளவு தொழிற் பயிற்சியை வழங்கிய போதிலும் தொடர்ந்து அத்தொழிலை மேற்கொள்ள வங்கிக்கடன். (மூலதனம்) உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்ற தொடர் நிகழ்வுகளில் கவனம் செலுத்துவதில்லை. இவற்றுக் கிடையிலான தொடர்புகளும் இல்லை. இதனால் அவை வலுவிழந்து காணப்படு கின்றது முறைசாரா கல்வியில் வறுமையை போக்ககூடிய சிறப்பான அம்சங்கள் காணப்பட்ட போதும் அவை தனது தொடர்ச்சியான வழிகாட்டல் சேவையை வழங்காத காரணத்தினால் நம்பிக்கை இழக்கும் நிலையில் காணப்படுகின்றன. இதனால் இளைஞர் சக்தி வீணடிக்கப் படுகின்றது. இது வறுமை நிலையை மேலும் உக்கிர நிலைக்கு கொண்டு செல்கின்றது.

வறுமையை போக்குவதற்கு இலங் கையில் பல திட்டங்கள் முன்வைக் கப்பட்டன. பாடசாலையிலும்கூட சில திட்ட ங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை இன்றுங்கூட தொடர் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன. போஷாக்கு அற்ற குழந்தை களின் எண்ணி க்கையும் அதிகரித்தே வருகின்றது. இது கல்வி அபிவிருத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கல்வி மீதான அபிவிருத்தியினை மேற்கொள்ளும் அதே வேளை வறுமையை தணிப்பதற்கான சமூக அபிவிருத்தி திட்டங்களையும் வடிவமைக்க வேண்டும். வீட்டுத்தோட்டம், சுய தொழில் பயிற்சி, விவசாய நுட்பங்களை அறிமுகம் செய்தல், புதிய மரநடுகை, மூலிகைநடுகை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி போன்ற துறைகள் வளர்க்கப்பட வேண்டும். சமூர்த்தி செய்திட்டங்கள் இவற்றில் கவனம் செலுத்த தலைப்பட்டன. ஆயினும் அவை இலங்கை முழுவதையும் பிரதிபலிக்கவில்லை.

வறுமையை உடன் ஏற்படுத்தும் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். போர் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக சீரழித்ததோடு ஒவ்வொரு குடும்பத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இது குடும்ப வறுமையை தோற்றுவித்த முதல் காரணி யாகவும் வர்ணிக்க முடியும். இவை கல்வி மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கல்வி மீதான பின்புலத்திலுள்ள வறுமையை இனம் கண்டு இல்லாதொழிப்பதன் ஊடாகவே கல்வி அபிவிருத்தியை நிலைநாட்ட முடியும் என்பதால் புரிந்துணர்வுடனான தூய சிந்தனையுடன் எம்மை நாமே அர்ப்பணிப்பதன் மூலம் உண்மையான கல்விக்கூடான மனித வள விருத்தியினை ஏற்படுத்த முடியும்.

**முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கௌரவம், கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாகும். முதியவர்களுக்கு அவர்களது வயோதிபத்தின் காரணமாகக் கண்ணியமளிக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும், அவர்களது வயோதிவப் பருவத்தில் மரியாதை செய்பவர்களைக் கடவுள் நியுமிக்கிறார்.**

**நபிகள் நாயகம்**

# பரிசளிப்பு விழா 2002



பிரதம விருந்தினர் திருமதி ச. காங்கேயன் அவர்கள் (உதவிக்கல்விப் பணிப்பாளர்- நல்லூர் கோட்டம்) அழைத்து வரப்படும்போது.




அதிபர் திரு. எஸ்.சண்முககுமார் அவர்கள் உரையாற்றும் போது.



மாணவர்களின் கலை நிகழ்வுகளின் போது.

இலங்கையிலே நாட்டுக்கூத்து தமிழகத்தில் தெருக்கூத்து என அழைக்கப்படும். ஆட்டமும், பாட்டும் மிக அதிகமாக இடம்பெற்று ஓரிரவு முழுவதும் ஆடப்படும் இத்தகைய கூத்துக்கள் புராண இதிகாசக் கதைகளாகவோ, அந்நியரின் ஆக்கிரமிப்புக்கெதிராக விடுதலைப் போர் நடாத்திய வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற வீரர்களின் வரலாறுகளாக இவை அமைந்தன. இவற்றோடு கிறிஸ்தவ சமய சார்பான கதைகளையும் ஞானசவுந்தரி, சத்தியவன் சாவித்திரி முதலிய நாடகங்களை கூத்துக்களாக்கி நடிக்கும் வழக்கம் இருந்தது.

# இலங்கைத் தமிழரின் பாரம்பரிய இசைவளர்ச்சி




**திருமதி.ப.சந்தானலஷ்மி**
Dip-in-Muci, Dip in Edu.
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.


**இலங்கையிலே** தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களிலே பரந்து வாழ்கின்றார்கள். இவர்கள் மத்தியில் இசையை பரப்புவதற்காக தென்னிந்தியாவிலிருந்து ஆரியச் சக்கர வர்த்தியால் கர்நாடக இசை கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்னரே பண்ணிசை, நாடகப்பாடல், நாட்டுக்கூத்து, தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரி, தொழிற்பாட்டு, கும்மிப்பாட்டு போன்றனவும் பிற்காலத்தில் எழுந்த மெல்லிசையையும் குறிப்பிடலாம். இவை இடத்துக்கிடம் வேறுபட்டபோதிலும் ஒரு இடத்தில் வளர்ச்சியடைந்த இசை இன்னொரு இடத்தில் பின்தங்கியுள்ளது. இதற்கு காரணம் அவர்களிடத்திலுள்ள கலைப்பாங்கு மரபு ரீதியாகவே கொண்டுவரப்படுகின்றது.

சங்ககாலம் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டு வரையும் இசை வளர்வதற்கு அக்காலப் புலவர்களே காரணமெனக் கூறலாம். ஆழ்ந்த கருத்துக்களை இனிய மொழி நடையில் பாடல் வாயிலாக எடுத்துக்கூறி யிருக்கின்றார்கள். ஐந்நூற்றிற்கும் மேற்பட்ட புலவர்கள் செய்யுள் செய்திருக்கின்றார்கள். மக்களுடைய ஒழுக்கங்களும், மனோபா வங்களும் தான் செய்யுளுக்குப் பொருளாக அமைதல் வேண்டும் என்பது அக்கால மரபாகும். அந்த மரபு ரீதியில் ஏற்பட்ட யாப்புக்கள், கீர்த்தனைகள், பிரபந்தங்கள், அகவல், வெண்பா. விருத்தம், சிந்து போன்றன மக்களிடத்தில் பரப்பப்பட்டது.

தமிழ் மக்கள் மத்தியில் முதன் முதலில் கவிதைகள், நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களே வேரூன்றி இருந்தன. நாடகக் கலை என்பது அபினயமும், இசையும் இணைந்த ஆடலைத்தான் குறிக்கப்படுகின்றது. சோழர் காலத்தில் கோயிலை மையமாகக் கொண்டெழுந்த நாடகங்களாய் இராஜரா ஜேஸ்வர நாடகம், பூம்புலியூர் நாடகம் என்பன கல்வெட்டுக்கள் வாயிலாக அறியவருகின்றன.

இவ் நாடகங்கள் இங்கு பல இடங்களில் மேடைநாடகங்களாக நடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. நாடகம் ஒரு மேடைக்கலை. சமுதாய நிகழ்வுகளைப் பாத்திரங்களின் நடிப்பினாலும் உரையாடலாலும் மக்களின் முன்பு கலை வடிவமாகக் காட்டி நயக்க வைப்பதே நாடகக்குறிக்கோள்.

விஜய நகர காலத்தில் பள்ளு, குறவஞ்சி ஆகிய பிரபந்தங்களிலே நாடகப் பண்பினைப் பெருமளவு காணலாம். இவை நாட்டார் இயல் அடிப்படையில் அமைந்துள்ளன. **இலங்கையிலே நாட்டுக் கூத்து தமிழகத்தில் தெருக்கூத்து என**

**அழைக்கப்படும். ஆட்டமும், பாட்டும் மிக அதிகமாக இடம்பெற்று ஓரிரவு முழுவதும் ஆடப்படும் இத்தகைய கூத்துக்கள் புராண இதிகாசக் கதைகளாகவோ, அந்நியரின் ஆக்கிர மிப்புக்கெதிராக விடுதலைப் போர் நடாத்திய வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற வீரர்களின் வரலாறுகளாக இவை அமைந்தன. இவற்றோடு கிறிஸ்தவ சமய சார்பான கதை களையும் ஞானசவுந்தரி, சத்தியவன் சாவித்திரி முதலிய நாடகங்களை கூத்துக்களாக்கி நடிக்கும் வழக்கம் இருந்தது.** எனினும் கிறிஸ்தவ தெருக்கூத்துக்கள் இலங்கையில் பெருமளவு செல்வாக்கினைப் பெற்றிருந்தன.

கூடியளவு கர்நாடக சங்கீதப் பாடல்களையும் செந்தமிழ் நடையிலே அமைந்த உரையாடல்களையும் உள்ளடக் கியே கூத்துக்கள் அமைந்திருக்கின்றன. இலங்கையில் நாட்டுக் கூத்துக்குப் பெயர்போன இடம் மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலை நாட்டுப்பகுதிகள் போன்றன. மட்டக்களப்பிலே வசந்தன் கூத்தும், மலைநாட்டில் காமன் கூத்தும், நடைமுறையில் நடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மரபு வழிக் கூத்துக்கள் போல நேரக்கட்டுப்பாடின்மையோ நடிப்பிலும் அதிகமான பாடற் பாங்கோ இல்லாது சுருங்கிய காலத்தில் நடிப்புக்கான வாய்ப்புக்கள் கூடியனவாய் அமையும் நாடகங்களை எழுதியும் அவற்றை அரங்கிலே நடித்தும் நவீன முறை நாடகங்களுக்கு வழிகாட்டியவர் "பம்மல் சம்பந்தமுதலியார்" ஆவார்.

ஈழத்து தமிழ் நாடகத்துறையிலே அரை நூற்றாண்டுக்கு மேல் கலைப் பணியாற்றிய கலையரசு க.சொர்ணலிங்கம் இப் பெரியோரைத் தம் குருவாகப் போற்றுவதோடு இவரே நவீன நாடகத்துறையின் தந்தை என்றும் புகழ்ந்துள்ளார். நாடகத்தில் ஈடுபடுவோர் படிப்பறிவு குறைந்த பாமரரே என்ற நிலையை மாற்றி படித்த உயர் வர்க்கத் தினரும் அத்துறையிலே ஈடுபட ஊக்கமும் உற்சாகமும் அளித்த வகையிலும் பம்மல் ப.சம்பந்தமுதலியார் குறிப்பிடத்தக்கவரே.

திரைப்படத்தை மறந்து தூய்மையான நாடக உருவத்தைப் புலப்படுத்தும் வகையில் அதனை வளர்ப்பதற்கான ஆலோசனைகள் கலையார்வம் கொண்ட தமிழகச் சஞ்சி கைகளிலே எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. சில காலத்திற்கு முன் தெருக்கூத்துப் பாணியில் மேடையேறிய குசேலர் நாடகம் கலைத்துறையின் விழிப்புணர்ச்சியை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது. இவை இப்போதும் சில இடங்களில் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

நாட்டுக்கூத்தும் நாட்டார் இசையோடு கலந்து விட்டதொன்றாகும். நாட்டுக்கூத்தினை கிராமிய நாடகம் எனவும் அழைப்பர். கிராமிய நாடகம் மக்கள் வளர்த்த அழகுக்கலைகளுள் ஒன்று. கிராமிய மக்களின் உணர்வுகளையும், சிந்தனைப் போக்குகளையும், வாழ்க்கை முறையினையும் இது வெளிப்ப டுத்துகிறது.

ஈழத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் நாட்டுக்கூத்துக்கள் இடையிடையே நடைபெற்று வருகின்றன. இக்கூத்துக்கள் தென்மோடி, வடமோடி, தென்பாங்கு, வடபாங்கு, காத்தான்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன்கூத்து, காமன்கூத்து எனப் பல வகைப்படும்.

ஈழத்தில் தமிழர் மத்தியில் ஆடப்படும் கூத்துக்களிடையே பாடல் வகைகள், கதைப்பொருள், கதைப்போக்கு, கூத்து நடாத்தப்படும் முறை ஆகியவற்றுக்கிடையே ஒற்றுமையுண்டு. எனினும் பிரதேச வேறு பாட்டிற்கேற்ப அவ்வப்பிரதேசத்தின் தனித்தன்மைகளையும் இவை பெற்றவையா யுள்ளன. மன்னார்க் கூத்துக்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ சமயச் சார்புடையவையாயும், யாழ்ப்பாணம், மட்டக்களப்புக் கூத்துக்கள் இந்து மதச் சார்புடையவாயுள்ளன. யாழ்ப்பாணக் கூத்தில் ஆர்மோனியம், டோல்கி, கடம் போன்ற வாத்தியக் கருவிகள் இடம்பெறும். மட்டக்களப்பு கூத்தில் மத்தளம், தாளம் எனும் வாத்தியக் கருவிகளும் மலைநாட்டில் தப்பு என்ற வாத்தியக் கருவியும் இடம்பெறுகின்றன. இதற்குப் பிரதேச வேறுபாடுகளே காரணம்.

நவீன நாடகம் போல் கூத்து வசனத்தால் ஆனதன்று. வசனம் மிகக்குறைவாகவே இடம்பெறும். வசனத்தைக் கூடப்பாட்டாகவே இழுத்துக் கூறுவர். ஞானசவுந்தரி, என்றிக் எம்பரதோர் போன்ற


நாடகங்களில் வசனமே இல்லை. ஆடலும் பாடலுமே கூத்தின் அடித்தளமாகும். இன்று ஈழத்தின் மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலைநாடு ஆகிய பகுதிகளிலேதான் கூத்திலே ஆடல் மரபு பேணப்பட்டு வருகின்றது. ஏனைய பிரதேசங்களில் ஆட்ட மரபு கைவிடப்பட்டு பாட்டு மரபு மட்டுமே பேணப்பட்டு வருகின்றது. இவ்வாறாக ஒரு இடத்தில் போற்றப்படும் கலை இன்னொரு இடத்தில் குறைகப்பட்டு வருகின்றது.

இதே போலவே நாட்டுப் பாடல்களும் இடத்துக்கிடம் வேறுபட்டதாக அமைகின்றது. இவ்வாறாக மக்கள் மத்தியிலே கலைகளின் பங்கு பெருமளவு காணப்படுகின்றது.

**மனிதனைத் துன்பத்துக்கு ஆளாக்குவது பொருள் அன்று பொருளிலும், அதிகாரத்திலுமுள்ள ஆசையும் பற்றுமே. இவற்றைப் பற்றில்லாமல் சரியாக உபயோகிப்பவர்களே மனித இனத்தின் பரோபகாரிகள் ஆவார்கள்.**

**புத்தபகவான்**


**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72 ம் ஆண்டு நிறைவு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புறவும், பாடசாலைச் சமூகம் சிறப்புறவும் உளமார வாழ்த்துகிறேன்.**



**திரு. வ.சந்திரசேகரம் J.P . கிராம அலுவலர்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**
செயலாளர்
**ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகம், கோண்டாவில்.**

# அமரர்.சி. கார்த்திகேசு அவர்களின் உருவப்படத் திரைநீக்க நிகழ்வு



**ஸ்தாபகரின் உருவப்படத்தினை அவரது புதல்விகள் திரைநீக்கம் செய்து வைக்கும் போது.**



**அமரர் சி. கார்த்திகேசு குடும்பத்தினருடன் அதிபரும், உப அதிபரும்**



**அமரர் சி. கார்த்திகேசு ஞாபகார்த்த தங்கப் பதக்கம் சூட்டும் போது.**

புனரமைக்கப்பட்ட கிணறு திறப்பு விழாவின்போது



தமிழ்த்தினவிழா 2001

பிரதம் விருந்தினர் திரு.T.தயாளன் ADE தமிழ் அவர்கள் மேடைக்கு அழைத்துவரப்படும் போது



**எத்தகைய கல்விப் பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்கு தகுதி பெற்றவர்களாக இருக்கச் செய்கின்றதோ அத்தகைய கல்வி உறுதியான நல் ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவி செய்யும் ஊக்கத் தினையும், சிங்கம் போன்ற மன உறுதி யையும் வளங்குகின்றது. அத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கச் செய்கின்றதோ அத்தகைய கல்வியே உண்மையான கல்வி என்ற நிலையை பரதநாட்டியத்தின் மூலம் உணர முடிகின்றது.**

# பரதக் கல்வியின் சிறப்பு நோக்கி




**திருமதி. சு. அனுஷா**
Dip. in. Dance., Dip. in. Ed.
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.


**ஆ**ய கலைகள் அறுபத்து நான்கினுள்ளும் ஓர் தலைசிறந்த கலையாம். பரதநாட்டியம் ஓர் அரிய கலைப் படைப்பேயாகும். கூத்தப்பிரானில் அந்த அற்புத வடிவமாய் நடராஜ வடிவமே இதனைத் தெளிவுற எடுத்து விளக்குகின்றது. ஆடல், அழகியல், ஆன்மீகம் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டு விளங்குகின்ற கலையாக பரதநாட்டியம் விளங்குகின்றது. ஆடல் வல்லானின் அந்த அற்புதக் கோலத்தினூடு அறிமுகமான பரதநாட்டியம் பல பாணி களையும், பல மரபுகளையும் தன்னுள் கொண்டு விளங்குகின்ற போதிலும் அது பல இன்னல்களின் மத்தியிலேயே இன்றைய சாஸ்திரீய நடனமாக மிளிர்கின்றது. எனினும் இதன் வளர்ச்சியானது கோவில்களில் தேவதாசிகள் மூலமாக ஆரம்பித்து பின் பல இடர்பாடுகளினால் அழிவுற்றதனையும் அறியமுடிகின்றது. எனினும் ஓர் அழிவில் ஓர் ஆக்கம் ஏற்படுவது போல மீண்டும் மறுமலர்ச்சி கண்டு புத்துயிர்ப்பு பெற்று இன்று பாடசாலைகளிலும் மாணவர்களின் விருப்பத் திற்குரிய ஓர் பாடமாக விளங்குகின்றது.

பரதநாட்டியத்தை கற்பதன் மூலம் மாணவர்கள் மத்தியில் ஓர் உடல், உள ரீதியான மாறுதல்கள் ஏற்படுவதோடு அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பல உளவியல் சார்ந்த திருப்தியையும் பெற்றுக் கொள்கின்றனர். இதன் கலைத்திட்டமானது மாணவர்களின் பல் நன்மைகளை முன்வைத்து 1972ம் ஆண்டு முதல் பாடவிதானத்திலே இணைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பூவுலகிலே ஜனிக்கும் ஒவ்வொரு குழந்தையும் சமூக வாழ்வில் தன்னை இணைத்து வாழவும், சமூகம் எதிர்பார்க்கும் சான்றோனாக வாழவும், சிறந்த ஆழுமை மிக்கவனாக வாழவும் அழகியல் உணர்வுகள் குழந்தைகளின் உள்ளங்களிலே ஊட்டவேண்டியது அவசியமானதாகும். வளர்ந்து வரும் குழந்தைகளிடையே உடலால் மட்டுமன்றி உள்ளத்தாலும் பல மாற்றங்களை ஏற்படுமிடத்து நடனக்கல்வியானது சிறந்த ஔடதமாக விளங்குகின்றது.

இவ்வாறு நோக்குமிடத்து பரதநாட்டியத்தின் சிறப்புக்கள் பற்பல. பரதநாட்டியத்தைக் கற்கும் ஒவ்வொருவரும் பல நன்மைகளைப் பெற முடிகின்றது. இதன் மூலம் உடல் உறுதி வாய்ந்ததாக மாறு கின்றது. உறுதியான உடலே சுகவாழ்வுக்கு முன்னோடி எனலாம். இந்நிலையில் பரதநாட்டியத்தைக் கற்பதன் மூலம் மாணவர்களின் ஒவ்வோர் உறுப்பும் அப்பியாசத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் தசை நார்களுக்கும் சிறந்த பயிற்சி அளிக்கப்

படுகின்றது. இதனால் உடலின் ஒவ்வோர் உறுப்பும் உறுதியும் சீரான இயக்க நிலையையும் பெறுகின்றது. ஒரு மாணவனின் அறிவுச் சேர்க்கைக்கு உடல் நலம் இன்றியமையாததாகும். இவ்வாறு உடல் உறுதியுள்ள எந்த மாணவனும் எந்தப் பாடப்பரப்பிலும் கூடிய கவனம் எடுக்க முடிகின்றது. அத்துடன் மனத்திடமும் ஏற்படுகின்றது. இவ்வாறாக ஒரு குழந்தை உடல் உறுதியும், மனத்திடமும் உள்ளவனாக விளங்குகின்ற போது அவன் தன் எதிர்கால வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளைப் பகுத்தும் முடிவுகளைத் திர்மானித்தும் சிறப்பாக வாழமுடிகின்றது. அத்துடன் தசை நார்கள் சீராக்கப்படுவதன் மூலம் சிறந்த கட்டுடல் உண்டாகுகின்றது. மேலும் சிறந்த தேக அப்பியாசமாகவும் அமைகின்றது. பரத நாட்டியப் பயிற்சியின் போது இரத்தோட்டம் அதிகரிக்கப்படுவதோடு மேலதிக வியர்வையும் வெளியேற்றப்படுகின்றது.

செயல் வழிக் கற்றலே அறிவின் ஆழமான பதிவிற்கு உகந்ததாகும். எனவே குழந்தைகள் தம் ஐம்புலன்களினாலும் உணர்ந்து அவதானித்துப் பெறும் கல்வியே ஆழமான அறிவைக் கொடுக்கும். அத்தகைய கல்வியையே பரதநாட்டியம் அளிக்கின்றது. அனேகமாகப் பாடசாலைக் கல்வியானது மாணவர் மத்தியில் கிரகித்தல் பயிற்சியை மட்டும் அளிப்பதேயன்றி ஆழமான அறிவைக் கொடுப்பதில்லை மேலும் மாணவர்கள் விரிவுரை மூலமாகவும், கலந்துரையாடல் மூலமாகவும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பழுவான பாடங்களைக் கற்றுக் களைப் படைந்த நிலையில் காணப்படும் மாணவர்களுக்கு இப் பாடமானது புத்தூக்கத் தையும் அளிக்கின்றது. மேலும் பரதநாட்டிய மானது மாணவர்களின் அழகுணர் திறனையும் கற்பனை ஆற்றலையும் வளர்ப்பதில் சிறப்பிடம் பெறுகின்றது. மாணவர்களைப் பொறுத்த வரையில் இடைநிலை மட்டத்திலுள்ளவர்கள் இவ்வியல்புகளைக் கொண்டவர்களாகப் பெரும்பாலும் காணப்படுகின்றனர். இதன் காரணமாகவே தரம் 6 முதல் கலைத் திட்டத்திலே அழகியல் பாடம் புகுத்தப் பட்டதெனலாம்.

**எத்தகைய கல்விப் பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்கு தகுதி பெற்றவர்களாக இருக்கச் செய்கின்றதோ அத்தகைய கல்வி உறுதியான நல் ஒழுக்கத்தையும் , பிறருக்கு உதவி செய்யும் ஊக்கத்தினையும், சிங்கம் போன்ற மன உறுதியையும் வளங்குகின்றது. அத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கச் செய்கின்றதோ அத்தகைய கல்வியே உண்மையான கல்வி என்ற நிலையை பரதநாட்டியத்தின் மூலம் உணரமுடிகின்றது.** கல்வியானது வாழ்க்கைக்கு ஏற்ற முறையிலே வழங்கப்படாமையால் கடந்த காலங்களிலே எமது நாட்டின் முன்னேற்றத்திலே பாரிய பின்னடைவைக் காண முடிந்தது. இதனை உணர்ந்ததன் வாயிலாகவே பிற்காலத்திலே பரத நாட்டியக் கல்வியும் கலைத்திட்டத்திலே புகுத்தப்பட்டது. இது ஒருவன் தன் எதிர்காலத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத் துவதற்கு உதவியாக அமைந்ததென்றால் மிகையாகாது.

அடுத்து நோக்குகின்ற போது உள்ளத்திற்கு ஓர் தன்னம்பிக்கையையும், சுய திருப்தியையும் அளிக்கின்றது. மனச் சஞ்சலங்கள் நிறைந்து காணப்படும் வேளைகளிற் கூட பரதநாட்டியம் பெரும் அமைதியைக் கொடுக்கின்றது. பரதநாட்டிய நிகழ்ச்சிகளிலே பெரும்பாலும் பல மாணவர்கள் இணைந்து செயற்படுவதனால் மாணவர் களிடையே கூட்டுணர்வும் ஏற்படுகின்றது. அத்துடன் ஒருவரோடு ஒருவர் ஒன்றி இணைந்து செயற்படவதனால் விட்டுக்கொடுக்கும் மகப்பான்மையும் வளர்கின்றது. நாட்டியப் பயிற்சியின் போது ஒரு மாணவி விடும் தவறிற்கும் எல்லா மாணவர்களுக்கும் இணைத்துப் பயிற்சி அளிப்பதனால் அவர்களிடையே அங்க சுத்தம் உண்டாகு வதுடன் சகிப்புத் தனமையும் ஏறபடுகின்றது.

மேலும் பரதநாட்டியமானது குழந்தைகளிடையே பண்பட்ட உள்ளத்தைக் கொடுக்கின்றது. ஆசிரியன் மேல் மாணவன் அன்பும் அதன் காரணமாகப் பரிவையும் பெறுகின்றான். ஐம்புலன்ளையும் அடக்கி யாழும் மன அடக்கத்தையும் பரதக் கலை

அளிக்கின்றது. பரதக் கலையைக் கற்று அதன் திறமை அதிகரிக்க அதிகரிக்க அவனது தனித்துவமும், சுதந்திரப் போக்கும், நேர்மைத்திறமும் அதிகரித்துச் செல்லும். அது மட்டுமன்றி சக மாணவர்களிடையே புரிந்துணர்வையும் வளர்க்கின்றது. அத்துடன் கொந்தளிக்கும் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக அமைவதன் மூலம் சிறந்த உளச்சீராக்கற் பணியையும் மேற்கொள்கின்றது. இவ்வகையில் மாணவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தும் பணியினை நடனக் கல்வி திறம்பட ஆற்றுகின்றது.

பரதக் கலையானது ஒவ்வொரு தனிமனிதனையும் ஆன்மீக வழிக்கு இட்டுச் செல்கின்றது. பல்துறைக் கலைகளின் இருப்பிடமாகிய நடராஜ வடிவத்தின் புறத்தோற்றமே பரதக் கலையின் புனிதத் தன்மையைச் சுட்டி நிற்கின்றது. ஆன்மீக உணர்வு அற்றவன் பொய், களவு முதலான பஞ்சமா பாதகங்களையும் செய்வதற்குப் பின்நிற்க மாட்டான். எனவே சிறந்த தெய்வீக உணர்வுள்ள சிந்தனையாளர்களை உருவாக்க வேண்டுமாயின் பரதக் கல்வியானது ஓரளவேனும் குழந்தைகளுக்கு புகட்டப்படல் வேண்டும் என்றே கூறலாம். மேலும் பரதக் கலையைக் கற்பதனால் ஏனைய கலைகள் பற்றிய அறிவும், முகவலங்காரம், உடையலங்காரம் முதலான அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவும் ஏற்படுகின்றது. அத்துடன் பெரியோருக்குக் கீழ்ப்படிதல், குருபக்தி, பணிவு, அடக்கம் முதலான நற் பண்புகளையும் பரதக் கல்வி அளிக்கின்றது.

இவ்வாறாக பரதக் கலையானது தெய்வீக நிழலிலே மனிதன் தோன்றுவதற்கு முன்னே தோன்றி நம்மவரிடையே சிறப்புற்று நிலவுகின்றதெனில் இதற்கான காரணம் அது கொண்டுள்ள சிறப்பியல்புகளேயாம். எனவே இன்னோரன்ன பல சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள பரதக் கலையின் அடிப்படை அம்சங்களையாவது ஒவ்வொரு மாணவனும் அறிந்திருக்க வேண்டுமென்றே கூறலாம்.


**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 72 ம் ஆண்டு நிறைவு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புற உளமார வாழ்த்துகிறேன்.**







**திரு. சி. கதிரவேலு**

ஓய்வு பெற்ற ஆசிரியர்

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

# தமிழ்த்தின விழா




பிரதம விருந்தினர்
திரு.R. அருளானந்தம்,
ADE, நல்லூர்.
சிறப்பு விருந்தினர்
திரு.எஸ். ஶ்ரீதயாளன்
ADE, தமிழ்.
ஆகியோர் மேடையில்




பிரதம விருந்தினர்
திரு.S.வேல்முருகோன்பிள்ளை
பிரதேசசெயலர்,
நல்லூர்.




பிரதமவிருந்தினர்
திரு.எஸ்ஶ்ரீதயாளன்
ADE தமிழ்.
மேடையில்
அமர்ந்திருந்த
போது.

முகாமை என்பதற்கு முழு உலகமும் ஏற்கக்கூடிய வரைவிலக்கணம் கூறமுடியாத போதும் நிறுவனம் ஒன்றின் பௌதீக வளங்களையும், மனித வளங்களையும் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் பேன்ற தொழிற்பாடுகளின் மூலம் நிறுவனத்தின் இலக்கினை பயனுறுதி மிக்கதாகவும், திறமையாகவும் அடையப்படும் செயற்பாடு முகாமைத்துவம் என வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.இம் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் போது எழும் பிரச்சினைகளை முறையாக தீர்வு செய்யும் செயற்பாடு முகாமை என கூறுதல் பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும்.

# நிறுவன முகாமைத்துவத் தொழிற்பாடுகள் ஓர் அறிமுகம்




திரு. பா. பாலமுரளி
*Dip.in.Mng, Spl.Trd.Com.*
*யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்*


முகாமைத்துவம் இன்று மிக விரைவாக வளர்ச்சி பெற்று வரும் ஓர் துறையாகக் காணப்படுகின்றது. இன்றைய வர்த்தக உலகில் முகாமைத்துவத்தின் பங்கு மிக அத்தியாவசியமானதும் தவிர்க்க முடியாததுமான ஓர் துறையாக விளங்குகின்றது. முகாமைத்துவமானது ஓர் பரந்த விரிவான பரப்பினை உடையதாகவும் காணப்படுகின்றது. மேலும் முகாமைத்துவம் என்பது பிரயோக ரீதியான தொழிற்பாடாகவும் அதன் தத்துவங்களும் உபாயங்களும் பிரயோக விடயங்களினாலும் பல்வேறு சிந்தனையாளர்களது அனுபவங்களினாலும் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு தசாப்தமாக உயர்கல்வித் துறையில் இடம் பெற்றுள்ள போதும் அதன் சரித்திரம் மானிடசரித்திரம் அளவுக்கு பழமை வாய்ந்தது. மனிதசமூகத்தின் அபிவிருத்தியுடன் முகாமைத்துவமும் அபிவிருத்தியடைந்து வருகின்றது.

## முகாமைத்துவம்:

வளர்ச்சியடைந்து வரும் நவீன வியாபார உலகில் ஒருவர் தனது வேலைகளை தானாகவே நிறைவு செய்து கொள்ளுதல் என்பது இயலாத காரியம். இதனால் மனிதன் நிறுவனங்களுடன் இணைந்து தனது விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள விரும்புகின்றனர். இவ்வாறு தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்ய பௌதீக வளங்களும், மனித வளங்களும் அவசியமாகின்றன. இவ்வாறான வளங்கள் வரையறுக்கப்பட்டனவாகவும், அருமைத் தன்மை உடையனவாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு அருமைத்தன்மையான வளங்கள் மேலும் குறைவடையலாம். இதனால் வளங்கள் விரையமாகாது இழிவுக் கிரையத்துடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வாறு பயன்படுத்துதல் "வினைத்திறன்" எனப்படும். அத்துடன் குறித்த நோக்கம் குறித்த காலத்துக்குள் அடையப்படல் வேண்டும். அது விளைதிறன் எனப்படும். எனவே வினைத்திறனும், விளைதிறனும் செயலாற்றல் முகாமை என எளிமையாக கூறமுடியும். **முகாமை என்பதற்கு முழு உலகமும் ஏற்கக்கூடிய வரைவிலக்கணம் கூறமுடியாத போதும் நிறுவனம் ஒன்றின் பௌதீக வளங்களையும், மனித வளங்களையும் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் போன்ற தொழிற்பாடுகளின்**

**மூலம் நிறுவனத்தின் இலக்கினை பயனுறுதி மிக்கதாகவும், திறமையாகவும் அடையப்படும் செயற்பாடு முகாமைத்துவம் என வரை விலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.இம் முகாமை த்துவ தொழிற்பாடுகளின் போது எழும் பிரச்சினை களை முறையாக தீர்வு செய்யும் செயற்பாடு முகாமை என கூறுதல் பெருமன வுக்கு ஏற்றுக் கொள்ள க்கூடியதாகும்.**

## முகாமையாளர்

ஒரு நிறுவனத்தை முகாமை செய்பவர் முகாமையாளர் என எளிமையாக வரையறுக்கலாம். முகாமையாளர் எனப்படுபவர் ஒரு இலக்கை அடைவதற்காக தொழிற்படும் ஒரு மக்கள் கூட்டத்தை வழிநடாத்தி அவர்கள் மூலம் கடமைகளை நிறைவேற்றி அதனூடாக நிறுவனத்தின் நோக்கம் அல்லது இலக்கினை அடைவதற்கு உழைப்பவர் முகாமையாளர் ஆவார். முகாமையாளராகச் செயற்படும் ஒருவரின் பதவிப் பெயரானது முகாமையாளர் என்ற சொல் கொண்டு அழைக்கப்படவேண்டியது அவசியம் இல்லை. இதற்கு உதாரணமாக பாடசாலையின் அதிபர், உதைபந்தாட்ட அணித் தலைவர் போன்றோரைக் குறிப்பிடலாம். முகாமையாளர்களின் கடமைகளையே மேற்குறித்தவர்கள் செய்கின்றனர். எனினும் இவர்களின் பதவிப் பெயர்கள் முகாமையாளர் என்ற பதம் மூலம் அழைக்கப்படுவதில்லை.

ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் அந் நிறுவனத்தின் ஊழியராயினும் அவர் மற்றைய ஊழியர்களைவிட வேறுபட்டுக் காணப்படுகின்றனர். அத்துடன் ஏனைய ஊழியர்களைவிட கூடியளவு பொறுப்புக்களைக் கொண்டிருப்பவராகவும் அவர்களை வழிநடாத்துபவராகவும் விளங்குகின்றார். தன் பொறுப்புக்கு மட்டுமன்றி தன்கீழ்ப் பணிபுரியும் ஏனைய ஊழியர்களின் பொறுப்புக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளார். அதாவது முகாமையாளர் தன் கடமையில் விடும் தவறுகளுக்கும் தன்கீழ் பணிபுரியும் ஊழியர்களின் தவறுகளுக்கும் பொறுப்புடையவர் ஆவார். எனவே நிறுவனம் ஒன்றின் வெற்றிக்கும்



தோல்விக்கும் முகாமையாளரே காரணம் என்றால் அது மிகையாகாது.

## முகாமைத் தொழிற்பாடுகள்

ஓர் இலக்கை அடைவதற்காக ஓர் மக்கள் கூட்டம் இயங்குவது நிறுவனம் அல்லது அமைப்பு எனலாம். இன் நிறுவனம் இலக்கை அடைவதற்கான தொழிற்பாடே முகாமைத் தொழிற்பாடு எனலாம்.

1. திட்டமிடல் Planning
2. ஒழுங்கமைத்தல் Organizing
3. ஊழியரிடல் Staffing
4. நெறிப்படுத்தல் Directing
5. கட்டுப்படுத்தல் Conroling

ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைந்த தொழிற்பாடுகளின் தொடர் செயற்பாடே முகாமைத்தொழிற்பாடாகும். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம்காட்டலாம்.

| உள்ளீடு | | முகாமைத்தொழிற்பாடு | | வெளியீடு |
|---|---|---|---|---|
| மனித வளம்<br>மூலப் பொருள்<br>இயந்திரம்<br>பணம்<br>முறை<br>காலம் | ⇨ | திட்டமிடல்<br>ஒழுங்கமைத்தல்<br>ஊழியரிடல்<br>நெறிப்படுத்தல்<br>கட்டுப்படுத்தல் | ⇨ | பொருட்கள்<br>சேவைகள்<br>(நோக்கம் நிறைவேறுதல்) |
| | ↓ வினைத்திறன் | | ↓ விளைதிறன் | |

இழிவுக்கிரயம் →

மேற்படி வரைபடமானது ஒரு நிறுவனத்தின் முகாமைத்தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குகின்றது. இத் தொழிற்பாடுகளை உற்றுநோக்குவோம்.

## திட்டமிடல் (Planning)

ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படும் போது அல்லது புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும் போது அவற்றின் எதிர்கால நடவடிக்கைகளை முன் உணர்ந்து கொள்ளும் செயற்பாடு திட்டமிடல் ஆகும். திட்டமிடல் ஆனது முகாமைத் தொழிற்பாடுகளில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. அதாவது நிறுவனங்களின் நோக்கத்தினை வரையறுத்து அதனை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றினை ஒன்றிணைத்துக் கொள்வதனை திட்டமிடல் குறிக்கின்றது.

திட்டமிடல் என்பது எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும், எப்போது செய்ய வேண்டும், யாரால் செய்ய வேண்டும், எவ்வாறு செய்யப்படல் வேண்டும் போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது. திட்டமிடல் செயற்பாட்டில் பின்வரும் 4 படிமுறைகள் காணப்படுகின்றன.

1. நோக்கத்தினையும் இலக்கினையும் வரையறுத்தல்.

2. நோக்கத்தினை அடையும்பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்தல்.

3. செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

4. செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

மேற்கூறப்பட்ட படிமுறைகள் ஊடாக நிறுவனத்தின் எதிர்காலச் செயற்பாட்டினை முன்உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## ஒழுங்கமைத்தல் (Organizing)

நிறுவன முகாமைத்துவ தொழிற்பாடுகளில் திட்டமிடலுக்கு அடுத்த செயற்பாடாக அமைவது ஒழுங்கமைதத்தல் ஆகும். அதாவது நிறுவன இலக்கினை அடைவதற்கு தேவையான மனித, பௌதீக வளங்களை ஒழுங்குபடுத்துவதுடன் தொடர்புடையதே ஒழுங்கமைத்தல் ஆகும். திட்டமிடல் மூலம் தீர்மானிக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்களை அடைவதற்கான அடையாளம் காணல், வகைப்படுத்தல், பொருத்தமான பதவிகளை ஏற்படுத்தல், அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதே ஒழுங்கமைத்தல் எனப்படும்.

ஒழுங்கமைத்தல் என்பது மிகவும் முக்கியமான தொழிற்பாடாகும். நிறுவனங்கள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப் படாதபோது நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவது இயலாத காரியம் ஆகும். ஒழுங்கமைத்தல் ஆனது பின்வரும் படிமுறைகளை உள்ளடக்கியது.

1. நிறுவனத்தின் நோக்கத்திற்கமைய மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை இனங்காணல்.

2. செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

3. ஒத்ததாக அமைகின்ற செயற்பாடுகளை தொகுதியாக்குதல்.

4. நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பினை தீர்மானித்துக்கொள்ளுதல்(அதிகாரக்கையளிப்பு)

நிறுவனம் திறமையாகச் செயற்படுவதற்கும் தனது நோக்கம், இலக்கினை அடைந்து கொள்வதற்கும் ஒழுங்கமைத்தல் மிகவும் அவசியமானதாகும். சரியாக ஒழுங்கமைக்கப்படாத நிறுவனங்கள் சிறப்பாகத் தொழிறபடுவது கடினம். அத்துடன் நோக்கம் இலக்கினை அடைவது சாத்தியமற்றது.

## ஊழியரிடல் (Staffing)

ஒரு நிறுவனமானது தனது குறிக்கோளை அடையும்பொருட்டு பல்வேறு வகையான வளங்களை பயன்படுத்துகின்றது. இவற்றுள் மனித வளம் முக்கியத்துவம் பெறுகின்றது. மனித வளம் என்பது ஒரு நிறுவனத்தின் ஆளணி என அழைக்கப் படுகின்றது. நிறுவனங்கள் தமது மனித வளத்தினை உச்ச அளவில் பயனுறுதி மிக்கதாகப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனம் தனது குறிக்கோளினை இலகுவாக அடைந்து கொள்ளமுடியும். அத்துடன் போட்டி நிறுவனங்களை எதிர்கொண்டு சந்தையில் நிலைத்திருப்பதற்கு ஆட்சேர்த்தல் அல்லது ஊழியரிடல் மிகவும் அவசியமான ஒரு முகாமைத் தொழிற்பாடாக காணப்படுகின்றது.

ஊழியரிடல் என்பது பின்வரும் தொழிற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

1. மனித வளத் திட்டமிடல். Human Resourc Planning

2. ஆட்சேர்ப்பு. Recruting

3. தெரிவு. Selection

4. அறிமுகம் செய்தலும் செய்து காட்டலும். Introduction and Orintation

5. பயிற்சியும் அபிவிருத்தியும். Training and Development

6. செயற்திறனை மதிப்பிடல். Performence Appraisal

7. தனிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றல். Implementation of Personal Decisions

8. நிறுவனத்தை விட்டு விலகுதல். Leaving the Organization

நிறுவனத்தின் பெறுமதி மிக்க ஒரு வளமாக மனித வளம் கருதப்படுகின்றது. வினைத்திறன் மிக்க ஊழியர்களைக் கொண்டுள்ள நிறுவனங்களே தமது நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியும். எனவே நிறுவனங்கள் சரியான ஆட்சேர்ப்பு தெரிவு மூலம் வேலைக்குப் பொருத்தமான ஆளணியினை பெற்றுக்கொள்ள முடியும்.

## நெறிப்படுத்தல் (Directing)

நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு ஏற்ற வகையில் ஊழியர்களை தமது கடமைகளை சரியாகவும் திறமையாகவும் ஆற்றுவதற்கு வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல், பயிற்சி அளித்தல் என்பவற்றுடன் ஊழியர்களுக்கிடையில் வளமான நல்லுறவைப் பேண உதவி செய்தல் நெறிப்படுத்தல் எனப்படும். இன் நெறிப்படுத்தல் எனபதனுள் தலமைதாங்குதல், தொடர்பாடல், ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

### தலைமைதாங்குதல்

நிறுவனம் ஒன்றின் ஊழியர்களை நெறிப்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கும் ஓர் தொழிற்பாடே தலைமைதாங்குதல் எனப்படுகின்றது. ஒருவர் ஒரு கருமத்தை எவ்வாறு ஆற்ற விரும்புகின்றாரோ அதேபோல் ஏனையோரையும் தொழிற்பட வைக்கும் ஓர் கருமம் என இது வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது.

### தொடர்பாடல்

நிறுவனத் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய உள்ளக வெளியகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல், அவற்றைப் பொருத்தமாக ஒழுங்கமைத்தல், உரியவர்களுக்கு வழங்குதல் என்பன தொடர்பாடல் எனப்படும். அதாவது இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் கருத்துக்கள், உணர்வுகள், யோசனைகள் பரிமாற்றப்படுதல் தொடர்பாடல் எனப்படும்.

### ஊக்கப்படுத்தல்

ஊழியர்களை நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு தூண்டுகின்ற ஒரு செயற்பாடே ஊக்கப்படுத்தல் எனப்படும். அதாவது நிறுவனத்தின் பணியாளர்களை விருப்பத்துடன் வேலைசெய்யத்தூண்டுதலும் அக்கறையுடன் செயற்படச் செய்தலும் ஊக்கப்படுத்தல் ஆகும்.

## கட்டுப்படுத்தல்Controlling

நிறுவனம் எதிர்பார்க்கும் திட்டமிட்ட இலக்கை நோக்கி பணிகள் நடைபெறு கின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் கட்டுப்படுத்தல் எனப்படும். அதாவது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் செயற்திறனை ஒப்பீடு செய்து வேறுபாடுகள் காணப்படும்போது பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடையப் படுவதனை உறுதிப் படுத்துதல் கட்டுப் படுத்தல் ஆகும். கட்டுப்படுத்தல் செய் முறையானது பினவரும் 6 படிமுறைகளைக் கொண்டது.

1. கட்டுப்படுத்த வேண்டியதைத் தீர்மானித்தல்.
2. நியமத்தினை நிர்ணயித்துக் கொள்ளுதல்.
3. செயற்திறனை அளவிடுதல்.
4. செயற்திறனை நியமத்துடன் ஒப்பிடுதல்.
5. நியமத்திலிருந்து வேறுபடின் நடவடிக்கை எடுத்தல்.
6. செய்முறை மாற்றி அமைக்கப்படுதல்.

ஒரு நிறவனம் திட்டமிடலில் செலுத்துகின்ற அதேயளவு அக்கறையினை கட்டுப்படுத்தலிலும் செலுத்துதல் வேண்டும். சரியான கட்டுப்படுத்தல் முறையின்றி திட்மிடுதல் ஆனது வெற்றியளிக்காது. நிறுவனத்தின் அளவு, பருமன் என்பவற்றைக்

கருத்திற் கொண்டு பொருத்தமான கட்டுப்படுத்தல் முறையினைப் பின்பற்றுதல் வேண்டும்.

### அலுவலகத் தொழிற்பாடுகள்

ஒவ்வோர் நிறுவனமும் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு காணப்படும். அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகள் ஒவ்வொரு திணைக்களங்களாக ஆக்கப்பட்டு அவற்றுக் கிடையிலான தொடர்புகள் அலுவலகத்தின் மூலமாகவே ஏற்படுத் தப்படுகின்றது. அலுவலகத்தின் தன்மையும் அதன் பணிகளும் நிறுவனத்தின் பருமனுக் கமைய வேறுபடுகின்றன.அலுவலகத் தொழிற்பாடுகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் காட்டமுடியும்

1. தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதலும், சேமித்து வைத்தலும், வகைப்படுத்தலும்.
2. தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
3. தகவல்களை ஒழுங்கு முறைப்படுத்தல்.
4. தகவல் வழங்குதல்.

### அலுவலக முகாமையாளர்

ஒவ்வொரு நிறுவனத்தினதும் அலுவலகத்தினை முகாமை செய்பவர் அலுவலக முகாமையாளர் எனப்படுவார். இவ் அலுவலக முகாமையாளர் நிர்வாகி. செயலாளர் எனப் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுவார்.

### அலுவலக முகாமையாளரின் பொறுப்புக்கள்

1. அலுவலகத்தை ஒழுங்கமைத்தல்.
2. அலுவலகத்தின் வளங்களைத் திட்டமிடுதல்.
3. அலுவலகக் கருமங்களின் பட்டியலைத் தயாரித்தல்.
4. அலவலக கரும ஒழுங்கை நடைமுறைப்படுத்தல்.

(தேவையான ஊழியர் தொகை, அவர்களின் தரம், சம்பளம், ஊழியர் நடத்தை, தகுதி, தொழில் ரீதியான பணி என்பன)

மேற்குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பரந்த வேலைத்தொகுதி ஒன்று அவரால் நிறைவேற்றப்படும். இவை இரு பகுதிகளாகப் பிரிக்கப்படும்.

1. முகாமைத்துவப் பணிகள் (Management Duties)
2. கண்காணிப்புப் பணிகள் (Supervisary Duties)

### முகாமைத்துவப் பணிகள்

அலுவலக முகாமையாளரல் மேற்கொள்ளுகின்ற முகாமைத்தவப் பணிகளைப் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

1. உயர் முகாமையின் கொள்கைகளைச் செயற்படுத்த உதவுதல்.
2. தீர்க்க முடியாத பிரச்சனைகளை உயர்மட்ட முகாமைக்குப் பாரப்படுத்துதல்.
3. வேலை மதிப்பீட்டைப் பேணுதல்.
4. அலுவலக ஊழியர்களை நியமிப்பதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்.
5. அலுவலக ஊழியர்களின் வேலையைக் கணிப்பிடுதல்.
6. ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குதல், ஊக்குவித்தல், பரிசளித்தல், அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்.

### கண்காணிப்புப் பணி

1. வேலைக் கண்காணிப்பு
2. வேலைத் தரக்கணிப்பு
3. பிரச்சனை உள்ள இடங்களில் தேவையான ஆலோசனைகளை வளங்கல்.

4. குறித்த வேளைக்கு வரவும் வெளிச் செல்லலும் உறுதிசெய்தல்.

5. நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்துவதனை நிர்வகித்தல்.

6. அலுவலக சுத்தம், தூய்மை என்பவற்றைக் கணித்தல்.

நிறுவனத்தின் வெற்றியானது முகாமையிலும் அதன் முகாமையாளரிலும் தங்கியுள்ளது. சிறந்த முகாமையாளர் ஒருவர் தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் அடையாளம் கண்டு நிறைவேற்றுதல் அவசியமானதாகும். இதன் பொருட்டு தேவையான தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும். போதியளவு தேர்ச்சியினைக் கொண்டிராதபோது பயிற்சியின் மூலம் அவற்றினைப் பெற்றுக்கொள்ளுதல் இன்றியமையாததாகும். போதியளவு தேர்ச்சியினைக் கொண்ட நபரே ஒரு நிறுவனத்தினை வெற்றீகரமாக வழிநடத்திச் சென்று அதன் இலக்கினை அடைந்து கொள்ள முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Process of Management . II
   Module - 1
   Open University of Srilanka.
2. வணிகக்கல்வியும் கணக்கீடும் - ஆசிரியர் கைநூல் தரம் 11
   தேசிய கல்வி நிறுவனம்.
3. முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம் - தேவராஜன் - ஜெயராமன்.


**ஏறத்தாழ எல்லோருமே துன்பங்களைப் பொறுத்துக்கொள்வார்கள். ஆனால், ஒரு மாந்தனுடைய இயல்பைத் தேர்ந்து பார்க்க வேண்டுமென்றால், அவனிடம் அதிகாரத்தைக் கொடுத்துப்பார்.**

**ஆபிரகாம் லிங்கன்**


**யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் வரலாற்றுச் சிறப்பு மலரான "பரஞ்சோதி" மலர் சிறப்புற எனது நல் வாழ்த்துக்கள்.**



**திரு. கா. தம்பிராசா அவர்கள்**
ஓய்வுபெற்ற முன்னாள் உபஅதிபர்
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்,
கோண்டாவில்.

# இல்ல விளையாட்டுப் போட்டி - 2002



சிறப்பு விருந்தினர் திரு.த. இராசலிங்கம் அவர்களும், பிரதம விருந்தினர் திரு. குலசேகரம் அவர்களும்



அணிநடையினை விருந்தினர்கள் ஏற்றுக்கொள்ளும் போது.




வள்ளுவர் இல்லத் தலைவர் பிரதம விருந்தினர் திரு.த. இராசலிங்கம் அவர்களிடமிருந்து வெற்றிக் கேடையத்தினை பெற்றுக் கொள்ளும் போது

# விளையாட்டுப் போட்டி



1997


பிரதம விருந்தினர் முன்னாள் அதிபர்
திரு.எஸ்.லோகதாசன் அவர்கள்



1998

***One of the reasons for such deficiencies, is that there is an acute shortage of English qualified teachers at present and as such in some schools/ colleges there is totally no English qualified teachers and so also this deficiency to teach English Hence it is most indispensable on the part of the Government to take all steps to rectify such short-comings and make appropriate appointments of English qualified teachers to meet this deficiency.***

# PROBELMS CONFRONTING ENGLISH EDUCATION AND SOLUTIONS



**Mr. P. Majurathan**
[Part time English Teacher]

**S**o far as Sri Lanka is concerned the English Language is considered a second language has been taught in Sri Lanka Schools/ Colleges, Higher Educational Institutions and other institutions, under the Government's new educational schemes. However, there is a practical difficulty that has been prevalent to teach English to students and it has become a most complex problem.

It is an admitted fact without any doubt that the students have been showing some sort of abhorrence in learning English found in city areas and schools in backward village areas. The fundamental reasons for such negligence/ refusal is due to the fact that the basis knowledge of English is totally absent in such students, and this fact has been experimentally researched. The only solution for this drawback is that proper and steady teaching of English should be imparted to students from their primary grades that they become interested and intelligible. The Sri Lanka Education Department has been introducing and supplying books under the Governments new Educational schemes from Grade 3 upto G.C.E (A/ L) and from such books students are able to learn several subjects which are very useful to them. But it is an undeniable fact that through mastering English language we are able to study the worldly affairs than any others source of study, not only learn such matters in Srilanka, but also we learn the culture, variety of foods, Language etc. Through learning of English. So far as the students are concerned English is assessed as the Examination language and it is with greatest difficulty it is taught by the teachers to students and that is to say, the examination is the sole object of their assessment.

**RESOURCES**: when we speck of resources, English Language has the minimum facilities when compared with other subjects. And so in Sri Lanka it is extremely poor especially in North and Eastern provinces.


One of the reasons for such deficiencies, is that there is an acute shortage of English qualified teachers at present and as such in some schools/ colleges there is totally no English qualified teachers and so also this deficiency to teach English Hence it is most indispensable on the part of the Government

to take all steps to rectify such short-comings and make appropriate appointments of English qualified teachers to meet this deficiency.

It is regretted to note that in backward are as it is specially found such drawbacks and hence, it has a direct and adverse effect upon the students. In short teaching of English is very difficult in such environments. Despite the fact, by dint of hard working of Teachers that the students should come up with the level of city students, have endeavourer to bring them to compete with students of city life to face competitions and this is applaud able gesture on the part of teaches and students. But due to lack of funds, the students in backward areas find very difficult to compete with theirs counter-parts but Department of Education has been encouraging such backward area schools affording all assistance but due to intervention of higher authorities, such assistances have been totally deprived or discriminated.

Modern Computer Knowledge: It is an admitted fact that a thorough knowledge of computer is
pre-requisite to face the present fast moving of high competition. But the Governments assistance of providing computers are going to city areas and such other facilities include books, school furniture items, buildings etc. Such discriminatory state of affairs prompt or are proved to be detrimental and advancement of the schools in backward areas.

When we speak of schools/ colleges in city areas, we find that schools Development societies, old students Association are forthcoming to render all sorts of assistance to city schools. But it is discouraging to note that such facilities and assistance are totally absent in village schools. It is absolutely imperative and indispensably that if we are touplift students proficient, teaching of English is very necessary. But this as fact cannot be fulfilled only by a single teacher, and hence, assistance and co-operation should be given by the parents. It is vitally necessary that their children should come up well in the present competitive world and for this purpose or ambition English should be compulsorily taught to their children. It is vitally important that community centers, Non-governmental organizations, common organizations should volunteer to render their assistance and co-operation to import English to the children. For all indents and purposes, the teachers should play a vital role in imparting English to students by easy methods intelligibly and it is also vitally important that students should co-operate and show their talents to come up conversant in the English Language so that any man could reach a high standard and proficiency in English and hold high professional appointments in the present most competitive world.



# பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள்

**எ**மது பாடசாலையின் விளையாட்டுக்கள் இப்பாடசாலையின் ஆரம்பத்திலிருந்தே சிறப்புற்று விளங்கி வருகின்றது. ஆரம்ப காலப்பகுதியில் எமது சுதேச விளையாட்டுக்களான கிளித்தட்டு, போர்த்தேங்காய் அடித்தல், கிட்டியும் புள்ளும், வார்லோட்டம், மட்டைப் பந்து எறிதல், மாங்கொட்டைத்தாளம், பாண்டி விளையாடுதல் போன்றவற்றில் பெரும் ஆர்வம் கொண்ட மாணவர்கள் இப்பாடசாலையில் கற்றார்கள். இம்மாணவர்கள் அயற் பாடசாலைகளிற்குச் சென்று முத்திரை பதித்துள்ளனர்.

இக்காலப் பகுதிக்குப் பின் "இந்துபோட்" பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின் மேற்கூறப்பட்ட விளையாட்டுக்களுடன் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று இல்லங்கள் அமைக்கப்பட்டன. அவை பாரதி, வள்ளுவர், நாவலர் என்பனவாகும்.

1960ல் அரசு பொறுப்பேற்ற பின் உடல், உள ரீதியாக மாணவர்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கில் பல விளையாட்டுக்களைப் புகுத்தினர். சகல மாணவர்களும் பங்குபற்றும் வகையில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வகுப்பறைகளில் பூரணமாகக் கற்றற் செயற்பாட்டில் துலங்க முடியாத மெல்லக்கற்கும் மாணவர்கள் இத்துறையில் தமது திறமையை வெளிக்காட்ட வாய்ப்பாகவும் அமைந்தது.

இத்திட்டத்தினால் மாணவர்கள் கோட்ட, வலய மட்டங்களில் மெய்வல்லுனர் நிகழ்வுகள், தாச்சி, உதைபந்து இம்மூன்று நிகழ்வுகளிலும் மாணவர்கள் பங்கு பற்றினர். இத்திட்டத்தின் பயனாக 1997ல் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியிலே பங்குபற்றி தேசிய, முன்னணிப்பாடசாலைகளுடன் மோதி எமது பாடசாலை மாணவர்கள் (16 வயதின் கீழ்) மூன்றாம் இடத்தைத் தழுவிக் கொண்டனர். 1998ல் யாழ் வலய மெய்வல்லுனர் போட்டியிலே எமது பாடசாலைமாணவன் நீளம் பாய்தற் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைத் தழுவிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் எமது பாடசாலை கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் இன்றுவரை ஆர்வத்துடன் பூரணமாகப் பங்குபற்றி வருவதனைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இத்துறையில் பேரார்வம் கொண்ட எமதுபாடசாலை மாணவர்களிற்கு உடற்கல்வி ஆசிரியர் இல்லாத குறையை எமது பாடசாலை ஆசிரியர்கள் மூலம் நிறைவு செய்து கொண்டிருக்கின்றோம். இத்தேவையை நிறைவுசெய்ய முழுநேர உடற்கல்வி ஆசிரியர் இல்லாத போதும் பகுதிநேர ஆசிரியராவது இருப்பின் மேலும் இத்துறை வளர்ச்சியடைய வாய்ப்புண்டு.

"ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடற்பயிற்சி அவசியம்"

**திரு.த. சொக்கலிங்கம்**
**உபஅதிபர்.**


**பரஞ்சோதி மலர் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

**செல்வி மா. டயனேஸ்வரி**
**ஆசிரிய மாணவி,**
**ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,**
**கோப்பாய்.**

# இல்ல விளையாட்டுப் போட்டி




பிரதம விருந்தினர்
திருமதி. ச. காங்கேயன் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர் நல்லூர்) மங்கள விளக்கேற்றும் போது.



பிரதம விருந்தினர்
திருமதி ச. காங்கேயன் அவர்கள்
சிறப்பு விருந்தினர்
திரு S. ரவீந்திரசர்மா அவர்கள்
திட்டமிடல் பணிப்பாளர் நல்லூர் பிரதேச செயலகம்.

# மாணவர் பகுதி








## பசு

பசு வீட்டு மிருகம்
பசு பால் தரும்
பசு புல் மேயும்
பசு சாணம் போடும்
பசு கன்று ஈனும்



சி. கௌசிகா
தரம். 1

## எமது வீடு



எமது வீடு கல்வீடு
எமது வீடு அழகானது
எமது வீடு பாடசாலைக்கு அருகில் உண்டு
எமது வீட்டில் பூந்தோட்டம் உண்டு
எமது வீடு எமக்கு பாதுகாப்பு தருகிறது

த. ஜெயந்திகா
தரம் 2

## PLAYING BALL

Ball ball
Hit the ball
Hurry back
Bee our you ball

Hurry back
To me and then
I will throw you
Out a gain



V. Sinthuja.
Grade 2





## அகர வரிசைப்பாடல்

அம்மா அப்பா வாருங்கள்
ஆசை முத்தம் தாருங்கள்
இசையுடன் பாடல் பாடிநாம்
ஈசனை தொழுது வணங்கிடுவோம்
உண்மை பேசக் கற்றிடுவோம்
ஊருடன் கூடி வாழ்ந்திடுவோம்
எறும்பு போல உழைத்திடுவோம்
ஏழைக்குதவி செய்திடுவோம்
ஐயமிட்டு மகிழ்ந்திடுவோம்
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்
ஓடி ஆடி மகிழ்ந்திடுவோம்
ஔவை சொற்படி நடந்திடுவோம்
அனைவரும் ஒன்று சேர்ந்திடுவோம்

**வி. தமிழ்ச்செல்வி**
தரம் 3

## நற் பழக்கங்கள்

| | |
|---|---|
| உண்மை | பேசுவோம் |
| பொய் | சொல்லமாட்டோம் |
| பெற்றோர் | சொற்கேட்போம் |
| ஆசிரியர் | சொற்படி நடப்போம் |
| கடவுளை | வணங்குவோம் |
| பிறருக்கு | உதவுவோம் |
| கீழ்ப்படிந்து | நடப்போம் |
| பொறாமைப்பட | மாட்டோம் |




***க. கபிந்தன்***
*தரம் 1*

## எனது பூனை




சின்னச் சின்னப் பூனை
நான் வளர்க்கும் பூனை
மெல்ல மெல்லப் பாலையே
இனித்து இனித்துக் குடிக்கும்

கறுப்பு நிறப் பூனை
வீரமான பூனை
பதுங்கி ஓடும் எலிகளைப்
பார்த்து பிடித்துத் தின்னும்



**க. அமீரா**
தரம் 4

## பூக்கள்



பூவே உன்னைப் படைத்தவர் யார்?
புதுமணம் உள்ளே வைத்தவர் யார்?
பற்பல நிறங்கள் படைத்திடுவாய்
பரிந்து தேனைக் கொடுத்திடுவாய்


பூவே உன்னைக் கடவுளுக்கு
பற்பல வழியில் அர்ப்பணிப்போம்
மாலை சரங்கள் பூக்கள் எனப்
பல பல விதமாய் சூட்டிடுவோம்

அம்மா தலையில் சூடிடுவாள்
அப்பாவும் காதிற் சூடிடுவார்
வண்டுகள் தேனைக் குடித்திடுமே
மகிழ்வாய் பறந்து திரிந்திடுமோ



**வை. அரவிந்தன்**
தரம் 3

## தரம் 1-3 மாணவர்கள்.



# தரம் 4~5 மாணவர்கள்.



## விவசாயி

மண்ணைப் பண்படுத்தி - நல்ல
சீரான பசளை யிட்டே
பயன்தரு பயிரை நாட்டி
நன்கு நீர் பாய்ச்சிடுவான்

தினமும் பராமரித்து - அந்த
பயிர்களின் வளர்ச்சி கண்டே
அகமகிழ்ந்து அமைதியுடன்
அறுவடையை நோக்கி நிற்பான்

உரிய பருவத்தில் - நன்கு
வளர்ந்த பயிர்களையே
ஊக்கமுடன் பராமரித்திடவே
விரைந்து செயற்படுவான்

அல்லும் பகலும் - சோர்வின்றி
அயராது உழைத்ததனால்
கிடைத்தவற்றை விற்பதற்கே
சந்தை நோக்கிச் சென்றிடுவான்

**க. கோபிதா**
தரம் 5

## காலைப்பொழுது



வானில் வந்த சந்திரன்
மறையும் நேரம் காலையாம்
கூட்டில் உறங்கிய பறவைகள்
இரையைத் தேடும் வேளையாம்.

பாடு படும் உழவரும்
தோட்டம் செல்லும் வேளையாம்
அப்பா அம்மா யாவரும்
எழுந்திடும் நல்ல வேளையாம்

வானில் தோன்றிய சூரியன்
ஒளி பரப்பும் வேளையாம்
பாலர் நாங்கள் எழுந்திடும்
நல்ல காலை வேளையாம்

கைகால்கள் கழுவி இறை
புகழைப் பாடும் காலையாம்
பள்ளிப் பாடம் படித்திட
இனிய நல்ல வேளையாம்



**அ. ஆஷா**
தரம் 5

## எங்கள் வீட்டுப் பூனையார்




எங்கள் வீட்டுப் பூனையார்
எடுத்துக் கொண்டார் தொப்பியை
தங்கை அதனைக் காணவே
கூவி அழைத்தாள் அண்ணனை.

அண்ணன் ஓடி வந்தனன்
அம்மா சத்தம் போட்டவே
வீட்டு நாய் மணியும்
விரைந்து குரைத்து வந்தது.

பூனை நாயைக் கண்டது
நிலத்திற் தொப்பியைப் போட்டது
பயத்தில் ஓடி மூலையில்
பதுங்கிப் படுத்துக் கொண்டது.

**அ. நிசான்**
தரம் 2

## MOON



Moon comes out
And sun go in
Here's soft blanket
To cuddle your chin

Moon go – in
And sun come out
Throw off the blanket
And bustle a bout



**M. Sankari**
Grade 4

# உழைப்பால் உயர்ந்தவன்

ஓர் ஊரில் பையன் ஒருவன் இருந்தான். அவனது பெற்றோர் வறியவர்கள். அவன் பிறருக்கு உதவி செய்து அவர்கள் உதவியால் கல்வி கற்றான். தகுந்த வயது வந்ததும் ஏதாவது தொழில் செய்து பெற்றோருக்கு உதவி செய்ய எண்ணினான்.

ஒருநாள் அவன் வீதியில் செல்லும்போது ஒரு கடதாசித்துண்டைக்கண்டான். அதனை எடுத்தான் ஊக்கம் உள்ளவனுக்கு சிறு கடதாசித்துண்டும் மூலதனமாக உதவும் என அதில் எழுதி இருந்தது. அப்பால் நடந்து சென்றான். வீதி ஓரத்தில் பழைய இரும்புத்துண்டுகள் சில கிடந்தன அவைகளை எடுத்துக் கொண்டு சென்றான். அவ்வழியே மனிதன் ஒருவன் வண்டியில் வந்தான் இரும்புத் துண்டுகளைத் தரும்படி கேட்டான். இளைஞன் அவைகளை அவனுக்குக் கொடுத்தான். அம்மனிதன் அவனுக்கு ஐம்பது ரூபாய் கொடுத்தான்.

அப்பணத்திற்கு பழங்களை வாங்கி விற்றான் கூடிய பணம் கிடைத்தது. பின்பு காய்கறிகளை வாங்கி விற்றான் அதிலும் இலாபம் அதிகரித்தது. பின்பு சிறிய கடையொன்றை வாடகைக்கு எடுத்து வியாபாரம் செய்தான். ஊக்கம் நேர்மை காரணமாக அவனது வியாபாரம் வளர்ந்தது. பின்பு கடையொன்றை விலைக்கு வாங்கினான். வியாபாரம் வளர்ந்தது அவன்பெரும் செல்வந்தனானான்.

அந்நகரில் பல கட்டிடங்களை விலைக்கு வாங்கி கைத்தொழிற்சாலைகளை நிறுவினான். விவசாயப் பண்ணைகளை நிறுவினான். தனது பணத்தின் ஒரு பகுதியை அறப்பணிகளுக்கு உதவினான். அவனது புகழ் நாடெங்கும் பரவியது.

முயற்சி வெற்றியைத் தரும்

ச. மருதா

தரம் 6

## உலக அதிசயங்கள்

தாஜ்மகால் - இந்தியா

சீனப்பெருஞ்சுவர் - சீனா

பிரமிட்டுக்கள் - எகிப்து


சுதந்திர சிலை - அமெரிக்கா


சாய்ந்த கோபுரம் - இத்தாலி (பைசா)

தொங்குதோட்டம் - பபிலோனியா


நாயக்கரா நீர் வீழ்ச்சி - வடஅமெரிக்கா







# தரம் 6-7 மாணவர்கள்.



# நன்றி உள்ள நாய்

பசுமலையில் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டில் நன்றியுள்ள நாயையும்,பால் தரும் பசுவையும் வளர்த்து வந்தார். அவருக்கு ஒரே மகள். மகளின் திருமணம் வெகு விமரிசையாக நடக்க வேண்டும் என்று எண்ணினார்.

திருமண நாளும் குறித்தாயிற்று. அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டன. ஊரில் உள்ள அனைத்து மக்களுக்கும் பத்திரிகை கொடுத்தார். திருமணம் சிறப்பாக முடிவடைந்தது.

எல்லோரையும் அழைத்து விருந்து உபசரிக்க வேண்டும் ஆதலால் புலவர் சமயற் கட்டுக்குள் அடிக்கடி சென்று வந்தார். சமையற் கட்டு பந்தலின் மேல் புறத்தில் கருடன் காலில் நல்ல பாம்பு ஒன்று சிக்கியிருந்தது. அதனைக் கவனிக்கவில்லை புலவர்.

அதனைப் பார்த்த நாய், பாம்பு விஷம் கக்கியிருக்குமோ என அஞ்சி ஆயிரக்கணக்கானோர் மாண்டுபோவதைவிட நான் ஒருவன் சாவதே மேல் என்று எண்ணியது. பாயாசத்தை நாக்கால் நக்கியது. அதனைப்பார்த்த புலவர் நாயை அடித்துத் துரத்திவிட்டார். என்னதான் நாயை குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அது பழைய நிலைக்குத் தான் செல்லும். என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் நம்ம நாயும் திகழ்கிறதே சே! என வருந்தினார். அதற்குப் பிறகு வேறு பாயாசம் செய்து கல்யாணச் சாப்பாட்டில் போட்டார்.

அன்று இரவு அந்த நாய் வீட்டிற்கு வந்தது. மாட்டுக் கொட்டகையில் படுத்துக்கொண்டது. கொல்லைப்புறத்தில் புலவர் வந்தார். அப்போது நாயும் பசுவும் பேசிக்கொண்டன. பசு கேட்டது "நம் முதலாளி மிகவும் நல்லவர் நம்மை எப்படிக் கவனித்து வளர்க்கிறார்? அவர் மகள் கல்யாணச் சாப்பாட்டில் வாய் வைத்து இப்படிப் பாயபசத்தை வீணடித்துவிட்டாயே'' என்றது. அதற்கு நாய் "சமையற் கட்டின் மேல் கருடன் காலில் பாம்பு ஒன்று இருந்தது. பாம்புவிஷத்தைக் கக்கியிருக்கலாம் அதற்காகத்தான் இப்படிச் செய்தேன்" என்றது.

புலவர் மனம் நெகிழ்ந்து போனார். நாம் தவறு செய்துவிட்டோமோ என வருந்தினார். நாயைக் கூப்பிட்டு பாலும் பழமும் அளித்தார். திருப்தியாய் நாய் சாப்பிட்டது.

**பா. பிரமிளா**
தரம். 6

மனிதனுக்கு எத்தனை பொருள்களின் மீது பற்று ஏற்படுகிறதோ அத்தனை அழுகைக்கு முளை அடித்தாகிவிட்டது என்றுதான் அர்□த்தம். எந்தப் பொருளாயினும் என்றோ ஒரு நாள் அது நம்மை விட வேண்டும்; அல்லது நாம் அதை விடவேண்டியிருக்கும். பிரிவின் போது துக்கம் ஏற்படத்தான் ஏற்படும். ஒரு பொருள் மீது பிரியம் உண்டு என்றால் அதைத் தொடர்ந்து அந்தப் பொருளை விட்டுப் பிரிவது இயல்பே. பிரிவின்போது துயரம் ஏற்படாமல் செய்துகொள்ள ஒரு வழி உண்டு, அதாவது, மனம் ஒப்பிப் பொருள் மீது கொண்ட பற்றிலிருந்து பிரிந்துவிட வேண்டும். இதற்குத்தான் வைராக்கியம் என்று பெயர்.

மூதுரை

# உழைப்பு ஒருபிடிச் சாம்பலான போது

**உ**லகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானி சேர் ஐஸக் நியூட்டன் ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்திற்கும் அதிகமாக உழைத்துப் பணிபுரிவது வழக்கம் ஒரு தடவை ஐஸக் நியூட்டன் தமது நண்பர்களுக்காக ஒரு விருந்தை ஏற்பாடு செய்திருந்தார். நண்பர்களுக்கு விருந்துணவு பாரிமாறிக் கொண்டிருந்த போது அவர்களுக்கு திராட்சை ரசம் பரிமாற வேண்டியிருந்தது. வேலையாள் திராட்சை ரசத்தை சமையலறையிலிருந்து உரிய காலத்தில் கொண்டு வந்து சேர்க்கவில்லை. தாமே சென்று திராட்சை ரசம் கொண்டுவரும் நோகத்தில் ஐஸக் நியூட்டன் சமையல் அறையை நோக்கி நடந்தார்.

போகும் வழியில் அவர் சிந்தனையில் பளிச்சென்று ஓர் அறிவியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறை உதயமாயிற்று. நியூட்டன் நண்பர்களை மறந்தார், அவர்களுக்கு அளித்துக் கொண்டிருந்த விருந்தை மறந்தார், திராட்சை ரசத்தையும் மறந்துவிட்டார். நேரே தம்முடைய ஆராய்ச்சி சாலைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டு ஆராய்ச்சியில் மூழ்கி விட்டார்.

சேர் ஐஸக் நியூட்டனின் சலிப்பற்ற உழைப்பாற்றலை உணர்த்தும் மற்றொரு நிகழ்ச்சி உண்டு.

ஐஸக் நியூட்டன் ஏறத்தாழ இருபதாண்டு காலமாகத் தாம் செய்த ஆராய்ச்சிகள் தொடர்பான முக்கிய குறிப்புகளை ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து வைத்திருந்தார்.

ஒரு நாள் இரவு நியூட்டன் தமது சோதனைச் சாலையில் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார். வெளிச்சத்துக்காக ஒருமெழுகுவர்த்தியைக் கொளுத்தியவர், மெழுகுவர்த்தியை தாம் எழுதி வைத்திருந்த ஆராய்ச்சிக் குறிப்பு நோட்டுப் புத்தகத்தின் மீது வைத்துவிட்டார்.

தீவிரமான ஆராய்ச்சியில் மூழ்கியவர் மெழுகுவர்த்தியையும், ஆராய்ச்சிப் புத்தகத்தையும் அறவே மறந்துவிட்டார். மெழுகுவர்த்தி முற்றிலுமாக ஏரிந்து, அதன் தீ குறிப்புப் புத்தகத்தில் பற்றி விட்டதை நியூட்டன் பார்க்கவே இல்லை. அவருடைய முழுக்கவனத்தையும் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் ஆராய்ச்சிக் குறிப்பு நோட்டுப் புத்தகம் தீக்கு இரையாகிச் சாம்பலாகிவிட்டது.

நியூட்டனின் இருபது ஆண்டுக்கால கடின உழைப்பு கண் இமைக்கும் நேரத்தில் அழிந்து விட்டது. அரும்பாடுபட்டு பல்லாண்டுகாலமாக உருவாக்கிய ஆராய்ச்சிக் குறிப்புகள் அழிந்துபோய் விட்டதால் ஐஸக் நியூட்டன் நிலைகுலைந்து விடுவார் என்று மற்றவர்கள் நினைத்தார்கள்.

ஐஸக் நியூட்டனோ சற்றும் மனத்தடுமாற்றம் அடையவில்லை. தம்முடைய இருபதாண்டு உழைப்பு ஒரு பிடி சாம்பலாகிவிட்ட காட்சியைச் சற்று நேரம் கண் இமைக்காமல் பார்த்தார்.

பிறகு "ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை சில ஆண்டுகள் மறுபடியும் பாடுபட்டேனாயின் இழந்த குறிப்புகளை மீண்டும் தொகுத்து எழுதி விடுவேன்" என்று சற்றும் பதற்றமில்லாமல் கூறினார்.

ச. சாதனா
தரம் 9

## தரம் 8~9 மாணவர்கள்.



# THE IMPORTANCE OF ENGLISH LANGUAGE

The English Language is an international language. Today in countries like England the U.S.A, Canada, Australia and in several parts of Africa, it is the first language. In many common wealth countries like Sri Lanka, India and Malaysia it is a second language. It is an acceptable fact that English is a very use full foreign language to widen the knowledge and to enrich our lives in many ways.

In a country with many nationalities a common language like English will serve as and deal like language. Though most of the national languages are rich and ancient, they do not posses even some of the basic books we need to up-date our skills and knowledge, most of the books especially in science are in the English language.

Even the intelligent students who wish to specialise in a particular field are unable to do so because of poor knowledge in English they have even for purpose of travel trade, commerce and diplomacy, a sound knowledge in English a need.

However in Sri Lanka everyone now realizes that a know ledge of good English holds wider opportunities. The private sectary, Banks and the foreign employment market give preference to those with a know ledge of English hence, English anywhere, anytime and to anyone holds the key to know ledge so, it is an acceptable truth that chances of getting a job for one with a basic knowledge of English are certainly greater not only in our own land but in any part of the world.

If there is a language that a rich, universal and helps every one is some way or other it is certainly English.

"Trust in God and do the right" and "Let all your thoughts be hobble thoughts"

"If a man reaches the heart of his own religion he has reached the heart of the others too"

By. T. Piyamala
Grade. 8 'B'

# COMPUTER

The electronic computer were produced in 1940's since then break a series of radical break through in electronics has occurred, with each break through the computer's based upon the older from of electronic have been replaced by a new generation of computer. These generation are class find as follows; first generation 1940 second generation 1959 – 1965 third generation 1965 – 1970 and the of computer is a follows.

1. Analog computer
2. Digital computer
3. Hybrid computer

Analog computer is one, which measures values of continuously current variable physical quantities from the strengths of electric currents their uses normally, Tricked to engineering functions such as the control of furnace temperatures.

Digital computer is one, which perform arithmetical and logical functions and have a virtual monopoly of commercial applications Digital means of Digital or numbers. A digital machine is one which works by counting and. So a digital computer is one, which uses information including letters and other non-numeric symbols. In a coder from represented by two state electronic devices.

Most computer are digital and it is used to associate the term "Computer" specifically with digital computer.

**HYBRID COMPUTER**

The Hybrid computer is a combination of analogue and digital computer. This is much used is ships and aircrafts to solve navigational problems.

Computer are depending on their computing powers though are as follows


1. Micro computer
2. Mini computer
3. Main computer

By. Ahilagini
Grade. 8 'B'

# பரிசளிப்பு விழா




மாணவர்களின்
கலை
நிகழ்ச்சியின்
போது




பிரதம விருந்தினர்
திரு. அ. சண்முகதாஸ்
அவர்கள் மேடையில்
பீடாதிபதி
உயர் பட்டப்படிப்பகள் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்




பிரதம விருந்தினர் திரு. P. விக்கினேஸ்வரன் அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்- யாழ்வலயம்)
உடன் முன்னாள் அதிபர்களான அதிபர் திரு. க. லோகதாசன் அவர்கள்
திரு.மு.திருஞானசம்பந்தம்பிள்ளை அவர்கள்.

# STAMP COLLECTING

There are many varieties of leisure time activities. Some are interesting and some are educative stamp collecting is both interesting and educative. It is a very popular hobby among all classes of people.

We collect cancelled stamps and put them in an album a complete album contains both foreign and local stamps. Stamps differ in size shape and color they carry a picture, which marks the occasion of issue and a short caption explaining it. Stamps look lovely and they dorm our hearts. Even the dullest one enjoys going through a stamp album.

Every stamp has a story to tell we can collect a lot of information, about the world in general from them memorial stamps help us to know the names of great men heroes or inventors some stamps relict rare fauna and flora of their countries still other portrayals beauty his topical monuments or scenic wonders stamps are clever tutors silently they feed us with variety of knowledge we learn more about the world that is far and near.

By. K. Salini
Grade.9



# மாணவர் மன்றம்

யாழ்/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் மாணவர் மன்ற அறிக்கையினை இப்பாடசாலை மலரில் வெளியிடுவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம்மன்றம் பாடசாலையின் ஆரம்பகாலந்தொட்டே இயங்கிவருவதும் ஏனைய எல்லா மன்றங்களுக்கும் தாய்ச் சங்கமாகவும் விளங்கி வருகின்றது.

இம்மன்றத்தின் தலையாய நோக்கம் எமது பாடசாலை மாணவரிடையே கலை ஆர்வத்தையும், தலைமைப்பண்பையும், ஒழுக்கத்தோடு இணைந்த கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பதாகும்.

ஏனைய மன்றங்களின் உதவியுடன் இருவாரங்களுக்கு ஒருமுறை வெள்ளிக் கிழமைகளில் பாடசாலையின் பிரதான கலைக் கூடத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். இவற்றில் மாணவர்களின் பேச்சுக்கலை, இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், நடன நிகழ்வுகள் போன்றவை மேடையேற்றப்படுகின்றன. இந் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருவதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

எமது பாடசாலை ஒரு இடைநிலைப் பாடசாலையாக இருப்பதனால் மனித, பௌதீக வளங்கள் வரையறைக்குட்பட்டதாகவே அமைந்துள்ளது. நாம் இவற்றுக்குள்ளேயிருந்து கொண்டே செயற்பட வேண்டியுள்ளது. இவை எமது முன்னெடுப்புக்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது. எனினும் அதிபர் ஆசிரியர்களின் வழிகாட்டல்களால் இயன்றளவு முன்னேற்றத்தை நோக்கி நடைபோடுகின்றோம்.

மன்றம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை உரிய முறையில் இயன்றளவு நிறைவு செய்து வருகின்றது. எதிர்காலத்தில் இம்மாணவர் மன்றம் மேலும் சிறப்படைந்து உயர்ந்து செழிக்க இறைவனை வேண்டி அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

**செயலாளர்.**

## நிர்வாகசபை 2002

**காப்பாளர் :-**

திரு. சு. சண்முககுமார்.
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள் :-**

திரு. சி. கணேசமூர்த்தி
திரு. பா. பாலமுரளி

**தலைவர் :-**

செல்வி. ச. சாதனா

**உப தலைவர் :-**

செல்வன். ந. பிரபாகர்

**செயலாளர் :-**

செல்வி. செ. சரண்யா

**உப செயலாளர் :-**

செல்வன். ப. முகுந்தன்

**பொருளாளர் :-**

செல்வி. ந. சர்மினா

# மாணவர் மன்றம் - ௨00௨




**இருப்பவர்.→**

திரு. பா. பாலமுரளி (), திரு. த. சொக்கலிங்கம் (உப அதிபர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்), திரு. சி. கணேசமூர்த்தி (பொறுப்பாசிரியர்),

**நிற்பவர்கள்.→**

செல்வன். ப. முகுந்தன் (உப செயலாளர்), செல்வன். ந. பிரபாகர் (உப தலைவர்), செல்வி. ச. சாதனா (தலைவர்) செல்வி. செ. சரண்யா (செயலாளர்), செல்வி. ந. சர்மினா (பொருளாளர்),

# தமிழ் மன்றம் - ௨00௨



செல்வி. வ. அகிலாஜினி (செயலாளர்), திரு. சி. கணேசமூர்த்தி (பொறுப்பாசிரியர்), திரு. த. சொக்கலிங்கம் (உபஅதிபர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்), திரு. பா. பாலமுரளி (பொறுப்பாசிரியர்), செல்வி. ச. சாதனா (தலைவர்), செல்வி. ந. சுரேக்கா(பொருளாளர்)

# தமிழ் மன்றம்

யாழ்/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் தமிழ் மன்ற அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதற்கு ஒரு நீண்டகால வரலாறு உண்டு.

இந்த மன்றத்தின் அடிப்படை நோக்கம் தமிழ் மொழியில் நல்ல பேச்சாற்றலையும், எழுத்தாற்றல்களையும், நடிப்பாற்றலையும் ஒருங்கிணைத்து வளர்ப்பதாகும். அத்தோடு இலக்கிய அறிவு, கட்டுரை, கவிதை, உரை நடை, பேச்சு, எழுத்தாக்கம் போன்றவற்றில் ஒரளவுக்காயினும் எல்லா மாணவர்களையும் அடிப்படை ஆற்றல்களைக் கொண்டவர்களாக உருவாக்கப்படுதலாகும்.

ஆண்டு தோறும் தமிழ்த்தின விழாவை நடாத்தி பேச்சுப்போட்டி, எழுத்தறிவு, கவிதை, நாடகம் போன்றவற்றில் திறமையானவர் களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. எமது பாடசாலை மாணவர்கள் கோட்ட, வலயப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர், சான்றிதழ்களும் பெற்றுள்ளனர்.

எமது மன்றம் சிறப்பாகச் செயற்பட ஒத்துழைப்பு வழங்கிவரும் அதிபர், ஆசிரியர்கள் நன்றிக்குரியவர்கள் இவற்றைவிட எமது தமிழ்த்தின விழாவினை ஆண்டு தோறும் நடாத்தி வர உதவும் அன்பு உள்ளங்களுக்கும் நாம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

**செயலாளர்.**

## நிர்வாகசபை 2002

**காப்பாளர் :-**

திரு. சு. சண்முககுமார்.
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள் :-**

திரு. சி. கணேசமூர்த்தி
திரு. பா. பாலமுரளி

**தலைவர் :-**

செல்வி. ச. சாதனா

**செயலாளர் :-**

செல்வி. வ. அகிலாயினி

**பொருளாளர் :-**

செல்வி. ந. சுரேக்கா

# விஞ்ஞான, கணித மன்றம்.

**நிர்வாகசபை 2002**

**காப்பாளர் :-**

திரு. சு. சண்முககுமார்.
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள்:-**

திருமதி. ம. அருணாசலம்

திரு. சி. செந்தில்குமரன்

**தலைவர்:-**

செல்வன். ந. பிரபாகர்

**செயலாளர் :-**

செல்வி. ப. பிரபாஜினி

**பொருளாளர் :-**

செல்வி. தே. பியாமளா

எமது மன்றமானது மாதத்திற்கொரு முறை ஒன்றுகூடலை கூடி வருகின்றது. மாணவர்களின் விஞ்ஞான, கணித அறஜிவில் மேலும் செழுமைபெற இம் மன்றம் பணியாற்றி வருகின்றது.

எமது மன்றத்தை உருவாக்கியதன் நோக்கம் மாணவர்களின் விஞ்ஞான, கணித, தொழில்நுட்ப, கணணி அடிப்படை அறிவை வளர்த்தெடுப்பதாகும். ஒவ்வொரு மாணவரும் ஆர்வத்துடன் பங்குபற்றும் நிகழ்ச்சியாக வினாடி வினாப்போட்டி, கணித, விஞ்ஞான உபகரணங் களைஆக்கும் போட்டி, கணித, விஞ்ஞான உபகரணங்களை எல்லா மாணவர்களும் கண்டு களிப்பதற்கு ஒழுங்கமைத்துக் கொடுக்கின்றது. பேச்சு, சம்பாஷனை என்பனவும் இடம் பெறுகின்றது.

எமது மன்றம் ஒவ்வொரு வருடமும் விஞ்ஞான, கணித தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றது. வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞான, கணணி யுகத்தில் எமது மன்றம் வளர்ச்சியடைய இறைவனை வேண்டுகின்றோம்.


**செயலாளர்**

# கணித விஞ்ஞான மன்றம் - 2002



செல்வி. ப. பிரபாஜினி (செயலாளர்), செல்வின். ந. பிரபாகர் (தலைவர்),
திரு. த. சொக்கலிங்கம் (உபஅதிபர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்),
திரு. சி. செந்தில்க்குமரன் (பெறுப்பாசிரியர்), திருமதி. ம. அருணாசலம் (பொறுப்பாசிரியர்),
செல்வி. தே. பியாமளா (பொருளாளர்).

# கவின் கலை மன்றம் - 2002



திருமதி. ப. சந.தானலக்சுமி (பொறுப்பாசிரியர்), செல்வன். ந. பிரபாகர் (தலைவர்),
திரு. த. சொக்கலிங்கம் (உபஅதபர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்), செல்வி. இ. தியாழினி (செயலாளர்),
செல்வி. செ. சரண்யா (பொருளாளர்), திருமதி. சு. அனுஷா (பொறுப்பாசிரியர்)

# கவின் கலை மன்றம்

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் கவின் கலைமன்ற அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆரம்ப காலம் தொட்டு கவின் கலைமன்றம் இப்பாடசாலையில் இருந்து வந்துள்ளது. அண்மைக்காலத்தில் சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய மூன்று துறைகளும் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றது. மாணவர்கள் மூன்றுதுறைகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு தனது ஆற்றல்களையும், திறமைகளையும், கலைவிழா, பரிசளிப்பு விழா, தமிழ்த்தின விழா, சித்திரப்போட்டிகள் போன்றவற்றை வெளிப் படுத்துவதற்கு கவின்கலைமன்றம் துணை புரிகின்றது.

மேலும் கோட்டமட்ட, வலய மட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு இம் மன்றங்கள் பெரிதும் துணைபுரிகின்றது.

எதிர்காலத்தில் மாணவர்கள் கவின் கலைகளைப் பயின்று சிறப்புற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செயலாளர்.**

### நிர்வாகசபை 2002

**காப்பாளர் :-**

திரு. சு. சண்முககுமார்.
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள்:-**

திருமதி. ப. சந்தானலக்ஷ்மி
திருமதி. சு. அனுஷா

**தலைவர் :-**

செல்வன். ந. பிரபாகரன்

**செயலாளர் :-**
செல்வி. இ. தியாழினி

**பொருளாளர் :-**
செல்வி. செ. சரண்யா

# ENGLISH UNION

**Committee 2002**

**Parton**:

Mr. S. Shanmugakumar (Principal)

**Teacher–In–Charge**:

Mr.P. Majurathan

**President**:

Miss. N. Sarmina

**Secretary**:

Miss. K. Salini

**Treasurer**:

Mas. P. Mukunthan

**OBJECTIVES**:

For the past several years, our English union has been well organized and executing its programmes in complete satisfaction as has been done by other schools who are engaged in computer programmes. The main objectives are to organize English debates, school cultural programmers in order to encourage the students fully to participate in these activities. This will facilitate in giving employment opportunities.

**ACHIEVEMENTS** :

It is significant to mention here that our students have been actively participating in English competitions and awarded pries held under school level as well as zonal level. Even though we lack of the basic facilities, yet our school have participated along with the city schools and won prizes for their magnificent performances, and hence, it has to be applauded. In the inter-schools competitions, our students have displayed their talents and it is also to be appreciated.

**CONFRONTING PROBLEMS** :

As far as this school is concerned, you will please believe that due to lack of facilities (resources), it is to be concluded that it is not an easy task to encourage the school students to compete with their counter-parts of other schools. It is apparently seen we lack the financial resources to purchase Drama & Theatre uniforms, adornments etc. to conduct platform competitions and so, our schools students are unable to compete with counterparts. This is deplorable state of affairs to mention here, that we do not have financial assistance even in small measure, as others are in a better footing.

**OUR FUTURE SCHEMES (PLANS)**:

The English union should have very close and cordial and mutual relationship with

counter-parts who have the computer facilities.

(1) To give opportunities to students who are uninterested to motivate them in order to exhibit their talents.

(2) An expansion programmed to be envisaged in order to promote, develop English dramas & plays, Debating competitions.

(3) To conduct dramas in platforms on order to propagate their educational culture;

(4) And such other activities as to conduct cultural Historical, religious discourses.

In this context, may I please be privileged to say few words about English Education. The fundamental side of education is the training of boys and girls to lofty deals of character, rectitude of judgment, perfection in word, heartfelt devotion to god loyalty to the state.

In conclusion, it is obligatory on my part to offer my deep dept of gratitude, on behalf of the English union, to our school principal, Vice principal, Staff members, Well wishers for their unstinted support, guidance, and assistance renders to carrying out this event successfully. May I also pray to Almighty God to bless us for the future Development of the English union.

**Thank you.**

**Secretary.**

# மாணவர் முதல்வர் சபை 2002

**காப்பாளர்:-**
திரு.எஸ். சண்முககுமார்.
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள் :-** திருமதி. ம. அருணாசலம்
திரு. த. சிவகுமாரன்

## மாணவ முதல்வர்கள்

செல்வி ச. சாதனா
(சிரேஷ்ட மாணவ முதல்வர்)

செல்வி செ. சரண்யா

செல்வி ந. சர்மினா

செல்வன் கு. மோகன்ராஜ்

செல்வன் சு. சுமணன்

செல்வன் ந. றஜீபன்

செல்வன் சு. சாள்ஸ்

செல்வி வ. அகிலாஜினி

செல்வி இ. தியாழினி

செல்வி ந. சுரேக்கா

செல்வி தே. பியாமளா

செல்வன் ந. பிரபாகர்

செல்வன் ப. முகுந்தன்

செல்வி சு. ஜமுனாநிதி

# இந்து மன்றம்

## நிர்வாகசபை 2002

**காப்பாளர் :-**

திரு. சு. சண்முககுமார்
(அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள் :-**

திரு. த. சிவகுமாரன்
செல்வி. ஐ. பகீரதி

**தலைவர் :-**

செல்வி. செ. சரண்யா

**செயலாளர் :-**

செல்வன். சு. சுமணன்

**பொருளாளர் :-**

செல்வி. இ. தியாழினி

இவ்வாண்டில் எமது பாடசாலை எழுபத்திரண்டாவது அகவையை நிறைவு செய்கிறது. இது பல்லாண்டு காலம் செய்த சேவை அளப்பரியது. அதன் அறிக்கையை இந்த மலரில் வெளியிடுவதில் எல்லோருமே மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்து மன்றத்தால் இந்து சமயத்தின் அடிப்படை தத்துவக் கோட்பாடுகளையும் ஆழ்ந்திருக்கும் சமய கிரியைகளைப்பற்றியும் மாணவர்களுக்கு விளக்கப்படுகிறது. இந்து சமயத்தின் விழாக்களை ஒழுங்காக நடத்தி வருகிறோம். அத்துடன் "சிவதீட்சை" பெறும் மாணவர்களுக்கான ஒழுங்குகள் செய்து வருகிறோம். முக்கியமாக நவராத்திரி "வாணிவிழா" வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதப்படுகிறது.

நால்வரின் குருபூசை தினங்களில் சுற்றாடல் பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றப்படுகின்றது. மாணவர்களை ஒன்றிணைத்து கூட்டுப் பிரார்த்தனை மூலம் தேவார திருவாசகங்களை இலகுவில் மனப்பாடம் செய்ய வழிவகுக்கிறோம்.

சைவபரிபாலன சபையால் நடாத்தப் பட்டுவரும் சைவசமயபாடப் பரீட்சையில் ஆண்டு தோறும் பல மாணவர்கள் திறமைச் சித்தியடைந்து வருகின்றார்கள்.

எமது மன்றத்தின் செயற்பாடுகளுக்கு எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பு மிக ஊக்கத் தையும் ஆக்கத்தையும் தந்துவருகின்றது.


**செயலாளர்.**

# ENGLISH UNION - 2002



Miss. K. Salini (Secretary), Miss. N. Sarmina (President), Mr. P. Majurathan (Teacher in charge), Mr. S. Shanmugakumar (Principal), Mr. T. Sokkalingam (Vice Principal), Mas. P. Mukunthan (Treasurer).

# இந்து மன்றம் -2002



செல்வி. இ. தியாழினி (பொருளாளர்), செல்வன். சு. சமணன் (செயலாளர்), திரு. த. சிவகுமாரன் (பொறுப்பாசிரியர்)திரு. சு. சண்முககுமார் (அதிபர்), செல்வி. செ. சரணயா (தலைவர்), செல்வி. ஐ. பகீரதி (பொறுப்பாசிரியர்).

# மாணவ முதல்வர் சபை - 2002



**இருப்பவர்கள்.→**

திரு. த. சிவகுமாரன் (பொறுப்பாசிரியர்), செல்வி. ந. சர்மினா, செல்வி. ச. சாதனா (சிரேஸ்ட மாணவ முதல்வர்), திரு. சு. சண்முககுமார் (அதிபர்), திரு. த. சொக்கலிங்கம் (உபஅதிபர்), செல்வி. வ. அகிலாஜினி, திருமதி. ம. அருணாசலம் (பொறுப்பாசிரியர்),

**நிற்பவர்கள்.→**

செல்வன். சு. சுமணன், செல.வன். ப. முகுந்தன், செல்வி. இ. தியாழினி, செல்வி. செ. சரண்யா, செல்வி. தே. பியாமளா, செல்வி. ந. சுரேக்கா, செல்வி. சு. ஜமுனாநிதி, செல்வன். ந. பிரபாகர், செல்வன். ந. றஜீவன்,

வரவின்மை.

செல்வன். கு. மோகன்ராஜ், செல்வன். சு. சாள்ஸ்.

# இலங்கை வானொலியில் எங்கள் பாடசாலை - 1998.



**யோக்கின் பெர்ணான்டோவுடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**









# யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### நிர்வாகசபை 2002

**தலைவர் :-**

திரு. எஸ் . சண்முககுமார்.
(அதிபர்)

**செயலாளர் :-**

திரு. எஸ். வைத்தியநாதன்

**பொருளாளர் :-**

திரு. எஸ். கணேசமூர்த்தி

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

திரு. கி. கிருஷ்ணானந்தன்
திரு. பா. பாலமுரளி
திருமதி. ச. பரமசிவம்
திருமதி. அ. சுரேஷ்
திரு. ஆ. காசிநாதர்
திரு. வ. இரத்தினதுரை
திரு. க. சிவாஜி
திரு. க. சிங்கராஜா
திருமதி. பு. சுந்தரமூர்த்தி
திருமதி. சி. பாலேந்திரா
திருமதி. வே. மாலினி
திரமதி. சு. தர்சினி
திருமதி. வசந்தி தியாகராசா
திருமதி. ம. பவளராணி
திரு. நடராசா

வித்தியாலயத்தின் செயற்பபடு நிலையில் காணப்படுகின்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கடந்த காலங்களிலும் பாடசாலையின் வளர்ச்சி கருதி கற்றல், கற்பித்தல், பௌதீக வளத்தேவைகள் யாவற்றையும் உடனுக்குடன் தன்னால் இயன்றளவில் நிறைவேற்றி வந்துள்ளது. அண்மைக்காலத்தில் எமது செயற்பாடு மிக அதிகளவில் காணப்படுகின்றது.

தரம் 1, தரம் 2, செயற்பாட்டறை வேலைகள் எமது சங்கமே ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றியது. மேலும் G.T.Z. நிறுவன உதவியுடன் மலசல கூடத்தொகுதி கட்டி முடிப்பதற்கும் திறனற்ற கூலியைப் பொறுப்பெடுத்து திறமையான முறையில் நிறைவேற்றியது.

RRAN நிறுவனத்தின் உதவியுடன் தளபாடங்கள், 70' * 20' மாடிக் கட்டிட அடித்தள வேலையையும் பொறுப்பேற்று பூர்த்தி செய்து எமது ஒத்துழைப்பையும் வழங்கி யுள்ளோம்.

மேலும் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, தமிழ்த்தின விழா, வாணி விழா, போன்ற விழாக்களிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும் நிர்வாகத்துடன் இணைந்து உழைத்து வருகின்றோம்.

இவ்வேளையில் "பரஞ்சோதி" மலரை இவ் வித்தியாலயம் வெளியிடுவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

**செயலாளர்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கல்வி அபிவிருத்தி நிதியம்

மேற்படி நிதியம் இலண்டன் வாழ் பழையமாணவர்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந் நிதியத்தில் குறித்த தொகைப் பணம் சுண்ணாகம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. இதன் வட்டிப் பணம் பாடசாலையின் கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும். இதற்கென நிர்வாக சபை அமைக்கப்பட்டு அந்நிர்வாக சபையின் தீர்மானத்திற்கமைய இந்நிதியத்தின் வட்டிப் பணம் பயன்படுத்தப்படும்.

## இவ்நிதியத்திற்கு நிதியுதவி வழங்கிய இலண்டன் வாழ் பழைய மாணவர்கள்

01. திரு.T. செல்வரத்தினம். (முருகையா) இணைப்பாளர் - இலண்டன்.
02. திரு.S. சுந்தரலிங்கம்.
03. திரு.M. தியாகராசமூர்த்தி.
04. திரு.A. இரகுநாதன்.
05. திரு.A. கமலநாதன்.
06. திரு.A. கோகுலநாதன்.
07. திரு.A. விமலநாதன்.
08. திரு.S. சிவஞானசித்தியார்.
09. திரு.S. சிவதாசன்.
10. திரு.S. சிவராசன்.
11. திரு.R. சிவலோகநாதன்.
12. திரு.R. பேரின்பநாயகம்.
13. திரு.P. நந்தபாலன்.
14. திரு.N. அருந்தவராஜா.
15. திருமதி. சரஸ்வதி ஜேசுதாசன்.
16. திருமதி. தேவி கஜேந்திரன்.
17. திருமதி. லீலா உருத்திரா.
18. திரு.மு. விவேகானந்தன். (நலன்விரும்பி,இணுவில்)
19. திரு.பொ. சுரேஸ்பாலன்.
20. திரு.பொ. குகநாதன்.

மேலும் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்ய விரும்புவோர் நிர்வாகசபையின் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

**நன்றி.**

**செயலாளர்.**

பரஞ்சோதி மலர் மேன் மேலும் சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்.

கண் கவர் டிசைன்களில்

திருமணப் பட்டுப்புடவைகள், கூறைவகைகள், காஞ்சிபுரம்,பட்டுச் சாறிகள், பட்டு வேட்டிகள், மற்றும் ஆண், பெண்களுக்கான றெடிமேட் ஆடைகள் சேட்டிங் சூட்டிங் வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-2985

பரஞ்சோதி மலர் சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்



## சோதி ஸ்ரோர்ஸ்,

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

*With the Best Complements from*



## ANKAVAN
## Studio & Video

Alady Junction,
Manipay,



பரஞ்சோதி மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்

குறைந்த கட்டணத்தில்

முகவர் தபாலகம்

தொலைபேசி

பக்ஸ்

போட்டோப்பிரதிகள்



சேவைகளை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

ஞானம்ஸ் கொமினிக்கேசன்ஸ்

021-2222224 021-2223885

162, ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



பரஞ்சோதி மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்

சுத்தி சுத்தி வந்திடச் செய்யும் !
கேட்டுக் கேட்டு வாங்கிட வைக்கும் !!
சாப்பிடச் சாப்பிட மீண்டும், மீண்டும், சாப்பிடச்சொல்லும் !!!

நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்..............
மிக்ஷர், பகோடா, காரப்பூந்தி,
ரேஸ்ரி, பொம்பே ரிப்பீஸ்,
ரைற்றானிக்(கார)வடை
இன்னும் பல சிற்றுண்டி உணவு
வகைகளைத் திறம்படத்தயாரித்துச்
சந்தைப்படுத்துவோர்

மல்லிகா மிக்ஷர்
தொழிலகம்
கூழாவடி,
ஆனைக்கோட்டை.

மல்லிகா

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிக்ஷர்
தயாரிப்பதில் இன்றைய முன்னோடிகளான
மல்லிகா மிக்ஷர் தொழிலகத்தினரால்
உரிய பதங் கொண்டு பக்குவமாக
சமைக்கப்பட்ட
அனைத்துச் சிற்றுண்டி
உணவுவகைகளும்
சங்கமிக்கும் சாம்ராஜ்ஜியம்

மல்லிகா மிக்ஷர்
மாளிகை
இல.149, மின்சாரநிலைய வீதி,
(பஸ் நிலையத்திற்கு
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

பரஞ்சோதி மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்



உள்நாட்டு, வெளிநாட்டு,
நேரடித் தொலைபேசித் தொடர்புகள்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள



# கவாஸ் தொலைத்தொடர்பு நிலையம்

# KAVAS COMMUNICATION CENTER









**உள்நாடு: 070-212211**

**021-2223110**

**வெளிநாடு: 0094-70212211**

**0094-212223110**

**பக்ஸ்: 0094-212223110**

**பக்ஸ், போட்டோ ஸ்ரற் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.**

**C.T.B. டிப்போ சந்தி,**
**பலாலி வீதி, கோண்டாவில்.**

# என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

# அண்ணா தயாரிப்புக்களே!

- அண்ணா கோப்பி
- குரக்கன் மா
- அண்ணா பற்பொடி
- ஆட்டா மா
- அண்ணா பத்தி
- வறுத்த அரிசி மா
- அண்ணா ரொபி வகை
- உழுந்து மா
- பச்சை அரிசி மா

மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா

# "ஜீவாகாரம்"

எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# அண்ணா தொழிலகம்

## இணுவில்.

தொலை பேசி:- 021-2223565

**கிளைகள்:-**

4, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021-2222380
021-2222199

பலாலி வீதி,
திருநெல்வேலி.

# நன்றி உரைத்தல்

இவ் "பரஞ்சோதி" மலர் சிறப்பாக அமைவதற்கு எமக்குப் பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றி கூறவேண்டியது எமது கடமை ஆகும். இந்த வகையில் இச் சஞ்சிகையின் வெளியீட்டுக்குத் தேவையான நிதியில் பெரும் பகுதியினை வழங்கிய அமரர் சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்களின் குடும்பத்தினர்களுக்கும், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கும் முதற்கண் எமது நன்றிகள்.

இம் மலர் சிறக்க ஆசிஉரைகளையும், வாழ்த்துச்செய்திகளையும் வழங்கிய பெரியோர்களுக்கும் தமது வேலைப்பளுவிற்கு மத்தியில் தரமான ஆக்கங்களை வழங்கி உதவிய கல்வி மான்களுக்கும், இச் சஞ்சிகை சிறப்புற பல பலவழிகளிலும் ஒத்துழைப்பும் ஆலோசனையும் வழங்கிய எமது பாடசாலை அதிபர், உபஅதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.


இச் சஞ்சிகைக்கு வேண்டிய பாடசாலை வரலாற்றினைத் தொகுப்பதற்கு உதவி புரிந்த பழைய மாணவர்கள், பெரியோர்களுக்கும் சஞ்சிகைக்கு வேண்டிய புகைப்படங்களை எடுத்து உதவிய "கோண்டாவில் குகன் போட்டோ" ஸ்தாபனத்தினர்க்கும், முகப்பு அட்டையை வடிவமைத்து, அச்சிட்டு உதவிய "Mouse Pvt Ltd" நிறுவனத்தினர்க்கும், இச் சஞ்சிகையினை அச்சிட்டு உதவிய கந்தர்மடம் "சூரியா" அச்சகத்தினர்க்கும், விளம்பரங்களினை வழங்கி உதவிய விளம்பர தாரர்களுக்கும், மற்றும் அன்பளிப்புக்களை வழங்கிய பெருந்தகைகளுக்கும், இம் மலர் சிறப்புற எம்முடன் தோழோடு தோழ்நின்று ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இச்சஞ்சிகை மிகவிரைவில் **இணையத் தளத்துடன்** இணைக்கப்பட வுள்ளது என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- இதழாசிரியர் -**



# நடந்தவற்றை நினைவில் வைத்துக்கொள்ள......



## தில்லையம்பதி கோண்டாவில்

## வடக்கு கோண்டாவில்.

# வீடியோ படப்பிடிப்பாளர்

# முத்தொளி




கொம்பியூட்டர் மூலம் வீடியோ அனிமேஷன் கிரஃபிக்ஸின்
தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இதுவரை கண்டிராத
நவீன சில யுத்திகளைப் புகுத்தி வீடியோப் படம் பிடித்திட
அதி நவீன வீடியோக் கமராக்கள், வீடியோ மிக்சர்கள், கொம்பியூட்டர் மூலம்
அனைத்தையும் இணைத்து CD மூலம்
மங்களகரமான வைபவங்களை உங்கள் விருப்பத்திற்கேற்ற
முறையில் வீடியோப் படம் பிடித்திட உங்கள் முத்தொளி

தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

கிளை: குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

## இதோ!

## யாழ்ப்பாணத்தில் ஓடுகளுக்குப் பதில் சிமெந்துக்கூரை ஓடுகள்.

"சிமெந்துக் கூரை ஓடுகள், முகட்டோடுகள்"
மற்றும்
இயந்திரங்கள் மூலம் தரமாகத் தயாரிக்கப்பட்ட
சிமெந்துக் கொங்கிறீட் கல்
வெவ்வேறு அளவுப் பிரமாணங்களில்
விற்பனைக்குண்டு

LOGES
INDUSTRIES
INUVIL

கூரை ஓட்டுத் தயாரிப்பில்
புதிய பரிணாமத்தை
அறிமுகப்படுத்தியிருக்கும்

லோகேஸ்

கூரை ஓட்டுத்தொழிற்சாலை

பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில்